




KALKI ஏப்ரல் 5, 1953 4 அணா


# நாள் முழுவதும்

காலை வேளையில்




# புத்துணர்ச்சி

பிற்பகலில்



# அளிக்க...

இரவில்





குளுமையான, நறுமணம் கொண்ட

## ஹிமாலயா புக்கே பௌடர்களை உபயோகியுங்கள்

இரண்டு சேர்த்தியான இனிமையான பௌடர்கள்



ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ணநிலைகளிலும் சருமத்தைப் பாதுகாக்கிறது.

இராஸ்மிக் லிமிடெட், லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை HBP.8-X30TM



# கல்கி தமிழிசை மலர்

## பொருளடக்கம்


மலர் 12
இதழ் 38

1953 ஏப்ரல் 19

விஜய ௵
சித்திரை 7உ



| | | |
|---|---|---|
| என்றும் உள தமிழிசைக்கு மன்றம் எழுந்தது காணீர்! | | ... 3 |
| விக்கலை வளைப்பவர் யார்? (கார்ட்டூன்) | ... | ... 5 |
| அகால அவசரக் கோலம் | ... | ... 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... 8 |
| கவர்னர் வாழ்த்து | ... | ... 16 |
| ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் (படம்) | ... | ... 17 |
| அண்ணாமலை மன்றம் (போட்டோ) | ... | ... 19 |
| இசை வளர்ச்சி | சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் | ... 19 |
| தமிழ்க்கலையின் இன்பம் | ஆர். கே. சண்முகம் செட்டியார் | ... 21 |
| நல்ல காலம் பிறக்கப் போகிறது! | டி. கே. சி. | ... 23 |
| உயிர் வாழ்கிறார்! | ரா. கி. | ... 27 |
| தமிழ் உயரும்! | யோகி சுத்தானந்த பாரதியார் | ... 29 |
| தமிழிசைக் கோயில் | பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா | ... 31 |
| பாரிலே இணையற்ற இலக்கியம் | ஸர் சி. பி. ராமசாமி ஐயர் | ... 33 |
| சேகர் என் குழந்தை | எஸ். வி. வி. | ... 35 |
| நோக்கம் என்ன? | ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் | ... 37 |
| என்றும் போற்றுவோம் | ம. பக்தவத்சலம் | ... 38 |
| ஒலி அமைப்பின் சிறப்பு | பி. கே. ராஜு | ... 40 |
| அதிசய நாடகம் (அரங்கமேடை) | ... | ... 43 |
| அதிர்ஷ்டக் குழந்தை | விஜயா | ... 46 |
| தமிழும் இசையும் | ... | ... 48 |
| வாழ்க்கை வீணையில் | எஸ். கிருஷ்ணன் | ... 51 |
| இன்னிசை எது? | ராஜாஜி | ... 54 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... 55 |
| செல்வச்சேரி கும்பாபிஷேகம் (போட்டோ) | ஸ்டு. கணேஷ் | ... 57 |
| லட்சியக் கனவு | சோமாஸ் | ... 58 |
| தமிழிசையும் பரமசிவனும் | ... | ... 65 |
| வளர்ந்ததும் வாடிப்போனதும் | ரகு | ... 67 |
| என்ன முடிவோம்? | ... | ... 70 |
| சத்தியமூர்த்தி பேசுகிறார் | ... | ... 71 |
| வட்ட மேஜை | ... | ... 73 |
| பெரிய முயற்சி | ... | ... 74 |
| அரிய நினைவு | விஜய் | ... 76 |



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஏப்ரல் 3 முதல்
...சென்னை...
பிராட்வே
காமதேனு
...லக்ஷ்மி...
மற்றும்
தென்னாடெங்கும்
சத்தியசோதனை
தமிழ்
ஸ்டுடியோ : ஏவிஎம்
வசனம் :
S.D. சுந்தரம்
தயாரிப்பு
குப்பி கர்னாடகா

கல்கி

மலர் 12 | இதழ் 36

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்.

# மதராஸ் நமதே!

தமிழ் நாட்டில் சில காலமாக ஓர் அசட்டுத்தனம் பிடித்துக் கொண்டு மக்கள் பலரை வாட்டுகிறது. அது மோனை போட்டுப் பேசும் வழக்கந்தான். மோனை போட்டுப் பேசுவது முக்கியம் என்று ஏற்படும்போது, பொருளும் உண்மையும் இரண்டாவது மூன்றாவது இடங்களுக்குப் போய் விடுகின்றன. மக்கள் உண்மையான கல்வியும் பண்பாடும் பெறும் போது மோனை போட்டுப் பேசுவது எவ்வளவு மட்டமான விஷயம் என்பதை அறிந்து கொள்வார்கள். அதில் அவ்வளவு கெட்டிக்காரத்தனமும் இல்லை, அழகும் இல்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள். அதுவரையில் மோனையில் மோகம் இருந்து கொண்டிருக்கும். ஏன்? மோனை உள்ள பேச்சுத்தான் உண்மை உடைய பேச்சு என்றுகூடக் கருதப்படலாம்.

இத்தகைய மோனை மோகம் நமது அயலில் உள்ள சகோதரர்களான ஆந்திரர்களைச் சில காலத்துக்கு முன்பு பிடித்துக் கொண்டது. அதோடு நியாயமற்ற பேராசையும் அவர்களைப் பற்றிக் கொண்டது. இவற்றிலிருந்து ''மதராஸ் மனதே!'' என்ற கோஷத்தைக் கிளப்பினார்கள். ''மதராஸ் மனதே'' என்னும் இரு சொற்களும் 'ம'வில் தொடங்குகின்றன. இப்படி மோனையோடு அமைந்த கோஷமானது ஆந்திர சகோதரர்களுக்கு ஒரு வெறியையே ஊட்டி விட்டது. அதுவே உண்மையென்றும், அதுவே உறுதியாகிவிடும் என்றும் எண்ணத் தொடங்கினார்கள். இறுதிக் கட்டத்தில் மோனை வெறியோடு எதுகை வெறியும் அவர்களைப் பற்றிக் கொண்டது.

''ஆந்திர ராஜ்யம் காவல! அரவவாடு சாவல!'' என்று ஆந்திர சகோதரர்கள் சிலர் கூச்சலிடத் தொடங்கினார்கள்.

அசட்டு மோனையும் அபத்த எதுகையும் வெற்றி பெறவில்லை. ''மதராஸ் மனதே'' என்று ஆகவில்லை. அதற்கு மாறாக, ''மதராஸ் நமதே'' என்று ஏற்பட்டு விட்டது. அரவவாடுக்கள் சாகவும் இல்லை. தமிழர்கள் உயிரோடுதான் இருக்கிறார்கள். உண்மை வெற்றி அடைந்து விட்டது; நியாயம் வெற்றி பெற்றது. சென்னை மாநகரம் தமிழர்களுடையதுதான் என்பது உறுதி பெற்று விட்டது. அதை இனி யாரும் அசைக்க முடியாது. பல ஆண்டுகளாக நடந்து வந்த விவாதமும் சந்தேகத்துக்கு இடமான குழப்ப நிலையும் இவ்விதம் நல்ல முறையில் தீர்ந்ததின் பொருட்டுத் தமிழ் மக்களுக்கு நம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

* * * *

உண்மையும் நியாயமும் முடிவில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை நம்மில் பலருக்கும் உண்டு. ஆனால் உடனடியாக வெற்றி பெறும் என்று சொல்ல முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் தூங்கிக் கொண்டிருந்தாலும் சரியான சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறினாலும் நியாயமும் உண்மையும் பின்னுக்கு ஒதுங்கிப்போகும். அநீதியும் பொய்யும் முந்திரிக் கொட்டைகளைப் போல் முன்னால் வந்து நிற்கும். அவற்றை விலக்கி நியாயத்தையும் உண்மையையும் நிலைநாட்டுவதற்குப் பின்னால் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும்; அதற்கு நீடித்த காலமும் பிடிக்கும்.

சென்னை நகரின் விஷயத்தில் உண்மையும் நியாயமும் உடனடியாக வெற்றி பெற்றதற்குக் காரணமாயிருந்தவர் ராஜாஜி என்பதைத் தமிழ்ப் பொதுமக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும் மனதிற்குள் அறிந்துதானிருக்கிறார்கள். காங்கிரஸ் விரோதிகளும், ராஜாஜியைச் சாதாரணமாக எதிர்ப்பவர்களுங்கூட இந்தக் கட்டத்தில் ராஜாஜி தமிழ் நாட்டுக்குச் செய்த தொண்டு ஒப்பற்றது, வேறு எவராலும் செய்ய முடியாதது என்பதை உணர்ந்திருக்கிறார்கள். ராஜாஜி ஒருவர் இச் சமயத்தில் உறுதியுடன் இருந்திராவிட்டால் ''பட்டணம் பறிபோயிருக்கும்'' என்று அறிந்திருக்கிறார்கள். இதை ஸ்ரீ ஈ. வே. ராமசாமியார் போன்ற சிலர் வெளியிட்டுச் சொல்லிப் பாராட்டுகிறார்கள். மற்றவர்கள் ''வெளிப்படையாக விளங்கும் விஷயத்தை எதற்காகச் சொல்ல வேண்டும்?'' என்றிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சொல்லுவதை யும் சொல்லாமலிருப்பதையும் விட ஆந்திர சகோ தரர்கள் ராஜாஜியின் பேரில் தங்கள் ஆத்திரத்தை யெல்லாம் செலுத்தித் தாக்குவதைக் கொண்டு அவர் தம்சமயம் தமிழ் மக்களுக்குச் செய்த சேவை எவ்வளவு மகத்தானது என்பதை நன்கு அறியலாம். ஸ்ரீ டி. பிரகாசம், தென்னட்டி விசுவ நாதன், லங்கா சுந்தரம் போன்றவர்கள் ஆந்திரர் களுக்குச் சென்னை நகரம் கிடைக்காமற் போன தற்கு ராஜாஜிதான் காரணம் என்று சொல் லித் துவேஷத் தீயை வளர்த்து வருகிறார்கள்.

இவ்விதம் நியாயத்துக்காகவும் தர்மத்துக்காக வும் தமிழர்களின் நியாயமான உரிமைக்காகவும் இறுதிவரையில் ராஜாஜி உறுதியுடன் போராடி வெற்றி பெற்ற மகத்தான நிகழ்ச்சி தமிழகத்தின் சரித்திரத்தில் என்றென்றைக்கும் பொறிக்கப் பட்டு விளங்கும். தமிழ் மக்களின் இதயத்தி லும் இந்தச் சம்பவம் என்றும் நிலைபெற்றிருக்கும். ராஜாஜி தமிழகத்துக்குச் செய்திருக்கும் தொண்டு களுக்குள்ளே இந்தக் கட்டத்தில் செய்த தொண்டு மகா மேரு மலையின் சிகரத்தைப் போன்றது என் பதில் ஐயமில்லை. இதைத் தமிழ் மக்கள் என் றென்றைக்கும் மறக்க மாட்டார்கள்.

இவ்வளவு மகத்தான தொண்டு புரிந்தவருக்குத் தமிழ் மக்களாகிய நாம் செய்யக்கூடிய கைம்மாறு என்ன! ராஜாஜிக்கு எந்த விதத்தில் நாம் நமது நன்றியைச் செலுத்த முடியும்!

அவருக்குச் சொந்த முறையில் நாம் எந்தவித மான பிரதி உபகாரத்தையும் செய்ய முடியாது. ஸ்ரீ டி. பிரகாசத்துக்கு ஆந்திர மக்கள் பல முறை பண முடிப்புகள் அளித்திருக்கிறார்கள். மறுபடி யும் இப்போது ஒரு லட்சம் ரூபாய் வசூலித்துத் தரப் போகிறார்களாம். இந்த மாதிரி பேர்க ராஜாஜியின் காதில் விழுந்தாலும் அவர் காதைப் பொத்திக் கொள்வார். சிலை வைத்தல், படம் திறத்தல் முதலிய காரியங்கள் அவருக்குச் சிறிதும் பிடிப்பதில்லை. நம்முடைய திருப்திக்காக நாம் செய்து கொள்ளலாமே தவிர, இந்த முறைகளி னால் ராஜாஜியைத் திருப்தி செய்ய முடியாது.

இச்சமயம் ராஜாஜி நமக்குச் செய்துள்ள இணை யற்ற பேருதவிக்கு ஒரு விதத்தில்தான் நாம் அவ ருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள முடியும். தமிழர்கள் தங்களுக்குள் சகோதரப் பான்மையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். அற்பமான குரோதங்களையும் மாற்சரியங்களையும் விட்டொழிக்க வேண்டும். சுய முயற்சி, பரஸ்பர உதவி, ஒழுக்கம், பண்பாடு ஆகிய குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியமானவை ஒழுக்கமும் பண்பாடும் ஆகும். ஒழுக்கமும் பண்பாடும் வளர் வதற்கு வழியை வள்ளுவரும் கம்பரும் காட்டி யிருக்கிறார்கள். தொன்று தொட்டுத் தமிழ் மக்கள் "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற உறுதியுடன் இருந்தார்கள். தமிழரின் பண்பாடு உலகிலேயே புராதனமானது; இணையற்றது. ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் போற்றி வளர்த்தோமானால் அறிவுத் திறன், தொழில் வளர்ச்சி, செல்வப் பெருக்கம் எல்லாம் தொடர்ந்து வரும் என்பதில் ஐயமில்லை.

வள்ளுவரும் கம்பரும் காட்டிய வழியைப் பின் பற்றி, சகோதரப் பான்மையில் நிலைத்து நின்று, ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொண்டு வருவதே ராஜாஜிக்குத் தமிழ் மக்கள் செலுத்தக் கூடிய நன்றியாகும். இதன் மூலம் தமிழரின் சமூதாயம் எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைந்து உலகிலேயே ஒப்பற்ற சமூதாயம் ஆகக்கூடும்.

## போலி அனுமார் !



# துவேஷ விஷத்தைத் தாங்கினார்!

ஒரு தனி மனிதர் சாக வேண்டும் என்று கூச்சலிடும் அளவுக்கு ஆந்திர சகோதரர்கள் சிலர் வெறி பிடித்துப் போயிருந்தார்கள். ஓர் ஈ அல்லது எறும்புக்குக் கூடத் தீங்கு நினையாத ராஜாஜியைப் பற்றித்தான் அவ்விதம் கூச்சலிட்டார்கள். இதற்கெல்லாம் ஆந்திரப் பிரிவினையை ராஜாஜி எதிர்க்கிறார் என்ற பொய்ப் பிரசாரம் ஒரு காரணம் ஆகும். இந்தப் பொய்யானது சுமார் பதினைந்து வருஷங்களுக்கு மேலாகவே சுற்றுப் பிரயாணம் செய்து வந்தது. சென்ற முறை 1937—39ல் ராஜாஜி முதன் மந்திரியாயிருந்தபோது ஆந்திர மாகாணப் பிரிவினையைப் பற்றிய தீர்மானம் சென்னைச் சட்டசபையில் நிறைவேறியது. ராஜாஜி அதைப் பகிரங்கமாகச் சென்னைச் சட்டசபையில் ஆதரித்து விட்டு இரகசியமாக பிரிட்டிஷ் சர்க்காருக்குப் "பிரிவினை வேண்டாம்" என்று எழுதி விட்டதாக ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டார்கள். இந்த வதந்தியைப் பரப்புவதற்கு ஆசிரியர் ராதாகிருஷ்ணன் போன்ற தத்துவஞானியும் உடந்தையாக இருந்தார். ஸ்ரீ டி. பிரகாசம் போன்றவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லி வந்தார்கள். ராஜாஜி இது பொய் என்று சொல்லி, இம்மாதிரி சாதாரண அறிவுள்ள ஒருவர் செய்திருக்க முடியுமா என்று எடுத்துக் காட்டினார். அப்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இந்தியா மந்திரி பதவி வகித்தவரும் அம்மாதிரி கடிதம் தமக்கு வரவில்லை என்று சொன்னார். பிறகு, "நீங்கள் எழுதவில்லை. கவர்னர் எர்ஸ்கினைக் கொண்டு எழுதச் சொன்னீர்கள்" என்றார்கள். கவர்னர் எர்ஸ்கினும் "நான் அம்மாதிரி எழுதவே இல்லை" என்று சொன்னார். அப்படியும் ஸ்ரீ டி. பிரகாசம் கோஷ்டியார் மேற்படி பொய்யை விடாமல் சொல்லி வந்தார்கள்.

இப்படி ராஜாஜியின் பேரில் வளர்ந்து வந்த துவேஷத்தை இம் முறை ராஜாஜி சென்னை முதன் மந்திரியான பிறகு கொழுந்துவிட்டு எரியும்படி ஆந்திரத் தலைவர்கள் செய்யலானார்கள். சென்ற பொதுத் தேர்தலில் ஆந்திர ஜில்லாக்களில் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு நல்ல தோல்வி ஏற்பட்டது. ஸ்ரீ டி. பிரகாசத்தின் கோஷ்டியும் அதே கதியைத்தான் அடைந்தது. இரு கோஷ்டிகளும் சேர்ந்து யோசித்துத் தாங்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்கு ஆந்திரப் பிரிவினையைச் சாதனமாகக் கொள்ளத் தீர்மானித்தார்கள். அதே சமயத்தில் ஆந்திர ராஜ்யம் இப்போது பிரிந்துவிடுவதை அவர்கள் விரும்பவில்லை. தற்சமயம் ஆந்திர ராஜ்யம் பிரிந்தால் கம்யூனிஸ்டுகளிடம் அரசாங்கம் போய் விடுமோ என்ற பீதி அவர்கள் மனதிற்குள் இருந்தது. ஆகையால், கிளர்ச்சிக்கு மட்டும் உபயோகித்துக் கொண்டு, காரியம் நடக்காமல் தடை செய்வதற்காகச் சென்னை நகரின்மீது ஆந்திரர் பாத்தியதையை வற்புறுத்தினார்கள்.

இந்த நேர்மையற்ற காரியத்தை ராஜாஜி விரும்பவில்லை. "ஆந்திர ராஜ்யம் வேண்டும் என்று உண்மையில் நீங்கள் கோரினால் சென்னை மீது உரிமை கொண்டாடுவதை நிறுத்திவிடுங்கள்! உடனே இராஜ்யம் கிடைத்துவிடும்" என்று சென்னையில் சென்ற ஆண்டு ஆகஸ்டில் நடந்த தமிழ் விழாவில் கூறினார். இந்த வைத்துக் கொண்டு ஆந்திரத் தலைவர்கள் ராஜாஜியின் பேரில் ஆந்திர மக்களின் துவேஷத்தை வளர்க்க மேலும் பிரயத்தனப் பட்டார்கள்.

ராஜாஜி எந்தச் சமயத்திலும் 'பாபுலாரிடி' வேண்டும் என்பதற்காகவோ, வேறு எந்தக் காரணத்திற்காகவோ உண்மையை மறைத்துப் பேசுவது கிடையாது. அதனாலேதான் அவருடைய அரசியல் வாழ்க்கையில் அவ்வளவு சங்கடங்களுக்கு உள்ளாக நேர்ந்தது. காந்திஜி, நேருஜி, சர்தார்ஜி இவர்களின் கருத்துக்கு மாறாகத் தமக்கு உண்மையென்று பட்டதை எடுத்துச் சொல்லிப் பொது ஜனங்களிடையே செல்வாக்கை இழக்கத் துணிந்தவர், ஸ்ரீ பிரகாசம், சஞ்சீவி ரெட்டியின் பிரசாரத்துக்குப் பயந்து இருந்து விடுவாரா? உண்மையையும் நியாயத்தையும் மறைத்து வைத்துப் பெறும் 'பாபுலாரிடி' எதற்காக! எனவே, காரைக்குடியில் மறுபடியும் "சென்னை நகரை ஆந்திரர்கள் விட்டுவிட வேண்டியதுதான்" என்று வற்புறுத்திக் கூறினார்.


ஆந்திரத் தலைவர்கள் அப்படியும் சென்னையைக் கைவிடாமல் துவேஷக் கிளர்ச்சியை மட்டும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கத் திட்டம் போட்டிருந்தார்கள். இச்சமயத்தில் பொட்டி ஸ்ரீராமுலு குறுக்கிட்டுப் பிராணத்தியாகம் செய்தார். அந்தச் சந்தர்ப்பத்தைக் குழப்பக்காரர்கள் தங்கள் குழப்பத் தொண்டுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். விஜயவாடா முதலிய இடங்கள் அமர்க்களங்கள் ஆயின. இந்த அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடந்தபோது மறுபடியும் ராஜாஜியின் மீது துவேஷத்தை வளர்ப்பதற்கு மேலும் முயற்சிகள் செய்யப்பட்டன. அந்த முயற்சிகள் வெற்றியும் பெற்றன.

இந்திய சர்க்கார் இச்சமயம் அவசர நடவடிக்கை எடுக்க முன் வந்தார்கள். 'விஜயவாடா கலவரங்களினால் நேரு பீதி அடைந்து விட்டார்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு அவசர அறிக்கை பிறப்பித்தார்கள். ஆந்திரப் பிரிவினையை உடனே மேற்கொள்ளப் போவதாகக் கூறி அதற்குப் பூர்வாங்க யோசனைகள் கூறுவதற்கு நீதிபதி வாஞ்சுவை நியமித்தார்கள்.

விஜயவாடா கலவரங்களினால்தான் ஆந்திர ராஜ்யம் உடனே வரப்போகிறது என்ற எண்ணம் ஆந்திர மக்களில் பலருக்கு ஏற்பட்டிருந்தது. இதை ஆந்திரத் தலைவர்கள் உபயோகப் படுத்திக் கொண்டார்கள். நீதிபதி வாஞ்சுவைக் கலவரப் படுத்திவிடுவது என்று தீர்மானித்தார்கள். ஆந்திர நாட்டில் அவர் சென்ற இடமெல்லாம் "சென்னை நகரைத் தனிமாகாணம் ஆக்கவேண்டும்" என்ற கோஷமே அதிகமாகக் கேட்டது. அத்துடன், ஆந்திரநாட்டில் தலைநகரமாகக் கூடிய இடம் எதுவும் இல்லை என்றும், ஆகையால் தற்காலிகமாகவேனும் சென்னையில் ஆந்திரத் தலைநகரம் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். துரதிர்ஷ்டவசமாக, நீதிபதி வாஞ்சு வந்திருந்த சமயத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்களும் சிறிது அசமந்தமாக இருந்து விட்டார்கள்.

இப்போதுதான் சென்னை நகருக்கு உண்மையான அபாயம் நெருங்கியது. "மதராஸ் மனதே" என்ற கோஷம் நிறைவேறி ஆந்திரர்களுக்கே சென்னை போயிருந்தால் அது தமிழர்களுக்குப் பெரும் அநீதியாக மட்டுமிருந்திருக்கும். சென்னை நகரத்துக்கு அபாயம் ஒன்றும் நேர்

## அவர்கள் பொறுப்பு!




"ஆந்திர மாகாணத்தின் தலைநகர் எங்கே இருக்க வேண்டும் என்ற பிரச்னையை ஆந்திரர்கள் தங்களுக்குள்ளேயே முடிவு செய்து கொள்ள வேண்டும்" என்று நேருஜி தெரிவித்திருக்கிறார்.

திராது. ஆனால், சென்னை நகரில் ஆந்திர ராஜ்யத்தின் தாற்காலிகத் தலை நகரம் ஏற்பட்டால், இந்த அழகிய நகரம் ஒரு ரணகளம் ஆகியிருக்கும். இந்தச் சென்னை நகரத்தை ரணகளமாக்கி, இந் நகரின் வீதிகளில் இரத்த வெள்ளம் ஓடச் செய்வதே தங்கள் நோக்கம் என்பதை ஸ்ரீ லங்கா சுந்தரம் முதலியவர்கள் பட்டவர்த்தனமாகவும் வெளியிட்டு விட்டார்கள்.

சென்னையில் ஆந்திர ராஜ்யத்தின் தாற்காலிகத் தலை நகரம் ஏற்பட்டால், ஆந்திர நாட்டிலிருந்து உணர்ச்சி வசப்பட்ட ஆயிரக்கணக்கான 'தொண்டர்'களை இங்கே தருவிப்பது சாத்தியமான காரியமாகும். அவர்களைக் கொண்டு இங்குள்ள தமிழர்களை வலுச் சண்டைக்கு இழுப்பதும் அசாத்தியமாகாது. சென்னை நகரின் வீதிகளில் கலவரங்கள் நடந்தால், சென்னையின் பாது காப்புக்குப் பொறுப்புள்ள தமிழ் அரசாங்கத்தார் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாது. துப்பாக்கிப் பிரயோகம் செய்தே தீரவேண்டிய நிலைமையை ஒரு சில விஷமக்காரர்கள் ஏற்படுத்திவிடலாம். 'பின்னர் ஆந்திரத் தலைவர்களும் "மதராஸ் வீதிகளில் ஆந்திரர்களின் இரத்தம் ஆறாக ஓடியது. அப்படிப் புனிதமடைந்த மதராஸை விட்டு விடுவதா!" என்று கிளர்ச்சி தொடங்கச் சௌகரியமாயிருக்கும். சென்னை நகரை விவாதத்துக்கு இடமான பிரதேசமாகச் செய்வதற்கு இவ்வளவு போதுமல்லவா! ஒரு தடவை சென்னை நகரை விவாதத்துக்கு இடமான பிரதேசம் (Disputed Area) என்று ஆக்கிவிட்டால், அப்புறம் விவாதம் தீர்வது ஏது! காஷ்மீரின் கதியைச் சென்னை நகரம் அடைந்துவிடும். ஓயாத ரகளைதான்; சண்டைதான். விவாதம் தீர்வதற்கு எத்தனையோ காலம் ஆகும். வெளியிலேயிருந்து மத்தியஸ்தம் செய்ய வருகிறவர்கள், "என்னத்துக்கு உங்களுக்குள் வீண் சண்டை! தலைக்குப் பாதியாக வைத்துக் கொள்ளுங்கள்!" என்பது போன்ற சமரச யோசனை சொல்வார்கள்.

இவ்வளவு அபாயங்களுக்கும் நீடித்த தகராறுகளுக்கும் இடமான யோசனையை ஆந்திரத் தலைவர்கள் போட்ட கோஷத்தினால் மூளைக் குழப்பம் அடைந்த நீதிபதி வாஞ்சு தமது அறிக்கையிலே எழுதி வைத்தார். வெகு தூரத்தில் புது டில்லியில் உள்ள தலைவர்களுக்கும் இது சரியான யோசனை என்றே தோன்றி விட்டது. "ஏதோ சில வருஷ காலம் சென்னை நகரில் ஆந்திரத் தலை நகரம் இருந்தால் என்ன!" என்று எண்ணினார்கள். புதிய தலை நகரம் உடனே ஏற்படுத்துவது என்றால், இந்திய அரசாங்கத்தார் அது சம்பந்தமான பணச் செலவை ஏற்றுக் கொள்ளும்படி வரும். இந்தத் தொல்லையைச் சில காலம் தள்ளிப் போடலாமே என்று நினைத்தார்கள். இந்திய சர்க்கார் மந்திரிகளில் நேருஜி உள்பட மிகப் பெரும்பாலோர் சென்னையில் ஆந்திர ராஜ்யத்தின் தாற்காலிகத் தலை நகரை வைத்துக் கொள்வதற்குச் சாதகமாக இருந்தார்கள்.

இப்போது ஏறக்குறைய முடிவாகிவிட்ட விஷயத்தை மறுபடியும் புனராலோசனைக்கு உட்படுத்தி அதை இல்லாமற் செய்யும் பொறுப்பு ராஜாஜியின் தலையில் சார்ந்தது. புது டில்லிக்கு ராஜாஜி சென்று சென்னையில் ஆந்திர ராஜ்யத்தின் தாற்காலிகத் தலை நகரம் ஏற்படுத்துவதின் சிக்கல்களையும் அபாயங்களையும் எடுத்துச் சொன்னார். ராஜாஜியின் வாதங்களைக் கேட்டபிறகு நேருஜி

யும் மற்றும் பெரும்பாலான மந்திரிகளும் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டார்கள்.

எனவே, ஆந்திரத் தலைவர்கள் மீண்டும் ராஜாஜியின் பேரில் துவேஷப் பாய்ச்சல் பாய்வதற்கு வசதி ஏற்பட்டு விட்டது. சென்னையில் தாற்காலிகத் தலைநகரும் இல்லாமற் போனதற்கு ராஜாஜிதான் காரணம் என்று குற்றம் சாட்டினார்கள். குற்றம் சாட்டியது மட்டும் அன்று. ஸ்ரீ லங்காசுந்தரம் போன்றவர்கள், "அப்படி நடந்தால் ஆந்திர மாகாண மெங்கும் பொட்டி ஸ்ரீராமுலுவின் மரணத்தை யடுத்து நடந்தது போன்ற கலவரங்கள் நடக்கும்" என்று எச்சரிக்கை செய்தார்கள்.

அதிர்ஷ்டவசமாக, ஆந்திர ராஜ்யத்தின் பொது மக்கள் ஸ்ரீ லங்காசுந்தரத்தின் துர்ப்போதனையை நிராகரித்து விட்டார்கள். நேரு சர்க்காரின் முடிவு வெளியான பிறகு ஆந்திர நாடெங்கும் அமைதி நிலவி வருகிறது. "தனி இராஜ்யம் ஆளும் பொறுப்பு ஏற்பட்டு விட்டதே! இதை நல்ல முறையில் நிர்வகிக்க வேண்டுமே!" என்ற பொறுப்பு உணர்ச்சி ஆந்திரப் பொது மக்களிடையே பரவி யிருப்பதாகக் காண்கிறது. புதிய இராஜ்யம் ஏற்படுவதற்கு இது மிகவும் நல்ல சூழ்நிலை என்று சொல்ல வேண்டியதில்லை.

**ப**த்து ஆண்டுகளுக்கு முன்னால் ராஜாஜி காங்கிரஸ் மகாசபை ஜனுப் ஜின்னாவுடன் ஓர் உடன்படிக்கைக்கு வரவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். இல்லாவிடில் பாரத நாடு சுதந்திரம் அடைய முடியாது என்றும், தேச மெங்கும் சகோதரச் சண்டை பரவி ரணகளமாகிவிடும் என்றும் தமது தீர்க்க திருஷ்டியினால் அறிந்து கூறினார். அதற்காக அப்போது ராஜாஜி எத்தனை துவேஷப் பிரசாரத்துக்கு உள்ளாக வேண்டியிருந்தது என்பது அனைவரும் அறிந்ததே.

ஆந்திரப் பிரிவினை விஷயத்திலும் ராஜாஜி அத்தகைய துவேஷப் பிரசாரத்தியில் குதித்து வெளிவரவேண்டியதாயிருந்தது. சென்னை நகரம் சம்பந்தமாக ராஜாஜி இவ்வளவு உறுதியாக இருந்து இந்திய அரசாங்கத்து மந்திரிகளின் கருத்தையும் மாற்றி வேறு முடிவு செய்யப் பண்ணியது, முதன்மையாகத் தமிழர்களின் நியாயமான உரிமையைப் பாதுகாப்பதற்காகத்தான். அதே சமயத்தில் அழகிய சென்னைமா நகரம் ஒரு ரணகளம் ஆகாமலும் அவர் காப்பாற்றியிருக்கிறார்.

இந்தக் காரியங்கள் தற்சமயத்துக்கு ஆந்திரர்பலர் ராஜாஜியைத் துவேஷிப்பதற்குக் காரணம் ஆவது இயல்பேயாகும். ஆனால் பிற்காலத்தில் ஆந்திரர்களும் ராஜாஜிதான் தங்களுக்குப் பரமோபகாரம் செய்ததை உணர்வார்கள். புது இராஜ்யம் ஏற்படும் தருணத்தில் தமிழர்களோடு சகோதரச் சண்டை போடுவதில் தங்கள் சக்தியை விரயம் செய்யாமல், ஆந்திர ராஜ்யத்தை உறுதியான அடிப்படையில் அமைப்பதற்குப் பொறுப்பு உணர்ச்சியை அளித்தவர் ராஜாஜிதான் என்பதை உணர்வார்கள். அப்போது ராஜாஜியிடம் நன்றியும் செலுத்துவார்கள்.

* * *

**வா**ஞ்சு அறிக்கை இந்த முறையில் அமைந்திருக்கிறது என்பது வெளியான பிறகு, தமிழ் நாட்டுத் தலைவர்கள் விழித்தெழுந்து தீவிரமான கிளர்ச்சி செய்தார்கள். ராஜாஜிக்குப் பக்க பலமாக நின்றதோடு, ஆந்திரத் தலைவர்களின் துவேஷப் பிரசாரத்துக்கு முழுதும் ராஜாஜியையே ஆளாக்கி விடாமல், தாங்களும் பகிர்ந்து கொண்டார்கள். காங்கிரஸ்வாதிகள், தமிழரசுக் கழகத்தார், திராவிடக் கட்சியார், கம்யூனிஸ்டுகள் எல்லாருமே சென்னை நகரம் சம்பந்தமாக நியாயத்தை நிலை நாட்டுவதற்கு ஒத்துழைத்துப் போராடியதைப் பெரிதும் பாராட்டுகிறோம். இந்தப் போராட்டத்தை முன்னணியில் நின்று உருவாக்கி வெற்றி பெற நடத்தியவர்களிலே ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்களையும், மேயர் செங்கல்வராயன் அவர்களையும் அவசியம் குறிப்பிட வேண்டும். இவர்களுக்குத் தமிழ் மக்களின் சார்பாக நம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

—திருவள்ளுவர்

"**ஆ**கா! 'நிற்க' வேண்டியது எதற்காக! ஒரு நிமிஷம்கூட நிற்க மாட்டோம். ஓடத்தான் செய்வோம்! மோட்டார் கார் கிடைக்காததால் சைக்கிள் வண்டியில் ஓடுகிறோம். ஒரு கணங்கூட இனி இந்தக் கல்லூரி வாசலில் நிற்க மாட்டோம்" என்று சொல்லுவது போலிருக்கிறதல்லவா, இந்த இதழ் அட்டையில் தோன்றும் வனிதைகளைப் பார்க்கும்போது.

மார்ச்சு மாதத்துடன் பெரும்பாலான அரசாங்க, சர்வகலாசாலைப் பரீட்சைகள் முடிந்து விடுகின்றன. மாணவர்களையும், மாணவிகளையும் இரவும் பகலும் பயமுறுத்தும் பாதகப் பரீட்சைச் சனியன் முடிந்ததும் அவர்கள் அடையும் குதூகலம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தச் சனீஸ்வர பகவான் தங்களை விட்டுத் தொலையும் கடைசிப் பரீட்சை நாளன்று, புஸ்தகங்களை விண்ணில் விட்டெறிந்தும், மைப் புட்டிகளை அம்மானை விளையாடியும் அவர்கள் மாபெரும் விழாக் கொண்டாடுகிறார்கள்.

குறளாசிரியர், "கற்கக் கசடறக் கற்பவை" என்றார். அதாவது கற்க வேண்டிய நூல்களை நன்றாகக் கற்றுக் கொள்வீர்களாக என்றார். கற்பவை என்பதற்குக் கற்க வேண்டிய நூல்கள் என்று பொருள். ஏனெனில் குறளாசிரியர் காலத்திலேயே கற்க வேண்டாத நூல்கள் ஏராளமாக இருந்திருக்கின்றன போலும். நிமிஷத்தில் ஆயிரக் கணக்கில் அச்சிடும் இயந்திரங்களும், காகிதங்களும் மலிந்துள்ள இக்காட்களில் 'கற்பவை' என்ற சொல்லுக்குப் புறம்பான நூல்கள் எவ்வளவிருக்க வேண்டும்! இவற்றில் பெரும்பாலானவை நமது கல்லூரி மாணவர்கள் தலையில் வைக்கப்படுகின்றன. அதனாலேயே, பள்ளிக்கூடத்திலிருந்து விடுதலை கிடைக்கும் நாளை ஒரு புனிதத் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

இவ்வாண்டு பரீட்சை எழுதியுள்ள மாணவர்கள் மாணவிகள் யாவரும் பரீட்சையில் தேறினாலும் தேறாவிட்டாலும் வாழ்க்கைப் பரீட்சையில் தேறி வெற்றி காண்பார்களாக!

# பொன்னியின் செல்வன்

கல்கி

மணியம்

ஐந்தாம் அத்தியாயம்

## தாயைப் பிரிந்த கன்று

இளவரசர் புத்த பிக்ஷுவையும் தூக்கிக் கொண்டு முருகய்யன் கொண்டு வந்து நிறுத்திய படகிலே குதித்தார். அவர் குதித்த வேகத்தில் அந்தச் சிறிய படகு பேயாட்டம் ஆடியது. ஒரு கணம் கவிழ்ந்து விடும் போலவும் இருந்தது. முருகய்யன் மிகப் பிரயத்தனப்பட்டுப் படகு கவிழாமல் காப்பாற்றினான்.

"முருகய்யா! இனிமேல் படகை விடு! ஆனைமங்கலம் அரண்மனைக்கு விடு!" என்று பொன்னியின் செல்வர் உரத்த குரலில் கூவினார். அச்சமயம் உச்ச நிலையை அடைந்திருந்த புயற் காற்றும் புயலினால் பொங்கி வந்த கடலும் போட்ட இரைச்சலினால் அவர் கூறியது முருகய்யன் காதில் விழவில்லை. ஆயினும் இளவரசரின் முகத் தோற்றத்திலிருந்து அவருடைய விருப்பத்தை அறிந்து கொண்ட முருகய்யன் படகைச் செலுத்தத் தொடங்கினான். சூடாமணி விஹாரத்தின் மூழ்கிக் கொண்டிருந்த மண்டப சிகரங்களின் மீதும் புத்தர் சிலைகளின் மீதும் மோதாமல் படகைச் செலுத்துவது மிகவும் கடினமாயிருந்தது. முருகய்யன் பெரும் புயலிலும் சுழிக் காற்றிலும் நடுக்கடலில் படகு செலுத்திப் பழக்கப் பட்டவனாதலால் வெகு லாகவமாகச் செலுத்திக் கொண்டு போனான். அதைப் பார்த்து இளவரசர் வியந்தார். அவனுக்குச் சற்று உதவி செய்யலாம் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் புத்த பிக்ஷுவைப் பிடித்திருந்த பிடியை விட்டு விடத் தயங்கினார். அதற்கு ஏற்றாற் போல், திடீரென்று பிக்ஷு இளவரசருடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்தார். அச்சமயம் படகு புத்த பகவானின் சிலையின் அருகே போய்க் கொண்டிருந்தது. இப்போது கடல் வெள்ளம் அச் சிலையின் கண்கள் வரையில் ஏறியிருந்தது. இன்னும் சில நிமிடத்தில் சிலையே முழுகி விடும் என்பதில் ஐயமில்லை.

இளவரசர் பிக்ஷுவை இறுகப் பிடித்துக் கொண்டார். பார்ப்பதற்கு மிக மென்மையான தேகம் உடையவராகக் காணப்பட்ட இளவரசரின் கரங்களில் எவ்வளவு வலிமை இருந்தது என்பதை அறிந்து பிக்ஷு வியந்தார் என்பதை அவருடைய முகத் தோற்றம் காட்டியது. நெஞ்சிலே உரம் இருந்தால், உடலிலும் வலிமை உண்டாகும் போலும்! இத்தனைக்கும் பல நாள் சுரத்தினால் மெலிந்திருந்த உடம்பு!

புத்தரின் சிலையைத் தாண்டிப் படகு போயிற்று. முழுகிக் கொண்டிருந்த அச் சிலையைப் பிக்ஷு பார்த்துக் கொண்டேயிருந்தார். சிலை விரைவில் மறைந்தது. பிக்ஷுவின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது.

"இளவரசே! என்ன காரியம் செய்தீர்?" என்றார் பிக்ஷு. அவருடைய உதடுகளின் அசைவிலிருந்து என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட இளவரசர் பிக்ஷுவின் காதின்

அருகில் குனிந்து "சுவாமி! அந்தக் கேள்வியை நான் அல்லவா கேட்க வேண்டும்? என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்?" என்றார்.

"இளவரசே! இந்த விஹாரம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து இங்கே இருந்து வருகிறது. மகானாகிய தர்மபாத முனிவரின் காலத்திலே கூட இருந்தது. வீர சைவர்களான பல்லவ சக்கரவர்த்திகள் இதை அழிக்காமல் விட்டு வைத்தார்கள். அப்படிப்பட்ட புராதன விஹாரம் என் காலத்தில், என் கண் முன்னால், முழுகிவிட்டது. செங்கல் திருப்பணியினாலான இந்த விஹாரம் இந்தக் கடல் வெள்ளத்துக்குத் தப்ப முடியாது. வெள்ளம் வடிந்த பிறகு சில குட்டிச் சுவர்களே மிச்சமிருக்கும்! விஹாரம் போன பிறகு நான் மட்டும் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?" என்றார் பிக்ஷு.

"விஹாரம் இடிந்து அழிந்தால் மறுபடியும் திருப்பணி செய்து கட்டிக் கொள்ளலாம். புத்த பகவானுடைய சித்தமிருந்தால் நானே திரும்பவும் கட்டிக் கொடுப்பேன். தாங்கள் போய்விட்டால் என்னால் தங்களைத் திருப்பிக் கொண்டு வர முடியாதே?" என்றார் இளவரசர் அருள்மொழிவர்மர்.

கடலும் புயலும் சேர்ந்து போட்ட இரைச்சலினால் அவர்களால் மேலும் தொடர்ந்து விவாதம் செய்ய முடியவில்லை. மற்றும், சுற்றுப் புறங்களில் நாலா புறத்திலும் அவர்கள் கண்ட கோரக் காட்சிகள் அவர்களைப் பேச முடியாதபடி செய்து விட்டன.

முறிந்த பாய்மரங்களுடனே பெரிய பெரிய நாவாய்களும் சின்னஞ் சிறு மீன் பிடிக்கும் படகுகளும் கடற் பக்கத்திலிருந்து கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. அவற்றில் பல கரை தட்டியும், கட்டிடங்களின் மேல் மோதியும், பேயாட்டம் ஆடிய மரங்களின் மீது இடித்துக் கொண்டும், சுக்கு நூறாக நொறுங்கி விழுந்தன.

பெருங் காற்றில் வீடுகளின் கூரைகள் அப்படியே பிய்த்துக் கொண்டு பறந்து சென்று வெள்ளத்தில் விழுந்தன.

வேறு சில கூரைகள் மிதந்து கொண்டிருந்தன. அவற்றில் சிலவற்றில் மனிதர்கள் மிகுந்த சிரமத்துடன் தொத்திக் கொண்டிருந்தார்கள். ஓவென்று அவர்கள் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பெரிய பெரிய மரங்கள் காற்றில் முறிந்து விழுந்தன. முறிந்த மரங்களில் சில மிதந்து மிதந்து சென்றன. மிதந்த மரங்களைப் பிடித்துக் கொண்டு சில மனிதர்கள் உயிர் தப்ப முயன்றார்கள்.

ஆடுமாடுகள் வெள்ளத்தில் அலறிக் கொண்டு மிதந்து சென்றன.

இத்தகைய கோரமான காட்சிகளைப் பார்த்துப் பார்த்து இளவரசரும் பிக்ஷுவும் மனங் கசிந்தார்கள். அந்த நிலைமையில் தங்களால் ஒன்றும் உதவி செய்ய முடியவில்லையே என்ற எண்ணம் அவர்களுடைய வேதனையை அதிகப்படுத்தியது.

* * *

முருகய்யன் அப்பால் இப்பால் பார்க்காமல் படகைச் சர்வ ஜாக்கிரதையாகச் செலுத்திக் கொண்டு சென்றான்.

சூடாமணி விஹாரம் நாகைப்பட்டினத்தில் கடற்கரை ஓரமாக இருந்தது. அங்கிருந்து கால்வாய் சிறிது தூரம் வரையில் தெற்குத் திசையை நோக்கிச் சென்றது. பிறகு தென்மேற்காக அரைக் காதம் வரையில் சென்று, அங்கிருந்து மீண்டும் திரும்பித் தென் திசையில் நேராகச் சென்றது. இந்த இரண்டாவது திருப்பத்தின் முனையிலேதான் ஆனைமங்கலம் அரண்மனை இருந்தது.

வழி நடுவில் இருந்த நந்தி மண்டபத்தின் அருகில் படகு வந்தபோது, நந்தி முழுதும் முழுகியிருந்தது மட்டுமல்லாமல் மேல் மண்டபத்தின் விளிம்பைத் தொட்டுக் கொண்டு வெள்ளம் சென்றது. மண்டபத்துக்கு அப்பால் நாலாபுறமும் பரவி இருந்த தென்னந் தோப்புகளில் முக்கால் வாசி மரங்கள் காற்றினால் முறிந்து விழுந்து விட்டன. மிஞ்சியிருந்த மரங்களின் உச்சியில் மட்டைகள் ஆடியது தலைவிரி கோலமாகப் பேய்கள் ஆடுவது போலவே இருந்தது. அவற்றில் சில மட்டைகள் காற்றினால் பிய்க்கப்பட்டு வெகு தூரத்துக்கு அப்பால் சென்று விழுந்தன.

நந்தி மண்டபத்தின் உச்சியில் தாயைப் பிரிந்த கன்றுக்குட்டி ஒன்று எப்படியோ வந்து தொத்திக் கொண்டிருந்தது. அது நாலாபுறமும் பார்த்துப் பார்த்து மிரண்டு விழித்தது. உடம்பை அடிக்கடி சிலிர்த்துக் கொண்டது. அதன் கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கன்று 'அம்மா' என்று எழுப்பிய ஈனக் குரல் படகில் சென்று கொண்டிருந்தவர்களின் காதில் இலேசாக விழுந்தது. "ஐயோ பாவம்! தாயைப் பிரிந்த

இந்தக் கன்றின் கதி என்ன ஆகுமோ !'' என்று இளவரசர் எண்ணிய அதே சமயத்தில், ஒரு பெரிய தென்னை மரம் திடீரென்று முறிந்து மண்டபத்தின் பின்புறத்தில் விழுந்தது. சிறிது முன் பக்கமாக விழுந்திருந்தால் கன்றுக் குட்டியின் மேலேயே அது விழுந்திருக்கும்.

மரம் விழுந்த வேகத்தினால் தண்ணீரில் ஒரு பெரிய அலை கிளம்பி மண்டபத்தின் மேலே தாவி வந்தது. முன்னமே நடுங்கிக் கொண்டிருந்த கன்றுக் குட்டி அந்த அலையைச் சமாளிக்க முடியாமல் தடுமாறி விழுந்தது. மண்டபத்தின் உச்சியிலிருந்து அலையினால் அது வெள்ளத்தில் உந்தித் தள்ளப்பட்டுத் தத்தளித்தது.

இளவரசர் இதுவரையில் புத்த பிக்ஷுவைத் தம் கரங்களினால் பிடித்துக் கொண்டிருந்தார். கன்றுக் குட்டி மண்டபத்தின் உச்சியிலிருந்து உந்தித் தள்ளப்பட்டதைப் பார்த்ததும், 'ஆகா' என்று சத்தமிட்டுப் பிக்ஷுவைப் பிடித்துக் கொண்டிருந்த பிடியை விட்டார். பிக்ஷு அக்கணமே வெள்ளத்தில் குதித்தார்.

படகோட்டி முருகய்யன் துடுப்பைப் படகில் போட்டு விட்டு இளவரசரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவனை இளவரசர் கடுங் கோபத்துடன் பார்த்து விட்டு "விடு!" என்று கையை உதறினார். அதற்குள் பிக்ஷு இரண்டு எட்டில் நீந்திச் சென்று கன்றுக் குட்டியின் முன்னங்கால்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.



கன்றுக் குட்டியும் உயிர்மீதுள்ள இயற்கையான ஆசையினால் தலையை மட்டும் தண்ணீருக்குமேலே வைத்துக் கொண்டிருக்கப் பிரயத்தனப் பட்டது. பிக்ஷு கன்றுக் குட்டியைப் பிடித்து இழுத்துக் கொண்டு படகை நோக்கி வந்தார். இளவரசர் அவருக்குக் கை கொடுத்து உதவினார். இருவருமாகச் சேர்ந்து முதலில் கன்றுக் குட்டியைப் படகில் ஏற்றினார்கள். பின்னர், இளவரசரின் உதவியினால் ஆச்சாரிய பிக்ஷுவும் படகில் ஏறிக் கொண்டார்.

இத்தனை நேரம் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்த கன்றுக்குட்டி, படகு ஒரு ஆட்டம் ஆடியதும், கால் தடுமாறித் தொப்பென்று விழுந்தது. நல்ல வேளையாக, படகின் உட்புறத்திலே தான் விழுந்தது. பிக்ஷு அதன் அருகில் உட்கார்ந்தார். கன்றின் தலையைத் தன் மடி மீது எடுத்து வைத்துக் கொண்டு அதைத் தடவிக் கொடுக்கத் தொடங்கினார்.

"குருதேவரே! சற்று முன்னால் சூடாமணி விஹாரத்தில் புத்த பகவானின் சரணங்களைப் பிடித்துக் கொண்டு பிராணத் தியாகம் செய்யப் பார்த்தீர்களே? அப்படித் தாங்கள் செய்திருந்தால், இந்த வாயில்லா ஜீவனை இப்போது காப்பாற்றி யிருக்க முடியுமா?" என்று இளவரசர் கேட்டார்.

"ஐயா! நான் செய்ய இருந்த குற்றத்தைச் செய்யாமல் தடுத்தீர்கள். அதற்காக நன்றி உடையேன்! ஆம்; இந்தக் கன்றின் உயிரைக் காப்பாற்றியது என் மனத்துக்கு நிம்மதி அளிக்கிறது. சூடாமணி விஹாரம் இடிந்து தகர்ந்து போய் விட்டால் கூட இனி அவ்வளவு கவலைப் படமாட்டேன்" என்றார் பிக்ஷு.

"ஆச்சாரியரே! ஒரு கன்றின் உயிரைக் காப்பாற்றியதனாலே எப்படி மன நிம்மதி பெறுகிறீர்கள்? இன்று இந்தப்



புயலினால் எவ்வளவு ஜீவன்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றன? எவ்வளவு ஆயிரக் கணக்கான மக்கள்,—ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள், — கஷ்டப் படுவார்கள்? எத்தனை வாயில்லா ஜீவன்கள்,—ஆடு மாடுகள், குதிரைகள், பறவைகள், — உயிரை இழக்க நேரிடும்? இந்தத் துன்பங்களுக்கெல்லாம் பரிகாரம் என்ன?" என்று கேட்டார் இளவரசர்.

"ஐயா! நம்மால் இயன்றதைத்தான் நாம் செய்யலாம். அதற்கு மேல் நாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இயற்கை உற்பாதங்களைத் தடுக்கும் சக்தி நமக்கு இல்லை. புயற்காற்றை நாம் கட்டுப்படுத்த முடியுமா? பெரு மழையைத் தடுக்க முடியுமா? அல்லது மழை பெய்யும்படி செய்யத்தான் முடியுமா? கடல் பொங்கி வரும்போது அதை நாம் தடுத்து நிறுத்தி விடமுடியுமா? ஆகா! கடல்களுக்கு அப்பால் உள்ள கீழைத் தேசங்களில் எரிமலை நெருப்பைக் கக்குவதையும் பூகம்பம் நேர்ந்து பூமி பிளப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். அவற்றுக்கெல்லாம் நாம் என்ன செய்யலாம்? நம் கண் முன்னால் கஷ்டப்பட்டுத் தவிக்கும் ஜீவனுக்கு உதவி செய்யத்தான் நம்மால் முடியும்!"

"குருதேவரே! இயற்கை உற்பாதங்கள் ஏன் உண்டாகின்றன? புயற்காற்றும் பூகம்பமும் ஏன் நிகழ்கின்றன? கொள்ளை நோய்கள் ஏன் வருகின்றன? அவற்றினால் மக்களும் மற்றப் பிராணிகளும் அடையும் துன்பங்களுக்குப் பொறுப்பாளி யார்? நம்மால் இயற்கையின் உற்பாதங்களைத் தடுக்க முடியாது. ஆனால் கடவுளால் கூட முடியாதா? கடவுள் ஏன் இத்தகைய இயற்கை உற்பாதங்களைத் தடுக்காமல் ஜீவராசிகள் இவற்றினால் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்?" என்று இளவரசர் கேட்டார்.

"பொன்னியின் செல்வ! தாங்கள் இப்போது கேட்ட கேள்விக்கு ஆதிகாலம் முதல் மகான்களும் முனிவர்களும் விடை சொல்ல முயன்றிருக்கிறார்கள். ஆனால் அவை எல்லாருக்கும் திருப்தி அளிப்பதாக இல்லை. ஆகையினாலேயே புத்த பகவான் கடவுளைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே இறங்கவில்லை. 'பிறருக்கு உதவி செய்யுங்கள். பிறருடைய கஷ்டங்களைப் போக்க முயலுங்கள். அந்த முயற்சியிலே தான் உண்மையான ஆனந்தம் அடைவீர்கள். அதிலிருந்து சுக துக்கங்களைக் கடந்த நிர்வாண நிலையை அடைவீர்கள்!' என்று புத்த பகவான் போதித்தார்" என்று பிக்ஷு கூறினார்.

படகு நந்தி மண்டபத்திலிருந்து மேற்குத் திசையில் திரும்பி ஆனைமங்கலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

பொன்னியின் செல்வரின் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. சற்று முன் பிக்ஷு வெளியிட்ட புத்த சமயக் கொள்கையோடு தமது முன்னோர்களின் சமயக் கொள்கையை அவர் மனத்துக்குள்ளே ஒப்பிட்டுப் பார்த்தார். பிறருக்கு உதவி செய்யும் கடமையைச் சைவ வைஷ்ணவ சமயங்களும் வற்புறுத்துகின்றன. 'பரோபகாரம் இதம் சரீரம்' என்ற மகா வாக்கியமும் இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் கடவுளிடம் நம்பிக்கை வைத்துப் பக்தி செய்யும் கடமையையும் நம் முன்னோர் வற்புறுத்தியிருக்கிறார்கள். கடவுளைச் சம்ஹார மூர்த்தியான ருத்திரனாகவும் கருணாமூர்த்தியான மகாவிஷ்ணுவாகவும் உருவங் கொடுத்துப் போற்றியிருக்கிறார்கள். கடவுளுக்கு ஜகன்மாதா உருவம் கொடுத்து, ஒரே சமயத்தில் அன்பே வடிவான உமாதேவியாகவும் கோர பயங்கர துர்க்கா பரமேசுவரியாகவும் வர்ணித்துத் தோத்திரம் செய்திருக்கிறார்கள். இந்தக் கொள்கைகளில் எது உண்மை? உலகத்தின் அன்னை கோர பயங்கர ரணபத்திர காளியாக இருக்க முடியுமா? ஏன் இருக்க முடியாது? பெற்ற குழந்தையை ஒரு சமயம் தாயார் அன்புடன் கட்டித் தழுவிக் கொஞ்சுகிறாள். இன்னொரு சமயம் கோபித்துக் கொண்டு அடிக்கவும் செய்கிறாள். ஏன் அடிக்கிறாள் என்பது சில சமயம் குழந்தைக்குப் புரிவதில்லை. ஆனால் அடிக்கும் தாயாருக்குத் தான் பெற்ற குழந்தையிடம் அன்பு இல்லை என்று சொல்ல முடியுமா......?

இருட்டுகிற சமயத்தில் படகு ஆனைமங்கலத்திலிருந்த சோழ மாளிகையை அணுகியது. பொங்கி வந்த கடல் அந்த மாளிகையை எட்டவில்லை யென்பதைப் படகில் வந்தவர்கள் கண்டார்கள். அரண்மனைக் கருகில் அமைந்திருந்த அலங்காரப் படித்துறையில் கொண்டு போய் முருகய்யன் படகை நிறுத்தினான்.

அதுவரைக்கும் இயற்கையும் படகில் சென்றவர்களிடம் ஓரளவு கருணை செய்

த்து. பெரும் புயல் அடித்துக் கடல் பொங்கி வந்தாலும் பெருமழை மட்டும் பெய்யத் தொடங்கவில்லை. சிறு தூற்றலோடு நின்றிருந்தது.

படகு அரண்மனை ஓரத்தில் வந்து நின்ற பிறகுதான் பெருமழை பிடித்துக் கொண்டு பெய்ய ஆரம்பித்தது.

ஆனைமங்கலத்து அரண்மனைக் காவலன் அரண்மனையின் முன் வாசலில் கையில் ஒரு தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு நின்றான். சுற்றுப் புறங்களிலிருந்து அன்றிரவு அடைக்கலம் புகுவதற்காக ஓடி வந்திருந்த ஜனங்களோடு அவன் பேசிக் கொண்டிருந்தான்.

படகு ஒன்று வந்து படித்துறையில் நின்றதைக் கண்டதும் காவலன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான். பொன்னியின் செல்வரின் திருமுகம் அவன் கண்ணில் பட்டது. உடனே மற்றதையெல்லாம் மறந்து விட்டுப் படித்துறையை நோக்கி ஓட்டமாக ஓடினான்.

இதற்குள் படகிலிருந்து இளவரசரும் ஆச்சாரிய பிக்ஷுவும் படிக்கட்டில் இறங்கினார்கள். கன்றை மெள்ளப் பிடித்துக் கரையில் இறக்கி விட்டார்கள்.

காவலன் இளவரசரின் காலில் விழப் போனான். அவர் அவனைப் பிடித்துத் தடுத்தார். காவலன் கையிலிருந்த தீவர்த்தி கால்வாயில் விழுந்து ஒரு கணம் சுடர் விட்டு எரிந்து விட்டு மறைந்தது.

"இளவரசே! சூடாமணி விஹாரத்தைப் பற்றி நானே கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். தாங்கள் இங்கே வந்து விட்டது மிகவும் நல்லதாய்ப் போயிற்று" என்றான் காவலன்.

"நான் சூடாமணி விஹாரத்தில் இருப்பது உனக்குத் தெரியுமா?"

"தெரியும், ஐயா! இளையபிராட்டியும் கொடும்பாளூர் இளவரசியும் வந்திருந்த போது தெரிந்து கொண்டேன். யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று இளைய பிராட்டி பணித்து விட்டுச் சென்றார்..."

"அதை இன்னமும் நீ நிறைவேற்றத் தான் வேண்டும். மாளிகை வாசலில் கூடியிருப்பவர்கள் யார்?"

கடற்கரையோரத்துக் கிராமங்களில் கடல் புகுந்து விட்டதால் ஓடி வந்தவர்கள். இரவு தங்குவதற்கு இடங் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் தாங்கள் வந்தீர்கள். அவர்களை விரட்டி விடுகிறேன்......"

"வேண்டாம்! வேண்டாம்! அவர்கள் எல்லாருக்கும் இருக்கவும் படுக்கவும் இடங் கொடு. உணவுப் பொருள்கள் இருக்கும் வரையில் சமையல் செய்து சாப்பிடவும் கொடு. ஆனால் என்னைப் பற்றி அவர்களிடம் சொல்ல வேண்டாம்! உன் தீவர்த்தி கால்வாயில் விழுந்து அணைந்ததும் நல்லதாய்ப் போயிற்று. எங்களை வேறு வழியாக அரண்மனை மேன்மாடத்துக்கு அழைத்துக் கொண்டு போ!" என்றார் இளவரசர்.

அவர்கள் அரண்மனைக்குள் பிரவேசித்ததும் புயற் காற்றோடு பெருமழையும் சேர்ந்து 'சோ' என்று கொட்டத் தொடங்கியதும் சரியாயிருந்தன.

## ஆறாம் அத்தியாயம்

# முருகய்யன் அழுதான்!

தஞ்சை நகருக்கு அருகில், மந்தாகினி ஏறியிருந்த பல்லக்கின் பின்னால் மரம் முறிந்து விழுந்த அதே தினத்தில், வீர நாராயண ஏரியில் காற்று அடித்துக் கரையோரமிருந்த படகு நகர்ந்துபோன அதே நேரத்தில், நாகைப் பட்டினத்தில் நிகழ்ந்த சம்பவங்களையே சென்ற அத்தியாயங்களில் கூறினோம் என்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

அன்றிரவு முழுதும் நாகைப்பட்டினமும் அதன் சுற்றுப் புறங்களும் ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தன. அவரவர்களும் உயிர் பிழைத்திருந்தால் போதும் என்ற நிலைமையில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதும் இயலாத காரியமாயிருந்தது. ஆயினும் புத்த பிக்ஷுக்கள் நாகைப் பட்டினத்தின் வீதிகளில் அலைந்து ஜனங்களுக்கு இயன்றவரை உதவி புரிந்து வந்தார்கள்.

அதே இரவில் ஆச்சாரிய பிக்ஷுவும் பொன்னியின் செல்வரும் ஆனை மங்கலம் சோழ மாளிகைக்குள் வெகு நேரம் கண் விழித்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் கடும் புயலினால் கடல் பொங்கியதால் கடற்கரையோரத்து மக்கள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார்கள் என்பதைப் பற்றிப் பேசிப் பேசிக் கவலைப் பட்டார்கள்.

அரண்மனை மணியக்காரனை இளவரசர் அழைத்து அரண்மனைக் களஞ்சியங்களில் தானியம் எவ்வளவு இருக்கிறது என்றும், பொக்கிஷத்தில் பணம் எவ்வளவு இருக்கிறது என்றும் விசாரித்தார். களஞ்சியங்கள் நிறையத் தானியம் இருந்தது என்று தெரிந்தது. திருநாகைக் காரோணத்தில், நீலாயதாட்சி அம்மனின் ஆலயத்தைப் புதுப்பித்துக் கருங்கல் திருப்பணி செய்வதற்காகச் செம்பியன்மாதேவி அனுப்பி வைத்த பொற்காசுகள் பன்னிரண்டு செப்புக் குடங்கள் நிறைய இருப்பதாகவும் தெரிந்தது.

"குரு தேவரே! புத்த பகவானுடைய சித்தத்துக்கு உகந்த கைங்கரியத்தைத் தாங்கள் செய்வதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அரண்மனைக் களஞ்சியங்களில் உள்ள தானியம் முழுவதையும் ஏழைகளுக்கு உணவளிப்பதில் செலவிடுங்கள். செப்புக் குடங்களில் உள்ள பொற் காசுகள் அவ்வளவையும் வீடு இழந்தவர்களுக்கு விநியோகம் செய்யுங்கள்!" என்றார் இளவரசர் பொன்னியின் செல்வர்.

"அது எப்படி நியாயம் ஆகும்? தானியத்தையாவது விநியோகிக்கலாம். தங்கள் பெரிய பாட்டியார், செம்பியன் மாதேவியார், ஆலயத் திருப்பணிக்காக அனுப்பியுள்ள பணத்தை வேறு காரியத்துக்காகச் செலவு செய்யலாமா? அந்த மூதாட்டி வருத்தப்பட மாட்டாரா?" என்றார் ஆச்சாரிய பிக்ஷு.

"ஆச்சாரியரே! என் பெரிய பாட்டியாருக்கு நான் சமாதானம் சொல்லிக் கொள்ளுவேன். இப்பொழுது இந்தப் பணத்தை ஏழை எளியவர்களின் துயரத்தைத் துடைப்பதற்காகச் செலவு செய்வேன். வருங்காலத்தில் என் பாட்டியாரின் உள்ளம் மகிழ்ந்து பூரிக்கும்படி இந்தச் சோழ நாடெங்கும் நூறு நூறு சிவாலயங்களை எழுப்பிக் கொடுப்பேன். பெரிய பெரிய கோபுரங்களை அமைப்பேன். இந்தமாதிரி கடல் பொங்கி வந்தாலும் முழுக அடிக்க முடியாத உயரமுள்ள ஸ்தூபிகளை எழுப்புவேன். தஞ்சைமா நகரில் தக்ஷிண மேரு என்று சொல்லும்படி விண்ணை அளாவும் உயரம் பொருந்திய கோபுரத்துடன் பெரியதொரு கோயிலைக் கட்டுவேன். ஐயா! இன்று முழுகிப்போன சூடாமணி விஹாரம் மண்ணோடு மண்ணாய்ப் போனாலும் கவலைப்பட வேண்டாம். அதற்கு அருகாமையில் கருங் கல்லினால் திருப்பணி செய்து பிரளயம் வந்தாலும் அசைக்க முடியாத மற்றொரு பெரிய சூடாமணி விஹாரத்தை எழுப்பிக் கொடுப்பேன்!" என்று இளவரசர் ஆவேசம் ததும்பக் கூறினார்.

"பொன்னியின் செல்வ! வருங் காலத்தைப் பற்றித் தாங்கள் இத்தனை உற்சாகத்துடன் பேசுவது எனக்கு மிக்க மகிழ்ச்சி தருகிறது!" என்றார் பிக்ஷு.

"ஆம், ஆம்! இந்த உலகில் நான் ஜீவித்திருந்து ஏதோ பெரிய காரியங்கள் செய்ய வேண்டுமென்பது இறைவனுடைய சித்தம். ஆகையினாலேயே என் உயிருக்கு நேர்ந்த எத்தனையோ அபாயங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறார். இன்றைக்குக்கூடப் பாருங்கள், இந்த முருகய்யன் எப்படியோ நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தான். இல்லாவிடில் தாங்களும் நானும் சூடாமணி விஹாரத்துக் குள்ளேயே இருந்திருப்போம். கடல் பொங்கி வந்து இவ்வளவு சீக்கிரத்தில் விஹாரத்தை முழுக அடித்து விடும் என்று எண்ணியிருக்க மாட்டோம்..."

"அது உண்மைதான். ஐந்நூறு ஆண்டுகளாக நடவாத சம்பவம் இன்று பிற்பகலில் ஒரே முகூர்த்த நேரத்தில் நடந்துவிடும் என்று யார் எதிர் பார்த்திருக்க முடியும்? கருணைக் கடலாகிய புத்த பகவான் பொங்கி வந்த கடலின் கோபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றினார். தங்கள் மூலம் என் அற்பமான உயிரையும் காத்தருளினார். தாங்கள் செய்ய உத்தேசிக்கும் காரியத்தை நான் பூரணமாக ஒத்துக் கொள்கிறேன். அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து எடுத்துச் செலவு செய்தால் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் கோபங் கொள்வார். ஆலயத் திருப்பணிக்காக வைத்திருக்கும் பணத்தை வீடு வாசலிழந்த ஏழைகளுக்கு விநியோகிப்பதைக் குறித்து தங்கள் திருப் பாட்டியார் கோபித்துக் கொள்ள மாட்டார். அவ்விதம் தாங்கள் செய்வது உசிதமானது. ஆனால், இந்த மகத்தான புண்ணிய காரியத்தைத் தாங்களே முன்னின்று நடத்துவது அல்லவோ பொருத்தமாயிருக்கும்? இந்த ஏழைச் சந்நியாசி அவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்க முடியாது!......"

"குருதேவரே! நான் முன்னின்று நடத்தினால் என்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். பாண்டவர்களின் அக்ஞாதவாசத்தைப்

பற்றித் தாங்கள் கூறியது என் நெஞ்சில் பதிந்திருக்கிறது. நமது செந்தமிழ் நாட்டுப் பொய்யாமொழிப் புலவரின் வாக்கும் நினைவுக்கு வந்தது.

'வாய்மை எனப்படுவதுயாதெனின் யாதொன்றுந் தீமை இலாத சொலல்'

என்றும்,

'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்'

என்றும் தமிழ் மறை கூறுகிறதல்லவா? என்னை நான் இச்சமயம் ஜனங்களுக்கு வெளிப்படுத்திக் கொள்வதால் நாட்டில் குழப்பமும் கலகமும் விளையலாம் என்று அறிவிற்சிறந்த என் தமக்கையார் கருதுகிறார். நான் மறைந்திருப்பதனால் யாருக்கும் எத்தகைய தீமையும் இல்லை. ஆகையால் புயலின் கொடுமையினால் கஷ்டப்பட்டுத் தவிக்கும் மக்களுக்குத் தாங்கள் தான் அரண்மனையில் உள்ள பொருளைக் கொண்டு உதவி புரிய வேண்டும்" என்றார் இளவரசர்.

"பொன்னியின் செல்வ! என் மனம் எதனாலோ மாறி விட்டது! தங்களை வெளியிட்டுக் கொண்டு மக்களுக்கு உதவி செய்ய இதுவே சரியான தருணம் என்று என் மனத்தில் உதித்திருக்கிறது. அதுவே புத்த பகவானுடைய சித்தம் என்று கருதுகிறேன்" என்றார் பிக்ஷு.

இச் சமயம் யாரோ விம்மும் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். முருகய்யன் ஒரு மூலையில் உட்கார்ந்து முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். இளவரசர் அவனிடம் சென்று கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்தார்.

"முருகய்யா! இது என்ன? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"என் மனையாள்...என் மனையாள்..." என்று தடுமாற்றத்துடன் கூறி முருகய்யன் மேலும் விம்மினான்.

"ஆமாம், ஆமாம்! உன் மனைவியை நாங்கள் அடியோடு மறந்து விட்டோம். அவள் இன்றிரவு புயலிலும் மழையிலும் என்ன ஆனாளோ என்று உனக்குக் கவலை இருப்பது இயல்புதான். ஆயினும் இந்த நள்ளிரவு நேரத்தில் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. பொழுது விடிந்ததும் உன் மனையாளைத் தேடிக் கண்டு பிடிக்கலாம்" என்றார் இளவரசர்.

"ஐயா! அதற்காக நான் வருந்தவில்லை. அவளுக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்திராது. இதைப் போல் எத்தனையோ பயங்கரமான புயலையும் வெள்ளத்தையும் அவள் சமாளித்திருக்கிறாள்!" என்றான் முருகய்யன்.

"பின் எதற்காக அழுகிறாய்?" என்று இளவரசர் கேட்டார்.

படகோட்டி தட்டுத் தடுமாறிப் பின் வரும் விவரங்களைக் கூறினான் :—

"அவளைப் பற்றி நான் என்னென்னமோ சந்தேகப்பட்டதை நினைத்து வருத்தப்படுகிறேன். அவள் தான் என்னை வற்புறுத்திக் கோடிக் கரையிலிருந்து இங்கே அழைத்துக் கொண்டு வந்தாள். தாங்கள் சூடாமணி விஹாரத்தில் இருக்கக்கூடும் என்று அவள் தான் சொன்னாள். அவளுடைய கட்டாயத்துக்காகவே நான் வந்தேன். தங்களுக்கு ஏதோ தீங்கு செய்ய நினைக்கிறாளோ என்று கூடப் பயந்தேன். அது எவ்வளவு பிசகு என்று இப்போது தெரிந்தது. சற்று முன்னால் தாங்கள் இந்தப் படகோட்டி ஏழையைக் குறித்துப் பாராட்டிப் பேசினீர்கள். கடவுள் என் மூலம் தங்கள் உயிரைக் காப்பாற்றியதாகக் கூறினீர்கள். ஆனால் என்னை இந்தக் காரியத்துக்குத் தூண்டியவள் என் மனையாள். அவளைப் பற்றிச் சந்தேகித்தோமே என்று நினைத்தபோது என்னை மீறி அழுகை வந்து விட்டது!"

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இளவரசர் பொன்னியின் செல்வரின் உள்ளத்தில் வேறொரு ஐயம் இப்போது உதித்தது.

"அப்பனே! உன் மனையாள் மிக்க உத்தமி. அவளைப் பற்றி நீ சந்தேகித்தது தவறுதான். ஆனால் அவளுக்கு நான் இங்கே இருப்பது எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்.

"என் அத்தையும் என் தங்கை பூங்குழலியும் நாகைப் பட்டினத்துக்குப் படகில் புறப்பட்டார்கள். அதிலிருந்து என் மனையாள் ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொண்டாள்."

"எந்த அத்தை?" என்று இளவரசர் பரபரப்புடன் கேட்டார்.

"ஐயா! ஈழத்தீவில் தங்களைப் பல முறை அபாயங்களிலிருந்து காப்பாற்றிய ஊமை அத்தைதான்......"

"ஆகா! அவர்கள் இப்போது எங்கே? உன் அத்தையும் பூங்குழலியும் என்ன ஆனார்கள்? இங்கே புறப்பட்டு வந்தார்கள் என்று கூறினாயே?"

"ஆம்; புறப்பட்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் பிரயாணம் தடைப்பட்டு விட்டது!" என்று சொல்லி விட்டு மேலும் முருகய்யன் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

பொன்னியின் செல்வர் மிக்க கவலை அடைந்து அவனைச் சமாதானப்படுத்தி விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஈழத்து அரசியை யாரோ மூர்க்கர்கள் பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு போனதை அறிந்ததும் இளவரசருக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அவர்களை ராக்கம்மாள் தடுக்கப் பார்த்தாள் என்றும், அதற்காக அவளை அடித்து மரத்தில் சேர்த்து வைத்துக் கட்டி விட்டுப் போனார்கள் என்றும் அறிந்த போது ராக்கம்மாளின் பேரில் ஏற்பட்டிருந்த ஐயம் நீங்கி விட்டது. இளவரசருக்கு அவள் பேரில் இப்பொழுது மதிப்பும் அபிமானமும் வளர்ந்தன.

"குருதேவரே! கேட்டீர்களா! இந்த உலகத்தில் நான் போற்றும் தெய்வம் ஒன்று உண்டு என்றால், ஈழத்தரசியாகிய மந்தாகினி தேவிதான். அந்த ஊமை மாதரசிக்கு எந்த விதமான தீங்கும் செய்தவர்களை நான் மன்னிக்க முடியாது. பழுவேட்டரையர்கள் என்னைச் சிறைப்படுத்தக் கட்டளை பிறப்பித்தது குறித்து நான் சிறிதும் கோபம் கொள்ளவில்லை. ஆனால் ஊமை ராணிக்கு ஏதேனும் அவர்கள் தீங்கு செய்திருந்தால் ஒருநாளும் என்னால் பொறுக்க முடியாது. பழுவேட்டரையர் குலத்தை அடியோடு அழித்துவிட்டு மறு காரியம் பார்ப்பேன். என்னைப் பெற்ற அன்னையும் என் சொந்தத் தந்தையும் ஈழத்து அரசிக்குத் தீங்கு செய்திருந்தாலும் அவர்களை என்னால் மன்னிக்க முடியாது. குருதேவரே! நாளைக்கே நான் தஞ்சாவூருக்குப் பிரயாணப்படப் போகிறேன். வியாபாரியைப் போல் வேடம் பூண்டு இந்தப் படகோட்டி முருகய்யனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு கிளம்பப் போகிறேன். ஈழத்தரசியைப் பற்றி அறிந்து கொண்டாலன்றி என் மனம் இனி நிம்மதி அடையாது. ஆச்சாரியரே! புயலினால் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் கைங்கரியத்தைத் தாங்கள் தான் நடத்த வேண்டும். தங்கள் பெயரால் நடத்தப் பிரியப்படாவிட்டால் 'ஈழத்து நாச்சியார் அறச்சாலை' என்று வைத்து நடத்துங்கள்! ஈழத்தரசி புத்த மதத்தில் பற்றுக் கொண்டவர் என்பது தங்களுக்குத் தெரியுமோ, என்னமோ? 'பூதத்தீவு' என்று மக்கள் அழைக்கும் போதத் தீவில் உள்ள புத்த பிக்ஷுணிகளின் மடத்திலே தான் அவர் சாதாரணமாக வசிப்பது வழக்கம்!" என்றார் இளவரசர்.

புத்த பிக்ஷுவும் இதற்கு மாறு சொல்லாமல் ஒப்புக் கொண்டார்.

* * *

மறுநாள் புயலின் உக்கிரம் தணிந்தது. பொங்கிவந்த கடலும் பின்வாங்கிச் சென்றது. ஆனால் அவற்றினால் ஏற்பட்ட நாசவேலைகள் வர்ணனைக்கு அப்பாற்பட்டிருந்தன. நாகைப் பட்டினம் நகரில் பாதி வீடுகளுக்குமேல் கூரைகளை இழந்து குட்டிச்சுவர்களாக நின்றன. அந்த வீதிகளில் ஒன்றில் இளவரசர் அருள்மொழி வர்மர் வியாபாரியின் வேடத்தில் தோளில் ஒரு மூட்டையைச் சுமந்து நடந்து கொண்டிருந்தார். அவர் பின்னால் முருகய்யன் இன்னும் ஒரு பெரிய மூட்டையைச் சுமந்து தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான். புயலினாலும் வெள்ளத்தினாலும் நேர்ந்திருந்த அல்லோல கல்லோலங்களைப் பார்த்துக் கொண்டு அவர்கள் போனார்கள்.

இடிந்த வீடு ஒன்றின் சுவரின் மறைவிலிருந்து ஒரு பெண் அவர்கள் வருவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவள் வேறு யாரும் இல்லை. முருகய்யனின் மனையாள் ராக்கம்மாள் தான். இளவரசரும் முருகய்யனும் அவள் நின்ற இடத்துக்கு அருகில் வரும் வரையில் அவள் பொறுமையோடு காத்திருந்தாள். திடீரென்று வெளிப் புறப்பட்டு ஓடி வந்து இளவரசரின் முன்னால் வந்து காலில் விழுந்தாள். முருகய்யன் அவளுடைய கவனத்தைக் கவர முயன்றான். உதட்டில் விரலை வைத்துச் சமிக்ஞை செய்தான். 'உஷ்' 'உஷ்' என்று எச்சரித்தான். ஒன்றும் பயன்படவில்லை.

"சக்கரவர்த்தித் திருமகனே! வீராதி வீரனே! பொன்னியின் செல்வா! சோழ நாட்டின் தவப் புதல்வா! சூடாமணி விஹாரத்தில் முழுகிப் போய் விடாமல் தாங்கள் பிழைத்து வந்தீர்களா? என் கண்கள் என்ன பாக்கியம் செய்தன?" என்று கூச்சலிட்டாள்.

வீதியில் அச்சமயம் அங்கு மிங்கும் போய்க் கொண்டிருந்தவர்கள் அத்தனை பேருடைய கவனமும் இப்பொழுது இளவரசரின்பால் திரும்பின. (தொடரும்)



# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## பத்தாவது தமிழ் இசை விழா

## 15 - 4 - 53 முதல் 19 - 4 - 53 வரை

சென்னை எஸ்பிளனேட்டிலுள்ள

அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும்

★

### நிகழ்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| 15—4—53 | தமிழ் இசைக் கல்லூரி மாணவிகள் | — பாட்டு |
| புதன்கிழமை | ஜனார்த்தனம் | — பிடில் |
| மாலை 4 மணி | பாலக்காடு மகாதேவன் | — மிருதங்கம் |
| மாலை 6 மணி | எம். எஸ். சுப்புலக்ஷ்மி | — பாட்டு |
| | ஆர். கே. வெங்கடராம சாஸ்திரி | — பிடில் |
| | மாஸ்டர் டி. கே. மூர்த்தி | — மிருதங்கம் |
| | உமையாள்புரம் கோதண்டராம ஐயர் | — கடம் |
| 16—4—53 | செம்மங்குடி சீனிவாச ஐயர் | — பாட்டு |
| வியாழக்கிழமை | மாஸ்டர் டி. என். கிருஷ்ணன் | — பிடில் |
| மாலை 6 மணி | பாலக்காடு மணி ஐயர் | — மிருதங்கம் |
| | புதுக்கோட்டை சுவாமிநாத பிள்ளை | — கஞ்சிரா |
| | உமையாள்புரம் கோதண்டராம ஐயர் | — கடம் |
| இரவு 9-30 முதல் 11 மணி வரை | பி. எஸ். வீருசாமி பிள்ளை, கக்காயி நடராஜசுந்தரம் பிள்ளை | — நாதஸ்வரம் |
| | நாச்சியார்கோவில் ராகவன் பிள்ளை | — தவுல் |
| 17—4—53 | எம். எம். தண்டபாணி தேசிகர் | — பாட்டு |
| வெள்ளிக்கிழமை | கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை | — பிடில் |
| மாலை 6 மணி | பழனி எம். சுப்பிரமணிய பிள்ளை | — மிருதங்கம் |
| இரவு 9-30 முதல் 11 மணி வரை | குளிக்கரை பிச்சையப்பா | — நாதஸ்வரம் |
| | நாச்சியார்கோவில் ராகவன் பிள்ளை | — தவுல் |
| 18—4—53 | எம். கே. தியாகராஜ பாகவதர் | — பாட்டு |
| சனிக்கிழமை | மைசூர் டி. சௌடையா | — பிடில் |
| மாலை 6 மணி | எஸ். வி. எஸ். நாராயணன் | — மிருதங்கம் |
| | ஆலங்குடி ராமச்சந்திரன் | — கடம் |
| | மன்னார்குடி நடேச பிள்ளை | — மோர்சிங் |
| இரவு 9-30 முதல் 11 மணி வரை | டி. என். இராஜரத்தினம் பிள்ளை | — நாதஸ்வரம் |
| | நாச்சியார்கோவில் ராகவன் பிள்ளை | — தவுல் |
| 19—4—53 | எம். எல். வசந்தகுமாரி | — பாட்டு |
| ஞாயிற்றுக்கிழமை | பரூர் அனந்தராமன் | — பிடில் |
| மாலை 6 மணி | கிருஷ்ணமூர்த்தி ராவ் | — மிருதங்கம் |
| | டி. எஸ். வில்வாத்திரி ஐயர் | — கடம் |
| இரவு 9-30 முதல் 11 மணி வரை | திருவெண்காடு சுப்பிரமணியம் (தம்புரா சுருதியுடன்) | — நாதஸ்வரம் |

(நிகழ்ச்சிகள் மாற்றத்திற்குரியன)

**சீசன் ரிசர்வ்டு வகுப்பு ரூ. 15, முதல் வகுப்பு ரூ. 10, இரண்டாம் வகுப்பு ரூ. 5**


சீசன் டிக்கட்டுகள் தமிழ் இசைச் சங்க காரியாலயத்திலும், (8/9, சிங்கண்ண நாய்க்கன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை) அண்ணாமலை மன்றத்திலும் கிடைக்கும்.

மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முழுக் கட்டணம் வசூலிக்கப்படும்

சிற்றுண்டிக்கான வசதிகள் அண்ணாமலை மன்றத்திலேயே ஏற்பாடு செய்திருக்கிறோம்.

போக்குவரத்து: இரவு கச்சேரி முடிந்ததும் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.


உலகத்தின் உச்சி உணர்ச்சிக்கு
போனிக்ஸ்
விசிறிகளை உபயோகியுங்கள்
PHOENIX
FANS
ஆபீஸிலோ அல்லது வீட்டிலோ இருந்தவண்ணமாகவே, குளிர்ந்த கடற்காற்றையோ, மந்தமாருதத்தையோ அனுபவிக்க, போனிக்ஸ் விசிறிகளைப் பொருத்தினாலேயே போதுமானது!
EWI LTD
R.M.S. & CO. LTD., 16, Broadway, Madras. 1
டேபிள், சீலிங், பெடஸ்டல், எக்ஸாஸ்ட் ரக விசிறிகளும் கிடைக்கின்றன


தென்னிந்தியாவின் தலைசிறந்த
டி.எஸ்.ஆர்
தயாரிப்புகள்
DASANGAM
T.S.R.&Co.
BATHING POWDER
T.S.R.&Co.
FLOWER DUST
தசாங்கம்,
பரிமள
ஸ்நானப்பொடி
புஷ்பத்தூள்
அரகஜா
டி.எஸ்.ஆர் & கோ, கும்பகோணம்

★ ஆனந்த விகடன், ஜெமினி ஸ்டுடியோ அதிபரான ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்களின் உதவியால் ஹரிவனம் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் கும்பாபிஷேகம் மார்ச் மாதம் 22-ந் தேதி சிறப்பாக நடந்தது.

1. ஹரிவனத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாசப் பெருமாள். 2. ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் தம் பேரக் குழந்தையுடன் சுவாமி தரிசனம் செய்கிறார். 3. ஸ்ரீமதி வாஸன் கும்பாபிஷேக தீர்த்த கலசத்துடன் வருகிறார். 4. புதிதாக நிர்மாணிக்கப் பெற்றுள்ள ஆலயமும் கும்பாபிஷேகத்துக்கு வெளியூர்களிலிருந்து விஜயம் செய்திருந்த பல பிரமுகர்களும்.


1


2


3

# ஹரிவனம் கும்பாபிஷேகம்


4

# சேகர்— என் குழந்தை

எஸ்.வி.எஸ்



இதோ! இந்த அறையில் சுழல் நாற்காலியில் அமர்ந்து, கால்களை மேஜைமீது நீட்டி, வலது கையை முகவாய்க் கட்டையின் மீது வைத்துக்கொண்டு சிந்தாகுலனாய் உட்கார்ந்திருக்கிறாரே, இவர் யார் தெரியுமா? 'தெரியாதே' என்கிறீர்களா? வாஸ்தவம் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான். ஏனெனில் அவர் பொது ஜனங்களின் கண் பார்வைக்குச் சுலபமாக இலக்காகும்படி நடந்து கொள்பவர் அல்ல. அதனால் என்ன? அவருடைய பெயரைச் சொன்னால், 'ஓகோ! அவரா!' என்று ஆச்சர்ய மிகுதியால் விழிகள் பிதுங்கக் கேட்பீர்கள். ஏனெனில் அவர் பெயர் இன்று தமிழ் நாட்டில் மூலை முடுக்கெல்லாம் பரவியிருக்கிறது. குழந்தைகள் முதல் கிழவர் வரையில் எல்லா வயதினரிடையும், அந்தப் பெயர் பரவியிருக்கிறது! ஆழ்ந்த விஷ்ணு பக்தர்களுக்கு ஸ்ரீரங்கம் என்று சொன்னால் எத்தகைய புல்லரிப்பு ஏற்படுமோ, தீவிர முகம்மதிய மதத்தினருக்கு மெக்கா என்று கூறிய மாத்திரத்தில் எப்படி மெய் சிலிர்க்குமோ, அத்தகைய உணர்ச்சிதான் இன்றைய கல்லூரி மாணவர்களுக்கும் ஏற்படும் அவருடைய பெயரைக் கேட்டால். 'அப்படிப் பட்ட திருநாமம் தான் என்ன?' என்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன், சொல்லுகிறேன். சொல்லத்தானே வந்திருக்கிறேன்!

'அற்புத அரசி' என்ற சினிமாப் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அதில் காதலியைக் காப்பாற்ற வேண்டி, கதாநாயகன் காட்டில் கரடியுடன் மல்யுத்தம் புரியும் காட்சியைப் பார்த்திருக்கிறீர்களா? 'என்ன, கேட்டீர்கள்! 'பார்த்திருக்கிறீர்களா' என்று கேட்கிறீர்கள்? நல்ல கேள்வி கேட்டீர்கள், போங்கள்! அந்தக் காட்சியைக் கண்ட போது அப்படியே என் மயிர்க்கால்கள் எல்லாம் சட்டிபோல் நின்று விட்டதை இப்போது நினைத்தால்கூட என்னமோ செய்கிறது' என்கிறீர்களா? பேஷ்!

'நவீன நல்லதங்காள்' என்ற படம் பார்த்திருக்கிறீர்களா? அதில் நல்லதங்காள், தன் கணவனிடம், "நான் புராண காலத்து நல்லதங்காளைப் போல் என் ஏழு குழந்தைகளையும் பாழுங் கிணற்றில் தள்ள மாட்டேன்! ஏனெனில், அதைவிடக் கேவலமாக நீதான் இருக்கிறாயே! என் குழந்தைகளை உன்னிடமே ஒப்படைத்து விட்டு, நான் போகிறேன்! எனக்கு 'விவாக ரத்து' கொடு!" என்று கேட்கும் பயங்கர ஹாஸ்யக் காட்சி நினைவுக்கு வருகிறதா?

"நினைவுக்கு வருவதாவது! சதா அதே நினைவுதான். நான் அடிக்கடி, தனியாக இருக்கும்போது, விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விடுவேன். ஏனெனில் அந்தக் காட்சி எனக்கு நினைவுக்கு வந்து விடுவதுதான்!" என்கிறீர்களா? நல்லது, ரொம்ப நல்லது.

பின், 'கபால மோக்ஷம்,' 'வேதாள சுந்தரி' முதலிய படங்களைப் பார்த்திருக்கிறீர்களா?

'என்ன கேள்வி கேட்டீர்கள்? இந்தப் படங்கள் ஒவ்வொன்றையும் இருபது, இருபது தடவை பார்த்திருக்கிறேனே!' என்கிறீர்களாக்கும். ரொம்ப பேஷ்!

பின் நீங்கள் நிச்சயம் டைரக்டர் சத்திய சங்கர் என்ற பெயரைக் கேள்விப் பட்டிருப்பீர்கள்! அந்த மாபெரும் பெயருக்கு உடைமையான மனிதர்தான், இதோ இந்தச் சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்— டைரக்டர் சத்திய சங்கர்.

இன்று இந்த டைரக்டர் சிந்தைக்குள் புகுந்திருக்கும் விஷயம் என்ன? எதைப் பற்றி இவ்வளவு தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்?

ஆம்; டைரக்டரின் மூளைக்குள் வேலை செய்யும் விஷயம் ஒரு முக்கியமான விஷயந்தான். அதைப் பற்றித் தெரிந்து கொள்ளு முன், அவர் அபூர்வ படங்களில் வரும் அதி அற்புத கதா பாத்திரங்களையும் நடிகர்களையும் எப்படித் தேர்ந்தெடுப்பார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சத்திய சங்கர், ஒருநாள் காரில் போய்க் கொண்டிருந்தபோது, தேனைவிட இனிக்கும் குரலில் "தயிரோ தயிர்" என்ற மொழிகள் அவர் காதில் விழுந்தன. திரும்பிப் பார்த்தார். அவருடைய 'காமிராக் கண்'களுக்குத் தலையில் தயிர்ப் பானையை ஏந்திச் செல்றவள் அதிரூப சௌந்தரியாகப் பட்டாள். திரைக்கு ஏற்ற 'முக வெட்டு' உள்ள முகம் என்று கருதினார். ஆம், அவ்வளவுதான்! தயிர் விற்றுக் கொண்டிருந்த குப்பச்சியைச் சினிமா வானில் நளின சுந்தரி என்ற பெயரில் ஜொலிக்கும் அற்புத நட்சத்திரமாக்கி விட்டார்!

'நவீன நல்லதங்காள்' என்ற படத்தில் கதாநாயகியான நல்லதங்காள் பாகத்தைக் குப்பச்சி — இல்லை, நளினசுந்தரி ஏற்று நடித்தாள். அவளுடைய வெட்டுப் பேச்சும், துடுக்கு நடையும், ரஸிக மகா ஜனங்களைக் கவர்ந்து விட்டன.

மேலும், சாதாரணமாக வீட்டில் தம்பதிகளிடையே சச்சரவு ஏதாகிலும் ஏற்பட்டு, மனைவி சற்றுத் துடுக்காகப் பேசினால், "என்ன இன்றைக்குத் தேவி நவீன நல்லதங்காள் அவதாரமோ?" என்று கணவன் கேட்கும் அளவுக்கு நளினசுந்தரியின் புகழ் பரவியது. இப்படி சர்வ சாதாரணமாக வீடுகளில் பேசும் அளவுக்கு ஒரு குண சித்திரத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்த பெருமை டைரக்டர் சத்தியசங்கரைச் சேர்ந்ததல்லவா? தயிர் விற்றுக்கொண்டிருந்த குப்பச்சியிடம் இப்படியொரு திறமை யிருக்கிறது என்பதை உலகுக்குக் காட்டியவ ரல்லவா சத்தியசங்கர்!

இப்படி அவர் சிருஷ்டித்துள்ள நாடக பாத்திரங்கள் அனந்தம்!

இத்தகைய திறமைசாலியான டைரக்டர், சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜப்பானிய படம் ஒன்றைப் பார்த்தார். அதிலிருந்து அவர் மனம் நிம்மதியை இழந்து விட்டது! நாம் எத்தனையோ குணசித்திர பாத்திரங்களைச் சிருஷ்டித்து என்ன பயன்? குணசித்திர நடிகர்களைச் சிருஷ்டித்து என்ன புண்ணியம்' இந்தமாதிரி குழந்தையைப் பிரதான பாத்திரமாகக் கொண்டு ஒரு படம் கூட எடுக்கவில்லையே! குழந்தையின் உள்ளத்தில் அடங்கிக் கிடக்கும் நடிப்புக் கலையை வெளிக் கொணர முயலவில்லையே! இதற்கு என்ன செய்யலாம்? முதலில் முகவெட்டும், நடிப்புத் திறனும், சொன்னால் புரிந்து கொள்ளும் சாமர்த்தியமும் உள்ள குழந்தை தேவை. பின்னர் குழந்தையைப் பிரதான பாத்திரமாகக் கொண்ட கதை தேவை. இதற்கு என்ன செய்வது என்ற யோசனையில்தான் இன்று டைரக்டர் மூழ்கியிருந்தார்.

இந்த யோசனை இன்று நேற்றல்ல சென்ற நான்கு மாதங்களாகவே, அவர் மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. கடைசியாகக் 'கதை வேண்டுமானால் பிறகு பார்த்துக்



கொள்ளலாம். முதலில் நடிப்புத் திறனும், துறு துறுப்பான பார்வையும், சமத்காரப் பேச்சும், இனிய குரலும், நல்ல முகவெட்டும் பொருந்திய குழந்தை நம் தமிழ்நாட்டில் கிடைக்கிறதா, பார்ப்போம்' என்று தீர்மானித்து, பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். அதாவது, குழந்தைகள் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்ட பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு, 'சத்தியா ஸ்டுடியோ'வுக்குக் காலை பத்து மணிக்கு வரவும் என்று விளம்பரம் செய்திருந்தார். அதன்படி பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சத்தியா ஸ்டுடியோவுக்கு வந்திருந்தார்கள். குழந்தைகளின் முதல் பரிசோதனையை, சத்திய சங்கர் தமது பிரதம உதவியாளரான ஜெயராமனிடம் ஒப்படைத்திருந்தார்.

முதல் நாள் சுமார் நூறு குழந்தைகள் வந்திருந்தன. அவற்றில் முதல் பார்வையிலேயே எழுபது குழந்தைகளை நீக்கி விட்டார் ஜெயராமன். பாக்கி முப்பது குழந்தைகளைக் காமிராவின் முன்பும், ஒலிப் பதிவுக் கருவிகளின் முன்பு நிறுத்தி வைத்தும், மற்றும் சில கேள்விகளைக் கேட்டும் பரிசோதித்து,



இன்ஸ்பெக்டர் :—அடே அப்பா! இன்றைக்கு ஏகப்பட்ட சைக்கிள் கேஸ்கள் இருக்கும் போலிருக்கிறதே! இவர்களையெல்லாம் ரோட்டிலேயே சைக்கிள் சவாரி செய்ய விடக் கூடாது? உம். முதல் கேஸ் என்ன?

கான்ஸ்டபிள் :—ரோட்டுப் பிளாட்பாரத்திலே சைக்கிளை விட்டுக் கொண்டு போனார், ஸார், இந்த மனிதன்! இன்று இவர்தான் முதல் கேஸ்!

இருபத்தைந்து குழந்தைகளும் ஒதுக்கப்பட்டன. கடைசியாக ஐந்து குழந்தைகளை ஜெயராம், சினிமாவில் நடிக்கத் திறமையுள்ள குழந்தைகள் என்று தீர்மானித்து, தேர்ந்தெடுத்தார். டைரக்டர் சத்திய சங்கரிடம் இந்தச்செய்தியை அறிவித்து, கடைசித் தேர்தலை நிகழ்த்த அவரை அழைத்துவந்தார்.

டைரக்டர் சத்தியசங்கர் வந்து இந்த ஐந்து குழந்தைகளையும் பரிசோதித்தார். ஐந்தும் சினிமாவில் நடிப்பதற்குச் சற்றும் லாயக்கற்றவை என்று தீர்ப்புக் கூறினார்.

மறுநாளும் விளம்பரம் செய்யப்பட்டது. அன்றும் ஏராளமான குழந்தைகள் வந்திருந்தன. முதல் நாளைப் போலவே ஜெயராமன் சில குழந்தைகளைத் தேர்ந்தெடுத்தார் — டைரக்டர் சத்திய சங்கர் நிராகரித்தார்.

இப்படி ஒரு மாத காலமாகவே நிகழ்ந்து வந்தது. ஒரு குழந்தையை யாகிலும் தேர்ந்தெடுக்காததால், ஊரில் டைரக்டர் சத்திய சங்கருக்குக் கெட்ட பெயர்தான் பரவத் தொடங்கியது. "ஸ்டுடியோவா நடத்துகிறான் இவன்; ஊரிலிருக்கிற குழந்தைகளை யெல்லாம் வரவழைச்சு, ஏதோ வேடிக்கை பண்ணுகிறான்!" என்று ஏக வசனத்தில் பேசத் தலைப்பட்டார்கள்! இவற்றில் சில டைரக்டர் சத்திய சங்கர் காதுவரை எட்டாமல் ஒன்றும் போய்விடவில்லை, எட்டத்தான் செய்தன. நெஞ்சுறுதியுள்ள, கருமத்தில் கண்ணுயுள்ள சத்திய சங்கர் இவற்றைச் சற்றும் பொருட்படுத்தவில்லை.

ஆனால் அன்று சத்தியசங்கர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது, ஒரு உலுக்கு உலுக்கி அவர் சிந்தனையைக் கலைத்தது, வெளியிலிருந்து வந்த "நிறுத்துங்கப்பா, உங்கள் பரிசோதனை" என்ற கலவரமும், அதனிடையில் இனிய மெல்லிய குரலில் "நான் டைரக்டரை நேரில் பார்த்துப் பேசுகிறேன்! அவரோடு நானா பேசிக் கொள்கிறேன்?" என்று வந்த மொழிகளுந்தான்! சிந்தனை கலைந்து பத்து செகண்டுகள்கூட ஆகவில்லை. இருபத்திரண்டு இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண், நாலு வயதுக் குழந்தையை ஏந்திக்கொண்டு டைரக்டர் அறைக்குள் நுழைந்தாள். டைரக்டர் நாற்காலியில் சத்திய சங்கர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் அப்படியே திக்பிரமை பிடித்து நின்று விட்டாள் அந்தப் பெண்.

சத்திய சங்கரும், "யாரு, கருணாவா?" என்று கேட்ட வாய் மூடவில்லை!

"ஆமாம், நீங்கள் சங்கரா?" என்றாள் அந்தப் பெண்மணி.

"நீ இங்கே எப்படி வந்தாய்?"

"பத்திரிகையில் விளம்பரத்தைப் பார்த்துத்தான் வந்தேன்" என்றாள் கருணா.

"ஓகோ! இந்தக் குழந்தையைச் சினிமாவில் சேர்க்கலாம் என்ற உத்தேசத்தோடு வந்தாயோ?" என்று கேட்டார் டைரக்டர் சத்திய சங்கர்.

"ஆமாம்" என்றாள்.

"குழந்தை, என்ன உன் குழந்தையா?"

"ஆமாம்; என் குழந்தைதான்" என்றாள்.

"இவனுடைய அப்பா......"

"காலமாகி......" என்று சொல்ல வாயெடுத்து, பிறகு தலையைக் குனிந்து கொண்டாள்.

"அப்படியானால் நீ......" 'கைம்பெண்ணு' என்று கேட்க நினைத்தார் சத்திய சங்கர். ஆனால் அந்த வார்த்தையைச் சொல்லி விட்டால், அவர் நாக்குச் சுட்டுவிடுமோ என்று பயந்து நிறுத்தி விட்டாற் போலிருந்தது! அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பதை உணர்ந்த கருணா, "ஆமாம்" என்று கூறும் பாவனையில் தலையை ஆட்டி விட்டு மறுபடியும் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

டைரக்டர் சத்திய சங்கர் அப்படியே திக்பிரமை பிடித்து நின்று விட்டார். திறந்த வாய் மூடவில்லை. முகத்தில் சொல்லொணாத துயரக் களை பரவியிருந்தது. இப்படி இருவரும் எத்தனை நாழிகை மௌனம் சாதித்தார்களோ தெரியாது.

'டீங்' என்ற மணியோசையுடன் "சித்தி, மணி..." என்று குழந்தையின் மழலைக் குரல் கேட்டதும்தான் இருவரும் தங்கள் சுயப் பிரக்ஞைக்கு வந்தார்கள்.

சுகுணா, சற்றும் எதிர்பாராத விதத்தில் தனது பால்ய நண்பனான சங்கரனை, சினிமா டைரக்டராகச் சந்தித்ததுமே, அவள் தன் செயலிழந்து விட்டாள். அவள் இடுகாறும் தூக்கி வந்த சிறுவன், அவளுக்கு அறிவியாமல், மெள்ள அவள் இடையைவிட்டு இறங்கி விட்டான். அந்த அறையில் என்ன என்ன இருக்கின்றன என்று சுற்றுமுற்றும் பார்த்தான். மேஜையின் மீது பளபளவென்று, ஆபீஸ் பையனைக் கூப்பிடும் மணியிருக்கவே, அந்தப் பளபளப்பைக் கண்டு ஈர்க்கப்பட்டுச் சிறுவன் அதன் அருகில் ஓடி, அதைக் கையில் எடுக்க மெள்ளத் தொட்டான். உடனே, 'டங்' என்று இனிய சத்தம் கேட்டது. சிறுவனின் முகமும் மலர்ந்தது. சங்கரும் சுகுணாவும், தாங்கள் இழந்திருந்த சுயநினைவைத் திரும்பப் பெற்றனர்.

"சேகர்...சேகர்...அங்கெல்லாம் போகப் படாது! வா, கண்ணு! அதெல்லாம் தொட்டால் அந்த மாமா அடிப்பா..." என்று கூறினாள் சுகுணா.

சேகர் என்று அழைக்கப்பட்ட அந்தச் சிறுவன், சத்தியசங்கரின் முகத்தை உற்றுக் கவனித்தான். 'இவர் அடிக்கக் கூடிய மாமாவா?' என்ற ஆராய்ச்சியில் இறங்கியிருந்தான் குழந்தை. சங்கர், அந்த மணியை எடுத்துக் கொடுத்து, "இந்தா, இதை எடுத்துக்கோ, அடிக்க மாட்டேன், வா சேகர். எங்கே, என் கிட்டே வா" என்று அன்புடன் கூப்பிட்டார்.

சிறுவன் தயக்கத்துடனேயே சங்கரின் அருகில் சென்றான். சங்கர் அவனை மெள்ளத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார்.

"அது யாரு?" என்று கேட்டார் டைரக்டர் சுகுணாவைச் சுட்டிக் காட்டி!

"சுத்தி" என்றான் குழந்தை.

அதைக் கேட்ட சங்கர், சிரித்துக் கொண்டே, "சுத்தியும் இல்லே, அரிவாளும் இல்லேயடா, அம்மாடா அவள்" என்றார்.

"அம்மா, இல்லே சுத்திதான்..." என்றான் மழலைமொழியில் குழந்தை.

"உன்னை அம்மா என்று கூப்பிடமாட்டானா? சுத்தி என்று ஏன் கூப்பிடுகிறான்...?" என்று கேட்டார் சத்தியசங்கர்.

"என் மூத்தாள் குழந்தைகள் எல்லாம் என்னைச் 'சித்தி சித்தி' என்று கூப்பிடும். அதனாலே இவனுக்கும் அந்தப் பழக்கம் ஏற்பட்டுப் போச்சு" என்றாள் சுகுணா.

இந்த மொழிகள் சத்திய சங்கரின் காதுகளில் பேரிடிபோல் விழுந்தன.

"என்ன சுகுணா! நீ இளையாளாகவா வாழ்க்கைப் பட்டாய்? என்ன கஷ்டம்!..." என்று பதறிக் கூறினார்.

சுகுணா தலைகுனிந்து நின்றாள்.

சங்கர் நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, "சுகுணா, நான் ஊரை விட்டு வந்த பிறகு என்னவெல்லாம் நடந்தது? உனக்கு எத்தகைய கஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டன? எல்லாம் எனக்கு விவரமாகச் சொல்லேன்" என்று இறைஞ்சினார் டைரக்டர்.

"அந்தப் பழங் கதையெல்லாம் பேசுவதற்கு நான் இங்கு வரவில்லை. நீங்கள் இந்தக் குழந்தையைச் சினிமாவில் நடிக்க எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா, இல்லையா? அந்த விதத்தில் எனக்கு உபகாரம் பண்ணப் போகிறீர்களா, இல்லையா?" என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள் சுகுணா.

"சுகுணா! நீ என்மீது எவ்வளவு கோபப் பட்டாலும் ஏற்க வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ஆகவே, நீ கோபித்துக் கொள்கிறாயே என்று வருந்தவில்லை! உனக்கு உதவிதானே வேண்டும்? வேண்டிய உதவி தருகிறேன். உனக்குத் தேவையான பணம் தருகிறேன். ஆனால் உன்னிடம் பேச வேண்டும்......"

சுகுணா, "உங்களிடம் யாசகம் கேட்கவும் வரவில்லை; உங்களுடன் எனக்குத் தனியாகப் பேச ஒரு விஷயம் கூடக் கிடையாது. ஏன், நீங்கள்தான் இந்த ஸ்டுடியோவுக்கு டைரக்டர் என்று தெரிந்திருந்தால், இந்த ஸ்டுடியோ வாசலில் காலடி கூட எடுத்து வைத்திருக்க மாட்டேன்......ஆனால் வந்தாகி விட்டது. இந்தக் குழந்தையை நீங்கள் சினிமாவில் சேர்த்துக் கொண்டு எனக்கு உதவிசெய்ய முடிந்தால் செய்யுங்கள். இல்லையேல், வேண்டாம்......" என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் சொன்னாள்.

சங்கருக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. ஒரு கணம் யோசித்தான். பிறகு, "சுகுணா! குழந்தையைச் சினிமாவில் சேர்ப்பது என்பது அவ்வளவு சுலபமில்லை. எவ்வளவோ பரிசோதனைகள் செய்ய வேண்டும். அவற்றையெல்லாம் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்...எத்தனை நாட்களுக்குப் பிறகு நாம் ஒருவரையொருவர் இன்று சந்தித்திருக்கிறோம். மனம் விட்டுப் பேச வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நீ என்னுடன் இப்பொழுது பங்களாவுக்கு, வா! அங்கே போய்ப் பேசுவோம்!" என்றார்.

அவர் முக பாவம், அவர் கூறிய மொழிகளில் குரலில் தொனித்த உள் அன்பு யாவும் சேர்ந்து அவளை மந்திரத்தில் கட்டுண்ட சர்ப்பம் போல் செயலிழக்கச் செய்தன. அப்படியே நின்றாள். எத்தனையோ மனோ பாவங்களைத் திரைக்குக் கொணர்ந்த டைரக்டர் சத்தியசங்கருக்கா தெரியாது, இப்பொழுது இவள் எத்தகைய நிலையிலிருக்கிறாள் என்பது? எனவே, 'டங்' என்று மேஜைமீதிருந்த மணியை ஓங்கி அடித்தார். 'காக்கி' உடை உடுத்தியிருந்த சேவகன் ஒருவன் வந்து அவர் எதிரில் நின்றான்.

"டேய் வண்டியை எடுக்கச் சொல்லுடா!" என்றார் டைரக்டர் சத்தியசங்கர்.

பையன் வேகமாக ஓடினான். சற்று நேரத்தில் பள பள வென்று மின்னிக் கொண்டு ஒரு கார் அந்த அறை வாசலில் வந்து நின்றது.

"சித்தி காரு, காரு!" என்றான் பையன்.

"ஏனடா சேகர், நாம் காரிலே போவோமா?" என்று கூறிக்கொண்டே டைரக்டர் சத்தியசங்கர் குழந்தையை எடுத்துக் கொண்டார்.

"ஓ, போவோம்" என்றான். "வா, கருணா! ஒன்றும் யோசிக்காதே! வண்டியில் ஏறு" என்று அன்புடன் அழைத்தார்.

கருணா வண்டியின் பின் ஸீட்டில் ஏறி அமர்ந்தாள். அவள் பக்கத்தில் சேகரை உட்கார வைத்தார். முன் ஸீட்டில், டிரைவருக்குப் பக்கத்தில், சத்தியசங்கர் உட்கார்ந்து கொண்டார். கார் புறப்பட்டது!

ஸ்டுடியோ 'கேட்' வரைக்கும் நூற்றுக் கணக்கான பெற்றோர்களும், குழந்தைகளும் பரிசோதனைகளுக்காகக் காத்துக் கொண்டு நின்றனர். அவர்களில் சிலர் வண்டியில் கருணாவையும், சத்தியசங்கரையும் பார்த்ததும், 'குசு குசு' என்று பேசத் தொடங்கினர்.

★

தியாகராஜ நகரில், இரு பக்கமும் மரங்கள் அடர்ந்த அந்த விசாலமான திவான் பகதூர் தனகோடி செட்டியார் ரோடில் பகல் பதினொரு மணிக்கு, தபால்காரர் ஒருவர் நடந்து வந்துகொண்டிருந்தார். 'அப்பப்பா! என்ன வெய்யில், என்ன வெய்யில்! தலையைப் பொசுக்குகிறது! நல்ல வேளை, சர்க்காரில் காலுக்குச் செருப்பாகிலும் 'சப்ளை' பண்ணினாங்களே! இல்லையானால் கால் பொசுங்கிக் கொப்பளம் வந்திருக்கும்' என்று நினைத்துக் கொண்டே வந்தார். இப்படி வந்தவர் திடீர் என்று ஒரு வீட்டு வாசலில் நின்றார். இரும்புக் 'கேட்டு' சாத்தியிருந்தது. அதுமட்டு மல்ல. 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற பலகை வேறு தொங்கியது. மேலும் உண்மையிலேயே இரண்டு நாய்கள் 'கேட்'டுக்கு உள் பக்கம் கழுத்தில் 'காலர் பட்டையுடன்' நின்று கொண்டிருந்தன. அந்த வீட்டுக்குத் தபால் வந்திருந்தது. உள்ளே கொண்டு போய்த் தபாலைக் கொடுத்துத் தொலைத்து விட்டு வரமுடியாதபடி 'போஸ்ட்' என்று குரல் கொடுத்தால், உள்ளே யிருப்பவர்கள் கேட்க முடியாதபடி வீடு 'கேட்'டிலிருந்து அவ்வளவு தூரம் தள்ளி யிருந்தது. 'போஸ்ட்மான்' என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார். பணக்காரர் செய்யும் இத்தகைய அக்கிரமத்தை வாயார மனதார ஒரு கணம் வைதார். பிறகு தூரத்தில், 'குரோட்டன்ஸ்' செடிகளினூடே ஆள் நடமாட்டம் தெரியவே, தபால்காரர், "போஸ்ட்! கருணாபாய்!" என்று குரல் கொடுத்தார்.

அதைக் கேட்ட, கருணா வேகமாகத் தபாலைப் பெற்றுக் கொள்ள வந்தாள். "கேட்டையும் பூட்டி வைச்சிட்டு, வாசலில் நாயையும் கட்டி வைச்சிட்டா, எப்படியம்மா டபால் கொடுத்து விட்டுப் போறது?" என்று கூறிக் கொண்டே ஒரு உறையைக் கொடுத்தார் தபால்காரர்.

"இந்தக் கேட்டும் என்னதல்ல; இந்த நாய்களும் என்னதல்ல; இந்த வீடும் என்னதல்ல; நான் என்னப்பா செய்யட்டும்?" என்று கூறிக் கொண்டே கவரைப் பெற்றுக் கொண்டாள் கருணா.

அன்பார்ந்த கருணாவுக்கு,

அனேக ஆசீர்வாதம். நீ அனுப்பி வைத்த ரூபாய் 50 வந்து சேர்ந்தது. நல்ல சமயத்தில் வந்தது. அந்தப் பணம் வந்ததனால்தான் அத்திம்பேருக்குத் தக்க மருந்து வாங்கிக் கொடுக்க முடிந்தது. நல்ல குணமும் ஏற்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அவர் எழுந்து நடமாடக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். தலைக்கு மிஞ்சிய பிள்ளை யிருந்து பண்ண வேண்டிய உதவியை நீ செய்கிறாய். இதை நினைத்தால் எனக்குக் கண்களில் நீர் வந்து மறைத்துக் கொள்கிறது. குழந்தை சேகர் சௌக்கியமாக இருக்கிறானா?

அங்கே அத்தை அத்திம்பேரை ரொம்பவும் விசாரித்ததாகச் சொல்லவும். ஆசீர்வாதம்,

காமாட்சி.

இந்தக் கடிதத்தைப் படித்ததும், அதிலும் அந்தக் கடைசி வரியைப் படித்ததும், கருணாவுக்குச் சிரிப்பு வந்தது. 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

இந்தச் சமயத்தில் "சேகர், சேகர்! நாய் வாலைப் பிடித்து இழுக்காதே! அது கடித்து விடப் போகிறது!" என்று சொல்லிக் கொண்டே சங்கர் வந்தார். (தொடரும்)



"இதே இடத்தில் நாம் போன வருஷம் சந்தித்திருக்கிறோம். உங்களுக்கு நினைவு இருக்கிறதா, ஸார்?"

"இல்லையே, ஸார்! என்னை உங்களுக்குத் தெரிகிறதா?"

"ஆகா பேஷாய்த் தெரிகிறது. உங்களை விட உங்களிடம் இருக்கும் குடை எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது!"

"போன வருஷம் என்னிடம் குடையே கிடையாதே!"

"ஆமாம். உங்களிடம் கிடையாது. வாஸ்தவம். அந்தக் குடை என்னுடையதல்லவா?"

# நீரிழிவு

## ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு** (DIABETES) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் ஸைன்ஸின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதை குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்திலின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் இடையாது; இன்ஜக்ஷன் இடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

•

***50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0***

*(பாக்கிங், தபாற் செலவும் இனம்)*

•

**வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K.M.)**

**தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா**

---

*Smart Appearance*

**IS AN ASSET IN** *Society*



**VENKATESH VASTRALAYA**

**RETAIL SHOWROOM at**
**2. THAMBU CHETTY STREET**
**MADRAS. 1... PHONE: 4688**

**வெங்கடேஷ் வஸ்த்ராலயா**

**2, தம்பு செட்டித் தெரு**

**சென்னை-1**











★ வாலாஜாபாத் இந்து மத பாடசாலையின் மாணவர் இல்லத்தில் ரூ. 42,000 செலவில் கட்டப்பட்ட புதுக் கட்டிடத்தை மார்ச் 22-ம் தேதி "கல்கி" ஆசிரியர் திறந்து வைத்தார். திருமயிலை ஸ்ரீ டி. மாணிக்கம் செட்டியார் அளித்த நன்கொடை ரூ.10,000த்தைக் கொண்டு வாங்கிய அச்சகத்தைப் புத்தகப் பதிப்பாளரான ஸ்ரீ எம். ஆர். அப்பாத்துரைப் பிள்ளை பி. ஏ. திறந்து வைத்தார்.

* * *

1. விழாவுக்காக வெளியூர்களிலிருந்து வந்திருந்தவர்களுக்கு வரவேற்பு. 2. மாணவர்கள் கூட்டமாகச் சர்வாங்காசனம் செய்கின்றனர். 3. மாணவர்களாலேயே தயாரித்த விளையாட்டுப் பொம்மைச் சாமான்கள். 4. மாணவர்கள் கோபுரம் கட்டி நிற்கின்றனர். 5. அச்சகத் திறப்பு விழா. 6. மாணவர்களின் அணி வகுப்பு நடக்கிறது. 7. மாணவர் இல்லத்துப் புதுக்கட்டிடத்தில் ஒரு அறை கட்டுவதற்கு நன்கொடை அளித்த மஞ்சள் கொல்லை திரு ராம. சா. ராமசாமி முதலியார் தம்பதிகளின் உருவப்படத்தை திரு மார்த்தாண்டம் பிள்ளை எம். எல். ஸி. திறந்து வைக்கிறார். மேலே சிரித்த முகத்துடன் காட்சி அளிப்பவர் இந்து மத பாடசாலையைச் சிறந்த முறையில் வளர்த்து வரும் திரு மாசிலாமணி முதலியார்.



4



5



6




7

# "மெட்ராஸ் மெயில்" பட்டினிச் சாவு

★ ★ ★

தங்களுடைய 29-3-53 'கல்கி' இதழில் வெளியாகி யிருக்கும் "'மெட்ராஸ் மெயில்' பட்டினிச் சாவு" என்னும் தலைப்பிலுள்ள கட்டுரையைப் படித்தேன். எல்லோருக்கும் ஆவலுடனும் சந்தோஷத்துடனும் படித்துக் காண்பித்தேன். அதில் சொல்லி யிருக்கும் விஷயங்கள் ஒவ்வொன்றும் 100 க்கு 100 சதவீதம் உண்மையும், பாராட்டத்தக்கதும், ஆமோதிக்கத் தக்கதுமாகும்.

நமது முதன் மந்திரியாகிய ராஜாஜியின் சமூக சேவை என்ன, தியாகமென்ன! அவருடைய படிப்பும் அறிவும் அநுபவமும் என்ன என்பதை நினைத்துப் பார்த்தால் 'மெட்ராஸ் மெயில்' ஆசிரியரும் மற்ற எவரும் அவரது பாதையில் நடக்கவும் அருகதையற்றவர்கள் என்று உறுதியாகக் கூறலாம். அவ்வாறிருக்கையில், சிலரைப் போல் பொருளுக்கும், பதவிக்கும், பெருமைக்கும் மந்திரிப் பதவி ஏற்காத சேவா மூர்த்தியும் தியாகச் சுடருமாகிய ராஜாஜியின் நிர்வாகத்தின் கீழ், கேவலம், நோயால் இறந்த ஒருவனின் படத்தைப் பதிவு செய்து தமிழ் நாட்டுத் தலைவரையும், தமிழ் நாட்டையும் பழிக்க நினைக்கும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் இது ஒரு நல்ல படிப்பினை.

28—3—53
உதகமண்டலம் — மீனாக்ஷி விஸ்வநாதன்.

●

தங்கள் 29-3-53 'கல்கி' இதழில் பட்டினியால் ஒருவன் இறந்தான் என்ற வரலாற்றைச் சிருஷ்டி செய்து அதற்குக் கைகால் முதலிய அவயவங்களை வைத்துப் படம் பிடித்து மெயில் பத்திரிகை விளம்பரப் படுத்தியதைக் கண்டித்து எழுதியதற்கு மிகவும் பாராட்டுகிறேன். காங்கிரஸ் நிர்வாகம் ஏற்ற முதற்கொண்டு, பசி, பட்டினி, பஞ்சம் இவற்றைத் தடுப்பதற்கு எவ்வளவோ பாடுபட்டு வருகின்றது. எந்த நிர்வாகத்திலும் குறைபாடு இல்லாமல் இருக்க முடியாது. அதைப் பற்றிப் பொய் விவரங்களைத் தந்து பிரசாரப் படுத்துவது வருந்தத்தக்கது. நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி வங்காளத்தில் பஞ்சமேற்பட்டபோது ஆங்கிலேய நிர்வாகம் நடந்து வந்தது. அதை இவர்கள் தூஷிக்கவில்லை. இப்போது எதற்கும் காங்கிரஸைப் பொறுப்பாளியாக்குகிறார்கள். இந்தியாவில், வெளியேறியது போக இன்னும் அநேக ஆங்கிலேயர்கள் இருக்கிறார்கள். அநேகமாய் எல்லோரும் இந்தியக் கொள்கைகளை மேற்கொண்டு காங்கிரஸை ஆதரித்து அதனுடன் ஒத்துழைக்கிறார்கள்.

ஆனால் சில ஆங்கிலேயர்கள் காங்கிரஸை ஆதரிப்பதில்லை. பொது ஜனங்களையும் ஆதரிப்பதில்லை. நரி மேலே விழுந்து பிடுங்காமல் வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ போனால் பரவாயில்லை. ஆனால் பொது மக்களின் மேலே விழுந்து பிடுங்க எத்தனிப்பதைக் கண்டிக்கத்தான் வேண்டும். உதாரணமாக, ஆங்கிலேய நிர்வாகத்தின் கீழ் சென்னையில் நம் பொது மக்களால் பிழைத்து வரும் டிராம்வே கம்பெனி இது வரையில் கொடுத்து வந்த மாதாந்திர சீஸன் டிக்கெட்டுகளை ஏன் திடீரென்று நிறுத்தவேண்டும்! இது ஏழைகளை எவ்வளவு தூரம் பாதிக்கிறதென்று சிந்தித்துப் பார்த்தார்களா!

29—3—53
சென்னை — எஸ். சிவஸ்வாமி.

●

தங்கள் 29-3-53 'கல்கி' இதழில் எழுதியுள்ள "மெட்ராஸ் மெயில்" பட்டினிச் சாவு என்ற தலையங்கத்தில் சில தினங்களுக்கு முன் எங்கள் தெருவில் உள்ள பிள்ளையார் கோவிலில் உயிர் துறந்த மனிதனைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அது விஷயமாக தங்கள் பத்திரிகை மூலமாகச் சில விஷயங்களைச் சென்னை மகா ஜனங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

எங்கள் ஊரில் உயிர் நீத்த சுமார் அறுபது வயது மதிக்கத் தக்க அந்தத் தொண்டு கிழவர் பட்டினியால் சாகவில்லை: சில தினங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர், மேற்படி சம்பவம் நடந்த தினத்தன்று மருந்து வாங்கி வரச் செல்லும் வழியில் நடக்கச் சக்தியற்று, சிறிது நேரம் இளைப்பாறக் கோவிலுக்குள் பிரவேசித்தார். வயது முதிர்ந்த காரணத்தாலும், பல நாள் நோயினால் பாதிக்கப் பட்டிருந்ததாலும், உயிரை நீத்து இறைவன் திருவடியை அடைந்தார்.


அவர் இறந்த சில நிமிடங்களுக்கெல்லாம் பத்திரிகையாளர் அவரது சவத்தைப் படம் பிடித்துப் போய்ப் பத்திரிகையில் அரசாங்கத்தைத் தூஷிக்கும் வகையில் அதை வெளியிட்டனர். உயிர் நீத்தவரது உறவினர்கள் உண்ண உணவும், உடுக்க உடையும் இன்னும் இத்தியாதி வசதிகளைப் பெற்றிருக்கும்போது அவர் மட்டும் பட்டினியால் இறந்தார் என்பதை யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

தாங்கள் இச் சம்பவத்தைப் பற்றித் தங்கள் 29—3—1953 இதழில் எழுதியுள்ளதற்கு இராசிபுரத்தில் இருக்கும் அரசியல் விரோதிகளைத் தவிர எஞ்சியுள்ள ஜனங்கள் சார்பாகத் தங்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


27—3—53
இராசிபுரம் — ஆர். என். கோடீசுவரன்

[குறிப்பு:—மேற்கண்ட ரீதியில் இன்னும் பல கடிதங்கள் நமக்கு வந்திருக்கின்றன. ராசிபுரத்தில் இறந்துபோன துர்ப்பாக்கிய சாலி பட்டினியால் இறக்கவில்லை என்றும் வயிற்றுக் கடுப்பு நோயினால் இறந்தார் என்றும் சர்க்கார் அறிக்கை தக்க ருஜுக்களுடன் தெளிவாக்கி யிருக்கிறது. "'மெட்ராஸ் மெயில்' பட்டினிச் சாவு" என்ற நமது கட்டுரையைப் படித்து விட்டுக் கூனூரிலிருந்து ஒரு நேயர் அதை முழு மனதுடன் ஆதரிப்பதற்கு அறிகுறியாகப் பத்து ரூபாய் பணம் அனுப்பி யிருக்கிறார். இந்த ரூபாய் பத்தும் சென்னை மாகாணப் பஞ்ச நிவாரண நிதியில் சேர்க்கப் பட்டது.

—ஆசிரியர்]


வரும் புது தமிழ் வருஷப் பிறப்பிற்கு
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறித் துணிகளையே வாங்குங்கள்
★ அழகு
★ சிக்கனம்
★ உழைப்பு
யாவும் ஒருங்கே கொண்டது
கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்
சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
தந்தி: HANDLOOM] 34, பாந்தியன் ரோடு, எழும்பூர், மதராஸ்-8 [போன்: 8178 & 85839


ஸ்பென்ஸர்ஸ்
ஸூதிங் ஸிரப்
குழந்தைகளை சிறப்பாக வைக்கிறது
SPENCER'S
SOOTHING SYRUP
AN INVALUABLE REMEDY FOR INFANT DISORDERS
DOSE
SPENCER & CO. LTD.
வாயுப் பொருமல், தேக அசௌகரியங்கள், அதிக அமிலச் சேர்க்கை முதலான காரணங்களால் ஏற்படும் வேதனைகளை மிக விரைவில் நிவர்த்திக்கிறது.
ஸ்பென்ஸர் & கோ., லிமிடெட்.
மானுபாக்சரிங் கெமிஸ்டுகள்
1/153, மவுண்ட் ரோட், சென்னை-2 இந்தியா.




## 11. யுத்தம் வந்தது!

அரசன் வீரவர்மன் சிறிது நேரம் வரையில் ஒன்றும் பேசவில்லை. பழைய நினைவுகளெல்லாம் அவன் மனத்தில் இப்பொழுதுதான் நடந்தது போலப் பசுமையாகத் தோன்றின. உடனே அவன் முகம் கடுமையாக மாறியது.

"அடே, பயலே! நீ சொல்லுவது உண்மையா? உனக்கு ராணி மல்லிகாவைத் தெரியுமா? அவள் எங்கிருக்கிறாள்? அவள் குழந்தை என்னவாயிற்று? இந்தச் சமாசாரம் எதுவும் இதுவரையில் என் செவியில் எட்டவில்லையே!"

"மகாராஜா, மகாராணி மல்லிகாவும் யுவராணி கௌசல்யாவும் கானகத்தில் எளிய வாழ்வு வாழ்கின்றனர். மகாராணி அனுப்பிய தகவல்களெல்லாம் தங்கள் திருச்செவிகள் வரையில் எட்டாவண்ணம் இளைய ராணியார் தடுத்து விட்டார்கள்!"

"மந்திரி! உடனே ராணி மல்லிகாவையும் ராஜகுமாரியையும் அழைத்து வர ஏற்பாடு செய்யும். அரண்மனைப் பல்லக்கை அனுப்பி வையும். ராஜமரியாதைகளும் கூடவே செல்லட்டும். இவனைக் காவலில் வையும். அவர்கள் வந்ததும் இவனைக் கவனிக்கிறேன்!"

அரசனின் இந்த உத்தரவு பிறந்ததும் காவலர்கள் ராஜாவைக் கைப்பற்றிச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர். ராணி மல்லிகா இருக்கும் இடத்துக்கு வழியை ராஜாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு மந்திரி புறப்பட்டான்.

ராஜமரியாதைகளையும் மந்திரியையும் யானை, ஒட்டகம், குதிரை வீரர்கள் முதலிய பரிவாரங்களையும், வைரமும் வைடூரியமும் வாரி இழைத்திருந்த தந்தப் பல்லக்கையும் கண்டு ராணி மல்லிகாவும் கௌசல்யாவும் சொல்ல முடியாத வியப்புக்கு உள்ளாயினர். அந்தக் காட்டுப் பிரதேசத்துக்கு மகாராஜா வருகிறாரா என்ன? ஆனால் அவர்கள் நினைத்தது தவறு என்பது காலியாயிருந்த பல்லக்கைப் பார்த்ததும் தெரிந்து விட்டது.

மறுநிமிஷம் ராணி மல்லிகாவும் கௌசல்யாவும் வசித்து வந்த சின்னக் குடிசையை நோக்கி அந்தப் பரிவாரங்கள் சென்றன. பிறகு மந்திரி, ராணி மல்லிகாவின் முன் மரியாதையாக வணங்கி நின்று அரசனின் உத்தரவைச் சொன்னான். இதெல்லாம் ராஜாவின் ஏற்பாடாய்த்தான் இருக்கும் என்பது அவர்களுக்கு உடனே தெரிந்து விட்டது. மிகவும் உற்சாகமாக அரண்மனைக்குச் சென்றார்கள்.

ராணி மல்லிகாவையும் கௌசல்யாவையும் பார்த்ததும் அரசன் கண்ணீருகுத்து விட்டான். அந்தக் கண்ணீர் வெள்ளத்தில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இளைய ராணியும் தன் பிழைகளை யெல்லாம் மறந்து மன்னித்து விடும்படி மன்றாடி வேண்டிக் கொண்டாள்.

"அக்கா, நான் தங்களுக்குச் செய்த கொடுமைகளை யெல்லாம் மறந்து என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்களுக்கு

இழைத்த தீங்கு மறக்க முடியாததுதான். இனி நான் இந்த அரண்மனையில் தங்கள் ஊழியக்காரியா யிருப்பேன்......தாங்கள் இந்தப் பாவிக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தரும்...!'' என்று கூறி மேலே பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க மல்லிகாவின் காலில் விழுந்து வணங்கி, தன் கண்ணீரால் அவள் பாதத்தை நனைத்தாள்.

ராணி மல்லிகா உடனே அவளைத் தூக்கி நிறுத்தி, ''நடந்து போனதை எண்ணி வீணாக வருத்தப்படாதே, அம்மா!'' என்று சொல்லி ஆறுதல் கூறினாள்.

பிறகு மல்லிகா வீரவர்மனைப் பார்த்து ''மகாராஜா, சென்றதை யெல்லாம் மறந்து விடுங்கள். சந்தோஷமான சமயத்தில் அதையெல்லாம் ஏன் நினைக்க வேண்டும்? இதோ உங்கள் அருமைக் குமாரி கௌசல்யாவைப் பாருங்கள்!'' என்று மல்லிகா கூறினாள். வீரவர்மன் கௌசல்யாவைத் தழுவிக் கொண்டான்.

பிறகு, ''மகாராஜா, அந்த வீர வாலிபன் ராஜா எங்கே?'' என்றாள் ராணி.

''மல்லிகா, முக்கியமான சில காரணங்களுக்காக அவனைக் காவலில் வைத்திருக்கிறேன். அவன் சிறு குழந்தையா யிருந்த போது 'இந்த தேசத்தை ஆளும் அரசனின் ராஜகுமாரியையும் மணப்பான்!' என்று ஒரு பெரியவர் கூறினார். அது உண்மையாகும் என்று தெரிகிறது. அப்போது, அந்தக் காலத்தில், இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்பு, நான் அதை நம்பவில்லை. அந்தக் குழந்தையிடம் வீண் பொறாமை கொண்டு அழிக்கப் பார்த்தேன்!'' என்று கூறி அரசன் பழைய வரலாற்றை அவர்களுக்குச் சொன்னான்.

''அப்பா, எங்கள் வன வாசத்துக்கு ஒரு விமோசனம் அளித்த அந்த உத்தமருக்கா சிறைவாசம்? பட்ட மரங்களைப் போல் பரிதவித்து நின்ற எனக்கும் அம்மாவுக்கும் அரண்மனை வாழ்வையும் அரச போகத்தையும் அளித்த அவருக்கா சிறைவாசம்? அவர் இன்றி நான் இல்லை! என்னையும் அச் சிறையிலேயே அடைத்து விடுங்கள்!'' என்று கதறி யழுதாள் கௌசல்யா.

''மகாராஜா, கௌசல்யாவும் ராஜாவும் இணை பிரியாமல் பழகி விட்டார்கள். அவர்களைப் பிரிக்க முடியாது. அவனைத் தயவு செய்து விடுதலை செய்து விடுங்கள். காவலில் வைக்கும்படியாக அவன் செய்த குற்றம் என்ன?'' என்று ராணி மல்லிகாவும் கண்களில் நீர் மல்கக் கேட்டாள்.

''தேவி, கௌசல்யா, இருவரும் வீணாக வருந்தாதீர்கள். அந்த வாலிபன் தேவசேனாபதியை, அதுதான் ராஜாவை, காவலில் வைத்திருந்தாலும் அங்கே சகல சௌகரியங்களுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். அது சிறைச் சாலை அல்ல; ஒரு சின்னக்கோட்டை. அவன் ஒரு குற்றமும் செய்ய வில்லை. தேச தேசங்களை யெல்லாம் ஆளும் அரசனான வீரவர்மன் தன் பெண்ணை ஒரு அநாதைப் பயலுக்குக் கொடுத்து விட்டான் என்று ஊர் ஜனங்கள் நம்மை ஏசக் கூடாது. நமக்குக் கௌரவம் என்று ஒன்று இருக்கிற தல்லவா? அதை நாம் அவசியம் காப்பாற்றியாக வேண்டும். இப்பொழுது பெரும் யுத்தம் நம் நாட்டை எதிர் நோக்கியிருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களில் நமது சேனை நம் தேவ சேனாபதியின் தலைமையில் இங்கிருந்து புறப்படும். அந்த மாபெரும் போரில் வெற்றி வீரனாக அவன் திரும்பினால், ராஜகுமாரி கௌசல்யாவும், பரந்து கிடக்கும் நமது பெரிய ராஜ்யமும் அவனுக்குச் சொந்தம். ஒரு இணையற்ற வீரனை அநாதை, ஏழை, இழி குலத்தவன் என்ற வித்தியாசங்கள் கட்டுப் படுத்த முடியாதல்லவா?'' என்றான் அரசன்.

கௌசல்யாவின் முகம் மலர்ந்த செந்தாமரையைப் போல் விளங்கியது. ஆனந்த பரவசத்தில் வார்த்தையே அவள் வாயிலிருந்து வெளி வர வில்லை. ராணி மல்லிகாவும் சந்தோஷம் அடைந்தாள்.

* * *

அன்று இரவு சாப்பாடு முடிந்த பிறகு, ராஜா தன் தலை விதியை நினைத்து நொந்து கொண்டே அந்தக் கல் கோட்டையில் உலாவிக் கொண்டிருந்தான்.

'தடக், தடக்' என்று கோட்டைக் கதவு திறக்கப்படும் ஓசை அவன் சிந்தனையைப் பாதியில் நிறுத்தியது. வியப்புடன் வாசல் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா. கையில் விளக்குடன் ஒரு முக்காடிட்ட உருவம் உள்ளே பிரவேசித்துக் கதவைத் தாழிட்டது. பிறகு கை விளக்கை



ஒரு பக்கம் வைத்து விட்டு, அந்த உருவம் முக்காட்டை விலக்கியது.

அந்த மங்கிய விளக்கின் வெளிச்சத்திலும், சிறையில் இருந்த அகல் விளக்கின் ஒளியிலும் கௌசல்யாவின் முகம் பளிச்சென்று தெரிந்தது.

"கௌசல்யா, ராஜகுமாரி! நீ எப்படி இங்கே வந்தாய்? நிஜமாக நீதானா? இல்லை, நான் கனவு காண்கிறேனா? இந்த ஏழை அநாதைக்கு ராஜகுமாரியைத் தரிசிக்கும் பாக்கியம் இருக்கிறதா?"

"ராஜா, நீங்கள் கனவு காணவில்லை. நிஜமாக நான் உங்கள் கௌசல்யாதான். அப்பாவுக்கு உங்கள் மீது ஒரு கோபமும் கிடையாது. நம் நாட்டை எதிர்த்து நிற்கும் பெரும் சைன்யத்தை மடக்கிப் போர் புரிந்து வெற்றி வீரராக நீங்கள் திரும்ப வேண்டுமாம். அவரே நாளைக்கு உங்களை ராஜ சபைக்கு அழைத்து இதைச் சொல்லப் போகிறார். உங்களுக்குக் குழந்தைப் பருவத்தில் வைத்த பெயர் தேவ சேனாபதி என்று அப்பா சொன்னார். அந்தப் பெயருக்கு ஏற்ப நீங்கள் இன்னும் சில தினங்களில் பெரும் சைன்யத்துக்குத் தலைமை தாங்கிச் சென்று வெற்றி வீரராகத் திரும்ப வேண்டும்!"

"கௌசல்யா, உன் தகப்பனார் என்னைச் சேனைக்கு அதிபனாக்கிப் பெரிய போர்க்களத்துக்கு அனுப்பப் போகிறாரா? சபாஷ்! ரொம்ப சந்தோஷம்! சிறு வயதிலிருந்து பெரிய போர்க் களத்துக்குச் சேனைத் தலைவனாகச் சென்று போர் புரிய வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசை!" என்றான் ராஜா உற்சாகத்துடன்.

இந்தச் சமயம் அரண்மனையின் முதல் ஜாமத்து மணி 'டாண் டாண்' என்று அடித்து அரண்மனை மதில்களை யெல்லாம் கடந்து நகரம் முழுவதும் பரவியது.

உடனே கௌசல்யா திடுக்கிட்டு எழுந்து "ராஜா, ரொம்ப நேரம் ஆகி விட்டது. நான் யாருடைய கண்களிலும் படாமல் அந்தப் புரம் போகவேண்டும். மந்திரியின் உதவியினால்தான் உங்களை நான் காண முடிந்தது. நான் மறுபடியும் உங்களைச் சந்தித்துப் பேச முடியாது. ஆகையினால் இப்பொழுதே உங்களுக்கு விடை யளிக்கிறேன்!" என்று சொல்லிக் கௌசல்யா சால்வையைப் போர்த்திக்கொண்டு கையில் விளக்குடன் வெளியே போனாள். பிறகு 'தடார்' என்ற ஓசையுடன் கோட்டைக் கதவுகள் மூடிக் கொண்டன. (தொடரும்)

# பூதக் கண்ணாடி

"என்னால் உண்மையைச் சொல்ல முடியவில்லையே" என்று ரொம்பவும் அழுதது அந்தப் பூதக்கண்ணாடி.

"உலகில் ஒவ்வொரு பொருளும் எவ்வளவு அழகாக இருக்கின்றது. ஆனால் அவை என்னிடம் தங்கள் அழகைப் பார்த்துக் கொள்ள வந்தால், என்னால் உண்மையைக் காட்ட முடிவதில்லை. அந்த அழகான பொருள்களை யெல்லாம் பயங்கரமாகவும், பூதாகாரமாகவும் கோரமாகவும் அல்லவா மாற்றிக் காண்பிக்கிறேன். அவைகளின் உண்மை அழகை என்னால் சொல்ல முடிவதில்லையே" என்று அந்தப் பூதக் கண்ணாடி ரொம்பவும் வருத்தப் பட்டது.


இவ்வாறு வெகு நாட்களாக அந்தப் பூதக் கண்ணாடி முன் எந்த அழகிய பொருளை வைத்தாலும், அதன் பிரதி பிம்பம் கோரமாகக் காட்சி யளித்து வந்தது. ஆகவே, அந்தக் கண்ணாடி 'என்னால் உண்மையைத்தான் சொல்ல முடியவில்லை. என் முகத்தை யாகிலும் சுவர் பக்கமாகத் திருப்பி வைத்துக் கொள்ளுகிறேன். பொய்யாகிலும் சொல்லாமல் இருப்பேன் அல்லவா?' என்று நினைத்தது. ஆனால், அந்தக் கண்ணாடியினால் தன் முகத்தை வேறு பக்கம் தானாகவே திருப்பி வைத்துக் கொள்ள முடியவில்லை. அது இருந்த இடத்திலேயே இருந்தது.

ஒரு நாள் உலகமே வேறு விதமாக மாறத் தொடங்கிற்று. இதற்கு முன் கற்பனையில் கூட நினைத்திராத முறையில் மாறத் தொடங்கியது. பல பொருள்கள் தங்கள் உருவத்தை இழந்தன; அழகை இழந்தன. படுகோர உருவங்களாக மாறின.

இப்பொழுது, இந்தப் பொருள்கள் எல்லாம் அந்தப் பெரிய பூதக் கண்ணாடியில் கோரமாகக் காட்சி யளித்தன. கண்ணாடி தனக்கு ஏற்பட்ட இந்த நிலையைப் பற்றிப் பொருட்படுத்த வில்லை.

உலகத்திலிருக்கும் அழகிய பொருள்களைப் பாழ்படுத்துவதோடு நில்லாமல், மக்கள் ஒருவரை யொருவர் அடித்துக் கொள்ளத் தலைப் பட்டு விட்டனர். நம்பிக்கைத் துரோகம், கொலை, களவு, ஹிம்சைப்படுத்தல் ஆகிய காரியங்களில் ஈடுபட்டு மக்கள் மாக்களாயினர். ஆமாம்; கொடிய மிருகங்களை விடக் கேவல உருவங்களைப் பெற்றனர். இந் நிலையில் அவர்கள் தங்கள் உருவத்தை, அந்தக் கண்ணாடியில் பார்க்க வந்தனர். அந்தோ பரிதாபம்! அவர்களிடம் அழகில்லை யென்றாலும் உண்மையில் அவர்கள் எப்படிக் கோரமாகக் காட்சி யளிக்கின்றனர் — என்பதை அந்தக் கண்ணாடியினால் காண்பிக்க முடியவில்லை. ஆகவே, கண்ணாடிக்குப் பழைய குறையே மறுபடியும் வேறு மாதிரியில், வேறு உருவங்கொண்டு துன்புறுத்தியது.

"ஐயோ! என்னால் இவர்கள் எவ்வளவு கோரமாக இருக்கிறார்கள் என்ற உண்மையைச் சொல்ல முடியவில்லையே" என்று பூதக்கண்ணாடி ரொம்பவும் ஏங்கிற்று.




டுமீல்! டுமீல்!

துடிக்கும் நெஞ்சோடு பரபரப்புடன் திரும்பினார் ஆதிமூலம். கண் புருவங்கள் நெற்றி மேட்டில் ஏறிக் கொண்டன; கண்களில் ஆச்சரியம் இருந்தது. அளவிறந்த முறையில் இயங்கிய இதயத் துடிப்பின் வேகம் குறையவில்லை. எதிர் வீட்டில் நிலைத்து விட்டிருந்த பார்வையை அவர் எடுக்கவே இல்லை. 'டாக்டர் சேகரன்' என்ற பெயர்ப் பலகையில் பதிந்திருந்தது அவரது பார்வையும் கவனமும். வாசலை ஒட்டியிருந்த அறையில் டாக்டருடன் புது நண்ப ரொருவர் கைத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு 'டுமீல்! டுமீல்' வெடி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள், சிறு குழந்தைகளைப்போல. ஆனால் அவர்கள் சிறு குழந்தைகள் அல்ல!

ஆதிமூலத்துக்கு நெஞ்சில் நினைவு உணர்வு தந்தது; உயிர்ப்பு தந்தது. ஆம்; தன்னையே மறந்து போயிருந்த மோன நிலைக்குத்தான் சற்று முன் வெடித்த அந்த 'டுமீல்' நாதம் முற்றுப் புள்ளி வைத்தது.

"அப்பா!"

கிணற்றுக்குள்ளிருந்து கூப்பிடுவது போல ஒரு அழைப்புக் குரல் வந்தது. ஓடினார் ஆதிமூலம். செம்பவளம் கூப்பிட்டாள். அவள் அவரது ஏக புதல்வி. தாயின் மரணத்துக்குப் பின் அவளுக்கு அவர்தான் தாயின் பொறுப்புக்கும் ஓர் உருவாக விளங்கினார். செம்பவளம்தான் ஆதிமூலத்துக்கு உயிர், உயிர்ப்பு, ஏன், அவள்தான் அவருக்கு உலகம்!

அழகுத் தேவதை வைத்த அழகுப் போட்டியில் முதற் பரிசை அடைந்த வாலைக் குமரி செம்பவளம். பருவத்தின் பரிபூரண கடாட்சத்துக்கு ஒப்பில்லாத எடுத்துக் காட்டாக அந்தப் பெண்.

"அப்பா! அப்பா!"

ஆதிமூலத்தின் பெற்ற மனம் பதை பதைத்தது. தன்னை மறந்த நிலையில் அவள் பிதற்றிக்கொண்டிருந்தாள். நாடி பிடித்துப் பார்த்தார் அவர். ஜுர வேகம் துளியும் குறையவில்லை. நெருப்பை வைத்துக் கட்டினாற் போல அவள் உடம்பு கொதித்தது. உடலெங்கும் காஷ்மீர் கம்பளங்கள் போர்த்தப்பட்டிருந்தன. இருந்தும் அவளைக் குளிரின் வேகம் தூக்கித் தூக்கிப் போட்டது.

மருந்துத் தூளும் சூரணமும் தேன் சீசாவும் கஷாயம் தயாரிக்கப்பட்டிருந்த பாத்திரமுமாகச் சின்ன நாட்டு ஆஸ்பத்திரியே அப்பொழுது அங்கிருந்தது. மூன்று நாளாக இரவும் பகலுமாக விடாமல் அடித்த காய்ச்சலின் வேகம் கிஞ்சித்தும் கம்மிப் படவில்லை செம்பவளத்துக்கு. ஆதி மூலத்துக்கு அவள் வியாதி மட்டுப்பட மறுத்தது. அது அவருக்கு மாளாத மலைப்பையும் மீளாத வேதனையையும் தந்ததில் வியப்பில்லை! நாட்டு வைத்தியர் ஆதிமூலத்தின் நாடிச் சோதனைக்குத் தலை வணங்காத எந்த வியாதியையும் அவரது அறுபது வயது வாழ்க்கையில் சந்தித்ததில்லை. அவருக்குத் தம் செல்வ மகளின் நோய் சோதனையாக வாய்த்திருந்தது!

* * *

"அண்ணாச்சி, ஜில்லா போர்டு டாக்டர் சேகரன் கிட்டே உங்க பெண்ணைக் காண்பியுங்க. உங்க வைராக்கியத்தைப் பலப்படுத்திக்க இது சமயமில்லே. பேசாமல் நான் சொல்றபடி செய்யுங்க, அண்ணாச்சி."

சற்று முன், தன்மீது உரிமை கொண்ட உறவினன் ஒருவன் கூறிச் சென்ற வார்த்தைகள் ஆதிமூலத்துக்கு நினைவில் ஓடின. சிலையாகிப் போனார் அவர்.

டாக்டர் சேகரன் ஒரு எம். பி. பி. எஸ். இளைஞர்; நல்ல இதயம் படைத்தவர். பட்டணத்துப் படிப்பு அவரைப் பாமர ஏழை மக்களிடையே தொண்டு செய்யத் தூண்டியது. ஏழையுடன் ஏழையாக அவர் வாழ விரும்பினார். பூவைமாநகர் அவரை வரவேற்றது. ஊர் சிறியது. அங்குள்ள இளைஞர் சங்கம் அவரது தாற்காலிகமான ஆஸ்பத்திரியாகப் பரிணமித்தது.

டாக்டர் சேகரன் லட்சியவாதி. அதற்குச் சந்தர்ப்பங்கள் கை கொடுத்து உதவின; ஊருக்குப் புதிதாக வந்தவனானாலும் விரைவில் நிறையக் கேஸ்கள் வந்தன. அவரது குண நலத்தாலும் கைராசியாலும் பெயரும் புகழும் வளர்மதியாகிப் பரவியது.

ஆதிமூலம் அவ்வூர் நாட்டு வைத்தியர். பரம்பரைப் பட்டம்! டாக்டர் சேகரன் வருவதற்கு முன் ஆதிமூலத்தின் ராஜ்யம்தான் அந்தக் கிராமத்திலும், அதைச் சுற்றியிருந்த பதினாறு சிற்றூர்களிலும். டாக்டர் சேகரன் வந்த ஒன்றிரண்டு மாதங்களுக்குள் மக்களிடமிருந்து நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டதில் ஆதிமூலத்துக்கு உள்ளூறப் பொறாமை. 'இதெல்லாம் ஏதோ கத்துக் குட்டிகள்; ஏதோ வாய்த்தான் பிழைத்தான் வியாபாரம்' என்று எண்ணி உதட்டைப் பிதுக்கியவர்களுக் கெல்லாம் நாட்டு வைத்தியர் தலைவராகவும் போஷகராகவும் விளங்கினார். கை மருந்தாக ஏதோ ஏட்டில் படித்தது துளியும், வாகட வாடை கொஞ்சமும், அனுமானம் கொஞ்சமுமாகத் தனி அரசு செலுத்தி வந்தவராயிற்றே ஆதிமூலம்! புதுப் புள்ளியான சேகரன் என்றால் அவருக்கு ஏழாம் பொருத்தம். ஒரே துறையில் நிகழும் போட்டியின் விளைவு இது. இந்நிலையிலே, டாக்டர் சேகரனிடம் தம் மகளைக் காண்பித்து வைத்தியம் செய்வதென்றால்......? நாட்டு வைத்தியர் ஆதிமூலத்துக்கு மனம் ஒப்பவில்லை.

'கத்துக்குட்டி சேகரன் கிட்டே அதுவும் என் மகளுக்கு வைத்தியம் பார்க்கிறதாமே ... ஊஹூம்; மாட்டவே மாட்டேன். இந்தச்சேதியைக் கேட்டாக்க ஊரேசிரிக்குமே! ஆதிமூலத்தைப் பத்தி...... ஊஹூம்; மாட்டவே மாட்டேன்......காளி ஆத்தா, நீ தான் கண் திறந்து என் ஒரே குழந்தையைக் காப்பாத்தணும்; என் மானத்தையும் மதிப்பையும் காப்பாத்த வேணும்......'

ஆதிமூலத்தின் கண்களில் ஒரு சில பனித்துளிகள் அரும்பிச் சிதறலாயின. மௌனமாகப் பிரார்த்தித்தார்; மறுகணம், மறந்து போன ஏதோ ஒன்றைச் 'சடக்'கென்று நினைவு கூர்ந்தவராக உள்ளே ஓடினார். ஆசை மகளின் ஆற்றாமையும் அங்கலாய்ப்பும் அவருள் வேதனைப் புயலைக் கிளறிவிடத் தவறவில்லை.


ஆனால்......!

ஆதிமூலம் உயிரே பறி போனவர் போலத் திகைத்தார்; திக்குமுக்காடினார்; திண்டாடிப் போனார்.

'கண்ணகிச் சிலம்பைக் காணலையே. ஐயையோ, காளி ஆத்தா இதுவும் உன் சோதனைதானா? என்றும் இல்லாத திருநாளாகச் சிலம்பை எங்கேயும் காணுமே!"

'கண்ணகிச் சிலம்பு' வெள்ளியாலான காற்சிலம்பு போன்ற அணி. உள்ளே வெண்முத்துக்கள் குலுங்கும். பத்தினித் தெய்வம் கண்ணகியின் வழித் தோன்றல்களான ஆதிமூலத்தின் வம்சத்தினருக்கெல்லாம் கண்ணகிச் சிலம்புதான் கண்கண்ட தெய்வம். சங்கடம் நேர்ந்த சமய மெல்லாம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் கடவுள் அது. சிலம்பை வணங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டால், அவர்கள் எண்ணியவை கைகூடும். இது அவர்களிடையே வளர்ந்து வந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கைதான் அவர்களுக்குச் சகலமும்!

ஆதிமூலம் சிறு குழந்தை போல் விம்மினார். இருந்திருந்தாற் போல அவர் இதயத்தில் தீர்மானமானதொரு முடிவு பிறந்தது. 'ஆமாம்; இது எல்லாம் தெய்வ சோதனை கணக்கிலேதான் நடந்திருக்குது. இல்லாத போனா கண்ணகிச் சிலம்பு காணாமப் போகுமா? என் மருந்துக்கு மசியாமல் மூணு நாளா மகளுக்குக் காய்ச்சல் போட்டு ஆட்டி வைக்குமா? செம்பவளம், நீதானே எனக்கு உயிர், உலக மெல்லாம்? இதோ இப்போதே டாக்டர் சேகரனுக்கு ஆள் அனுப்பி வைக்கிறேன்......' என்று அவர் தனக்குள் முணு முணுத்துக் கொண்டார்.



டாக்டர் சேகரன் அப்பொழுது வெளியே கிராமமொன்றுக்குப் புறப்படப் போனார். வேலைக்காரப் பையன் மருந்துப் பெட்டியை 'சைக்கிள் காரியரி'ல் இணைத்துக் கட்டிவிட்டுத் திரும்பினான். சைகிளும் கையுமாக டாக்டர் புறப்பட்டார். ஆஸ்பத்திரி காம்பவுண்டைத் தாண்டிச் சென்று சந்துமூலையில் அவர் திரும்பினார். சந்துமுனை அல்லவா? மணி அடித்தார். எதிரே மணி சலசலக்க வந்த வில் வண்டி அவரைக் கண்டதும் 'டக்'கென்று நின்றது. அடுத்த விநாடி தன்னை அப்படியே மறித்து விடுபவனைப் போல ஒருவன் வியர்க்க

விறுவிறுக்க வந்து நிற்பதைக் கண்டதும், சேகரன் சைக்கிளை விட்டுக் கீழிறங்கினார்.

“டாக்டர் எசமான், நாட்டு வைத்தியர் ஆதிமூலம் ஐயா மகளுக்கு மூணு நாளா விடாத சுரமுங்க. ஐயாவே உங்களைக் கையோடே வண்டியிலே கூட்டியாரச் சொன்னாங்க.”

“என்ன, செம்பவளத்திற்கா ஜுரம்? சரி புறப்படு. நான் சைக்கிளில் நொடியில்போய்ச் சேருகிறேன்” என்று சொல்லிவிட்டு டாக்டர் சேகரன் பெடலை அழுத்தினார். மனம் சிந்திக்கத் தொடங்கியது.

அப்பொழுது டாக்டர் சேகரன் கிராமத்தில் பணியாற்றி வந்த புதிது. வடிவேலு கிராமத்துக் குடியானவன். அவன் குழந்தைக்கு ஜுரம் என்று ஓடி வந்தான். சேகரன் சென்று குழந்தையைப் பரிசோதித்து மருந்துகள் கொடுத்தார். இஞ்செக்ஷன் ஒன்று போட்டு, ‘பத்தியத்’தையும் கூறிப் புறப்பட்டார். ஆனால் அந்தக் குழந்தை இரவு நெடு நேரமாகியுங் கூடக் கண் திறக்கவில்லை பெற்றவர்கள் துடித்தனர். ‘பச்சைப் புள்ளைக்கு யாராச்சும் ஊசி போடுவாங்களா? நாம் முன் பின் கண்டறியாத புது வளக்கமாயில்லே இது இருக்குது? நாட்டு வைத்தியர் ஆதிமூலம் ஐயா கிட்டே காட்டி ரெண்டு தூளுப் பொட்டணம் வாங்கிக் கொடுத்திருந்தா இம்மாங்காட்டி புள்ளே விளையாடிக்கிட்டில்லே இருக்கும்!” என்று தூபம் போட்டார்கள் பட்டிக்காட்டுப் பாமரர்கள் சிலர்.

நாட்டு வைத்தியர் ஆதிமூலம் அழைத்து வரப்பட்டார். ‘டாக்டர் ஊசிக்கும் நாட்டு மருந்துக்கும் ஒன்றுக்கொன்று ஒத்து வருமோ, என்னவோ?...ஏதோ பகவான் பேரிலே பாரத்தைப் போட்டுப் பார்க்கிறேன்” என்று கிளிசை ஊட்டிய பிறகு, தூள் ஒன்றைத் தேனில் குழைக்கலானார் வைத்தியர்.

சொல்லி வைத்த மாதிரி ‘டாண்’ என்று அங்கு டாக்டர் சேகரன் தோன்றினார். “குழந்தைக்கு எந்த விதப் பயமும் இல்லை. ஊசி போட்டதின் மயக்கம்தான். வேறு மருந்து கொடுத்துக் குழப்பி விடாதீர்கள்!” என்றார்.

மறுகணம், “ஆளைப் பாருடா ஆளை. இன்னும் புத்தி வரல்லே. டாக்டராமே இவன்? ஊசி போட்டாராமில்லே பச்சைப் பாலகனுக்கு ஊசி! இந்த வியாபாரம் எல்லாம் இங்கே செல்லாது. தம்பி பட்டணத்திலேயே மூட்டை கட்டி வச்சுக்கிடு...” என்ற கூக்குரல்கள் எழுந்தன. ஆத்திரக் கூச்சலும் ஆரவாரமும் ஏசலும் உச்சநிலை அடைந்தன. நல்ல வேளை, அந்தத் தருணம் அங்கு தோன்றினாள் அந்தப் பெண். அவ்வளவு பெரும் அடங்கி விட்டார்கள். “அடே நம்ப வைத்தியர் ஆதிமூலம் ஐயா பொண்ணில்ல!” என்ற மௌன மொழிப் பரிமாறலுடன்.


டாக்டர் சேகரன் புழுவாய்த் துடித்தார். தமக்கு, விவரம் தெரியாதவர்கள் விளைவித்த அவமானத்துக்காக அவர் வருந்தவில்லை. ஆனால் அவர்களது அறியாமைக்கு வருந்தினார்; நிலைகுலைந்து போனார்.

“வருந்தாதீர்கள், டாக்டர் ஸார்! இந்தக் கிராமத்துப் பட்டிக்காட்டு ஜனங்களே இப்படித்தான். தாங்களும் சுயமாகத் தெரிந்து கொள்ள மாட்டார்கள். பிறர் சொல்வதையும் கேட்டு நடக்க மாட்டார்கள். பாவம், படிப்பு வாசனை துளியாகிலும் இருந்தால் இப்படியெல்லாம் நடப்பார்களா? என் பிறந்த மண் சார்பிட்டு நான் மன்னிப்புக் கோருகிறேன் தங்களிடம்!” என்றாள் அவள். டாக்டருக்கு நேர்ந்த இடுக்கண் குறித்து அவமானமும், கிராம மக்கள் மீது கொண்டுள்ள அவளது ஆத்திரமும் அவள் சொற்களில் இழையோடி நின்றது. அந்தப் பெண் — அவள்தான் செம்பவளம்!

செம்பவளத்தின் முகத்தைச் சேகரனால் மறக்க முடியவில்லை. அதற்காகவேதானோ என்னவோ அவளும் தன் நினைவு முகத்தை அடிக்கடி டாக்டர் முன் ஆஜர்ப் படுத்தி வந்தாள். செம்பவளம் எஸ். எஸ். எல். ஸி. படித்தவள்; இங்கிதம் பயின்றவள். டாக்டர் சேகரன் என்றால் அவளுக்கு உயிர்.

“டாக்டர் ஸார், ஒன்று சொல்லுகிறேன். இந்தப் பட்டிக்காட்டு மக்களிடையே உங்





கணவன்:—என் கண்ணை மூடிக்கொண்டு வாயில் பாக்கைப் போட்டால் என்ன? அது அசோகா பாக்கு என்று உடனே சொல்லி விட்டேனே!

மனைவி;—அசோகா தான் என்று எப்படித் தெரிந்தது!

கணவன்:—அதன் மணம் எனக்குத் தெரியுமே! அதைத் தவிர வேறு பாக்கு என் வாயில் போட்டால், என் குணமும் தான் உனக்குத் தெரியுமே!

களது லட்சியம், சேவை எதுவும் பலன் கனியச் செய்யாது என்று நம்புகிறேன்...''

''செம்பவளம், உன் கருத்து தவறு. கிணற்றில் தூறு படிந்திருந்தால் அதை அகற்றி, கீழே ஊறும் அமுத மயமான நீரைப் பயன் படுத்த வேண்டுமே அல்லாது, கிணற்றையே மூடிவிடலாகுமா? கிராம மக்களது மாசு படிந்த உள்ளங்களைப் புடமிட்ட பொன்னாக மாற்றுவது நம்மைப் போன்ற படித்தவர்களிடமே உள்ளது. இது நம் காந்தி மகாத்மாவின் கனவும் ஆகும். நான் சொல்கிறேன். என் லட்சியம், கனவு எல்லாம் விரைவிலேயே இம்மக்களிடையே பலன் காட்டும்! என் பொறுமையும் பணியும் நிச்சயம் இறுதியில் வெல்லும்!''

டாக்டர் சேகரன் — அழகி செம்பவளம் இவர்களிடையே நடந்த சர்ச்சைகளும் சம்பாஷணைகளும் இன்னும் எத்தனையோ......? ஆரம்பத்தில் துன்பமும் இடருமாக இருந்து, இதற்குள் அத்தனை கிராம மக்களின் இதய சாம்ராஜ்யத்தையும் டாக்டர் சேகரன் கைப் பற்றிக் கொண்டது கண்டு செம்பவளம்தான் எவ்வளவு அதிசயப்பட்டுப் போனான்!

* * *

செம்பவளம் பேச்சு மூச்சற்று நினைவு புரண்டு கிடந்தாள். நாட்டு வைத்தியர் ஆதிமூலம் டாக்டர் சேகரனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மனம் அடித்துக் கொண்டது. டாக்டரின் வாய் தனக்கு நல் வாக்குக் கொடுக்க வேண்டுமே யென்று புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தார். அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

டாக்டர் சேகரன் பரிசோதித்தார். சேகரனின் நெற்றிப் புருவங்கள் மேலேறித் தாழ்ந்தன. அவர் பெருமூச்சு விட்டார். மிக்ஸர் கொடுத்தார்; இஞ்செக்ஷன் போட்டார்.

''நல்ல வேளை, ஆரம்பத்திலேயே கவனித்து விட்டோம். இனி அபாயம் இல்லை. ஐயா, கவலையே வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே சேகரன் மருந்துப் பையைக் குடைந்து ஏதோ ஒரு பொருளை எடுத்து ஆதிமூலத்திடம் நீட்டி, ''ஐயா, இது கண்ணகிச் சிலம்பு. எங்களுடைய பரம்பரைப் பொக்கிஷம். இதை உங்கள் பெண்களுக்கு நினைவு வந்ததும் கையில் கொடுத்து, வணங்கச் செய்யுங்கள்! கண்ணகித் தெய்வம் கருணை காட்டும்......'' என்றார்.

அந்தக் கண்ணகிச் சிலம்பை ஆதிமூலம் அப்படி விழுங்கிவிடுவது மாதிரியாக எவ்வளவு நேரம்தான் பார்த்துத் தீர்த்தாரோ?

''டாக்டர் ஐயா, அதிசயமாக இருக்கிறதே, இது என் வீட்டில் உள்ளதாயிற்றே. இந்தச் சிலம்பைக் காணோமென்றுதானே சற்று முன் எனக்கு உயிரே போய்விட்டது......இது எப்படி உங்கள் கையில் வந்தது? இதோ பாருங்கள் என் விலாசம் பொறித்திருக்கிறது......'' என்று கூறினார் ஆதிமூலம்.

டாக்டர் சேகரன் வியப்பில் விரித்த விழிகளுடன் அந்தச் சிலம்பையும் அதிலிருந்த விலாசத்தையும் மாறி மாறிப் பார்த்த பின்னர், மறுபடியும் அவர் தன் மருந்துப் பையைத் தடவினார். என்ன ஆச்சரியம்! அவர் கையில் மற்றொரு கண்ணகிச் சிலம்பு மின்னிப் பளிச்சிட்டது.

''வைத்தியர் ஐயா, இப்போதுதான் எனக்கும் உயிர் வந்தது. இதுதான் எங்கள் குடும்பத்துக்குரிய கண்ணகிச் சிலம்பு. என் தந்தையாரின் பெயர் இதில் எழுதப்பட்டிருக்கிறது பாருங்கள்! ஆனால் உங்களுடைய சிலம்பு எப்படி என் பைக்கு வந்தது என்பதுதான் செப்பிடு வித்தையாகத் தோன்றுகிறது...'' என்று மூச்சு விடாமல் சேகரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஆதிமூலம் ஓடி வந்து அப்படியே அவரை அன்போடு தழுவிக் கொண்டார்.

''சேகரன், நீங்கள் ராமநாதனின் மகனா? அவர் என் உயிருக்குயிரான நண்பரல்லவா? இந்தச் சிலம்பும் அதிலிருந்த அவர் திருநாமமும் என்னைக் கண் திறக்கச் செய்துவிட்டன. அந்த நாளில் நானும் அவரும்தான் பர்மாவில் ஒன்றாகக் கொஞ்ச நாள் மரக்கடை நடத்தினோம். அப்போது நான் அவருக்கு என் அன்பின் அடையாளமாகக் கொடுத்த எங்களுடைய மற்றொரு சிலம்பு இது. அக்கரைத் தண்ணீர் பிடிக்கவில்லை; நான் பிரிந்துவிட்டேன். உங்கள் அப்பாவைத்தான் பிறகு காணக் கொடுத்து வைக்கவில்லை. இன்று

அவர் புதல்வனை—உங்களைக் காணும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்ததே. அதுவே போதும். இதுவும் தெய்வத்தின் நல்ல முடிவுதான். உங்களைப் பற்றி நான் இது வரையில் கொண்டிருந்த தவறான எண்ணத்துக்கு இப்பொழுது நான் மிக மிக வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள். அத்துடன் ஒரு வேண்டுகோளைத் தங்களிடம் நான் யாசிக்கிறேன். டாக்டர் ஸார், நிம்மதியான குடித்தன வாழ்க்கையும் இல்லறக் கல்லூரியிலும் கிராம மக்களிடையேயும் அன்புப் போதனையும் தான் என் செம்பவளத்தின் எதிர் காலக்கனவு! இவற்றுக்கெல்லாம் என் ஒரே மகள் செம்பவளம் கண் நிறைந்த உங்கள் தயவை—துணையைத்தான் எதிர் பார்த்திருக்கிறாள்......'' என்றார் ஆதிமூலம் ஆனந்த பரவசக் குரலில்.

மலர் விழிகளைத் திறந்தவாறு கயநினைவடைந்த செம்பவளம் 'நடந்த கதை' அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். டாக்டர் சேகரனை விழுங்கி விடுவது போலப் பார்த்த அவளது பனிப் பார்வையில் 'என் கனவு பலித்தது!' என்ற அவளின் காதல் குரல் எதிரொலித்துப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அதே சமயம் டாக்டர் சேகரனுக்கு வந்திருந்த கடிதமொன்றை கொடுத்து விட்டுச் சென்றான் டாக்டரின் வேலையாள்.

'' அன்புள்ள டாக்டர் சேகரன் அவர்களுக்கு,

நேற்று மாலை தங்களைச் சந்தித்து அளவளாவி விட்டு வந்தவள், இன்று பாயும் படுக்கையுமாகி விட்டேன். தாளாத ஜுரம். எங்கள் குடும்பப் பொக்கிஷமான கண்ணகிச் சிலம்பை வணங்கித் தங்களை நான் அடைய வேண்டுமென்றும் என் இன்பக் கனவு ஈடேற வேண்டுமென்று வேண்டிக் கொண்ட பின்னர், அதைக் கையுடன் கொணர்ந்தவள் மறதியில் தங்கள் அறையில் விட்டு வந்து விட்டேன். நான் அங்கு நுழைந்த சமயம் இதே போலத் தாங்களும் ஒரு சிலம்பை வைத்து ஏதோ பிரார்த்தனை புரிந்ததையும் நான் கவனித்தேன். என்னைப் போலத் தாங்களும் பிரார்த்தனை விடுத்திருப்பீர்களானால், ஆஹா! நான் பாக்கியவதி. நம் கனவு கட்டாயம் நிறைவேறி விடும். உங்களிடமுள்ள சிலம்பு எங்கள் பரம்பரைக்குரியது. உங்கள் தந்தைக்கு என் அப்பா அன்புடன் கொடுத்தது. இதைப் பற்றி அடிக்கடி என் தந்தை சொல்லுவதுண்டு. இந்தக் கண்ணகிச் சிலம்பே நம் காதல் கனவைப் பலிதமுறச் செய்யும் சக்தி பெற்றது. என் உடல் நலமுற்றதும் நானே நம் மணம்பற்றி என் அப்பாவிடம் பிரஸ்தாபிக்கப் போகிறேன். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலத்தான் அப்பாவுக்கு. மறந்து விட்டேன், பார்த்தீர்களா? எங்கள் கண்ணகிச் சிலம்பைத் தயவு செய்து ஒருவருக்கும் தெரியாமல் ஆள் மூலம் என்னிடம் சேர்த்துவிடுங்கள். அப்பாவுக்கு அந்தச் சிலம்பு இல்லையென்றால், உடலில் உயிர் தரிக்காது!

தங்கள்,

செம்பவளம்''

அந்தக் கடிதம் டாக்டர் முகத்தில் இளைப்பி விட்ட அமுதச் சிரிப்புடன், அந்தியின் இன்பச் சிரிப்பும் கலந்து கொண்டது!


## கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்

| | | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|---|
| இந்தியா, சிலோன் | ரூ. | 13-0-0 | 6-8-0 |
| பர்மா, மலேயா, வெளிநாடு | ரூ. | 14-10-0 | 7-5-0 |

குறிப்பு:—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை



## பிரபல திருமணம்

பம்பாய், ஜெய்ப்பூர் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற தொழில் அதிபரான ஸ்ரீ ராஜ்ரத்ன பிரதாப்ராய் ஜி. மேதா அவர்களின் குமாரரான **ஸ்ரீ பிரமோத்ராய்க்கும்**, ராஜ்காட்டைச் சேர்ந்த ஸ்ரீ ராமதாஸ் பிரேம்ஜியின் குமாரத்தி **பானுமதிக்கும்** பம்பாய் மாதவபாக் ஆலயத்தில் ஹிந்து தர்ம விதிப்படிச் சிறப்பாக சமீபத்தில் விவாகம் நடந்தது.

மேற்படி விவாகத்துக்குப் பம்பாய் முதன் மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய், மேயர் ஸ்ரீ கணபதி சங்கர் தேசாய், மற்றும் மந்திரிகள், டாக்டர் ஜீவராஜ் மேத்தா, ஸ்ரீ பி. எஸ். ஹிரே, ஸ்ரீ சாந்திலால்ஷா, ஸ்ரீ ஜி. டி. தபஸே முதலிய பிரமுகர்களும், ஸ்ரீ புருஷோத்தம்தாஸ் தாக்குர்தாஸ், ஸ்ரீ ஆர். எச். கமானி, ஸ்ரீ அம்பாலால் கிலாசந்த், முதலிய பம்பாய் நகரப் பிரபல தொழிற் பிரமுகர்களும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசிர்வதித்தனர்.

# குற்றமுள்ள நெஞ்சு

ஸாயி



அன்று காலையில்தான் எனக்கும் கமலிக்கும் கல்யாணம். முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு வைபவத்திலிருந்தே கல்யாண வீட்டில் களை கட்டிவிட்டது. பிறகு இரவு பிரமாதமான விருந்துச் சாப்பாடு நடந்தது.

அதிகாலையில் முகூர்த்தம் குறிக்கப்பட்டிருந்தபடியினால் இருள் பிரிவதற்கு முன்பே எழுந்து நான் ஸ்நானம் செய்து விட்டுத் தயாரானேன். கமலியும் ஸ்நானம் செய்து புதுப் புடவை சலசலக்க மண மேடை மீது வந்து அமர்ந்தாள்.

பந்து மித்திரர்களெல்லாம் ஏராளமாக மணப் பந்தலில் வந்து குழுமியிருந்தனர். எல்லோரும் மங்கள அக்ஷதை தூவ, மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, கமலிக்கு நான் மாங்கல்ய தாரணம் செய்தேன்.

பகல் விருந்தும் முடிந்தது. முதல் நாள் இரவு வெகு நேரம் கண் விழித்துக் கொண்டிருந்தது, உடனே அதிகாலையில் எழுந்து ஹோம குண்டத்தின் அருகே உட்கார்ந்திருந்தது எல்லாமாகச் சேர்ந்து எனக்கு மிகவும் அலுப்பாயிருந்தது. கல்யாண வீட்டிலிருந்து எங்களுக்கென்று பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டுக்குப் போய் ஓர் அறையில் படுத்தேன். என் மனம் சென்று போன நாட்களைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டது.

நான் அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் கல்லூரியில் தான் கமலியை முதன் முதலாகச் சந்தித்தேன். கமலியும் என் வகுப்பில்தான் படித்துக் கொண்டிருந்தாள். அவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. அதே மாதிரி விளையாட்டு, தையல், பாட்டு முதலியவைகளிலும் அவளுக்குத்தான் கலாசாலையிலேயே முதல் பரிசு கிடைக்கும்.

கமலி அநாவசியமாக எதற்கெடுத்தாலும் கூச்சப்படும் பெண்களின் ரகத்தைச் சேர்ந்தவளல்ல; யாருடனும் சரளமாகப் பழகுவாள். களங்கமற்ற அவள் சுபாவம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கமலி பார்வைக்கும் நல்ல அழகாயிருப்பாள்.

நான் விடுமுறையின் பொழுது என் சொந்த ஊர் செல்லும் பொழுதெல்லாம் என் தாயார் என்னை விவாகம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்துவாள். என் தந்தையும் அதற்கு ஏற்றாற்போல் ஏதாவது ஒரு இடத்திற்குப் பெண் பார்க்கக் கூப்பிடுவார். நானும் ஏதாவது சாக்குச் சொல்லி அதைத் தட்டிக் கழிப்பேன். அதனால் எனக்கு ஊருக்குச் செல்வதென்றாலே பயம்.

ஆனால் அப்பா என்னுடைய போக்குக்குப் பயந்து தம் முயற்சியை விட்டு விடவில்லை. எனக்காக ஒரு பெண்ணைப் பார்த்த வண்ணமாகத்தான் இருந்தார்.

அப்பாவின் இந்தத் தொந்தரவிலிருந்து விடுபட நான் ஒரு உபாயத்தைக் கையாண்டேன். விடுமுறை சமயத்தில் எனக்கு இலேசாக ஜுரம் கண்டிருப்பதாகவும் ஊருக்கு வருவதற்கில்லை என்றும் அப்பாவுக்கு மிகவும் வணக்கமாகக் கடிதம் எழுதுவேன்.

இதனால் எனக்கு இன்னொரு அநுகூலமும் இருந்தது. டாக்டர் பில்லுக் கென்று தனியாக இருபது ரூபாயும் பெற்றுக்கொள்வேன். அந்தப் பணத்தை நண்பர்களுடன் ஸினிமா சீட்டாட்டம் என்று செலவழித்து ஆனந்தமாகப் பொழுது போக்குவேன்.

நான் இவ்வாறு செய்வதை யாரோ என் தந்தையிடம் கோள் சொல்லி விட்டார்கள்

போலிருக்கிறது. இது எனக்குத் தெரியாது. ஒரு டிசம்பர் விடுமுறையின் போது நான் வழக்கம் போல் எனக்கு ஜுரம் வந்திருப்பதாகவும், உடனே இருபது ரூபாய் மணியார்டர் அனுப்பும்படியும் கடிதம் எழுதிவிட்டுப் பணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் காலை நான் என் நண்பர்களுடன் ஒரு ஹோட்டலில் மசாலா தோசையும் வெங்காய சாம்பாரும் ருசித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் காதை யாரோ முறுக்குவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். என் பக்கத்தில் என் தந்தை நின்று கொண்டு என்னைக் கோபத்துடன் பார்ப்பதைக் கண்டேன். நான் பயந்து விட்டேன்.

"என்னடா, உன் ஜுரம் எந்த அளவில் இருக்கிறது? மசாலா தோசையுடன் நின்று விட்டதா? அதற்கு மேலும் கேட்கிறதோ?" என்று அதட்டினார்.

"இல்லை. நான்...இப்பொழுது......சற்று தேவலை!" என்று குழறினேன்.

"என்றைய தினத்திலிருந்து உனக்கு ஜுரம்?" என்று கேட்டார்.

"செவ்வாய்க்கிழமை சாயந்திரம் எட்டு மணியிலிருந்து!" என்று ஏதோ உளறினேன்.

இச் சமயத்தில் என் நண்பர்களும் என்னைக் கைவிடலாயினர்.

"செவ்வாய்க்கிழமை மாலை 'நியூ க்ளோப்'பில் 'ஜுலியஸ் ஸீஸர்' என்ற படம் நாம் பார்க்கவில்லையா?' என்றான் என் நண்பன்.

"ஓட்டல் சாப்பாடும், பட்டிணவாசமும் உன்னை இவ்வாறு செய்யச் சொல்கிறது. சரி, எழுந்திரு!' என்றார் என் தகப்பனார். அன்றைய மெயிலிலேயே நானும் என் தந்தையும் ஊருக்குப் புறப்பட்டு விட்டோம். வழக்கப்படி என் தகப்பனார் எனக்கு ஒரு பெண் பார்த்திருப்பதாகவும், அதற்காக என்னை அழைத்துப் போகத்தான் வந்ததாகவும் தெரிவித்தார். நான் பதில் பேசவில்லை.

நான் ஊருக்குப் போய்ச் சேருகிறவரையில் ஒன்றும் பேசவில்லை. அப்பா பேசினதையெல்லாம் கேட்டுக் கொண்டு, மௌனமாக ஆமோதித்துக் கொண்டு சென்றேன்.

ஊர் போய்ச் சேர்ந்ததும் அம்மா வழக்கம் போல் மிகவும் அன்போடு வரவேற்றாள். காப்பி, சிற்றுண்டியெல்லாம் முடிந்த பிறகு, ஸ்நானம் செய்து விட்டுச் சாப்பிட்டு விட்டுச் சிறிது நேரம் படுத்தேன். அயர்ந்து தூங்கிப் போய் விட்டேன்.

"மணி, எழுந்திரு. முகம், கைகால் கழுவிக் கொண்டு டிரஸ் பண்ணிக் கொள். பெண் பார்க்கப் போக வேண்டும்!" என்ற அப்பாவின் குரலைக் கேட்டு அவசரம் அவசரமாக எழுந்து டிரஸ் செய்து கொண்டேன். அப்பா சமாசாரமெல்லாம் ஒரே கண்டிப்பு என்று எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் நான் மறு வார்த்தை பேசவில்லை. இருவரும் வண்டியேறிப் புறப்பட்டோம்.

நானும் என் தந்தையும் பெண் வீட்டு வாசலில் வண்டியை விட்டு இறங்கியதும் பெண்ணின் தந்தை எங்களை மரியாதையுடன் வரவேற்றார். சிறிது நேரம் அவர் என் தந்தையுடன் பேசிக் கொண்டதிலிருந்து பெண் ஒன்பது வகுப்புவரையில் படித்திருக்கிறாள் என்றும், சுமாராக பாடுவாள், சமையல் நன்றாகச் செய்வாள் என்றும் அறிந்து கொண்டேன்.

பிறகு அவர் உள்ளே நோக்கி, "அம்மா, விமலா! இங்கே வா அம்மா!" என்றார். ஒரு கையில் காப்பியுடனும் மற்றொரு கையில் பலகாரத்துடனும், ஒரு பெண் வெட்கப் பட்டுக்கொண்டு என் முன்னின்றாள். அவ்வளவு சிவப்பென்று சொல்வதற்கில்லை. ஆனால் கறுப்பும் இல்லை. நடுத்தர நிறம். முகம் நல்ல களையாக இருந்தது. சிறிது நேரம் என் தந்தை அவருடன் பேசினார். பிறகு நாங்கள் விடை பெற்றுக் கொண்டோம். என் தகப்பனாரும் முறைப்படி ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுவதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

பிறகு வண்டியில் ஏறிக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தோம். வண்டியில் இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

ஊர் வந்து, வீட்டு வாசலில் வண்டியை விட்டு இறங்கி உள்ளே போனதும் அப்பா, "ஏண்டா, மணி! உனக்குச் சம்மதம் தானே?" என்று கேட்டார்.

"உம்..." என்று நான் மென்று விழுங்கிக் கொண்டே, "பெண்...கறுப்பாக...இருக்கிறாள்!" என்றேன்.

அவ்வளவுதான் அப்பாவுக்குக் கடுங்கோபம் வந்து விட்டது.

"பெண்ணுக்கு என்ன அழகில் குறைந்து போய் விட்டது? முகத்தில் களை சொட்டுகிறது! அது இருக்கட்டும், நீ என்ன, ரொம்ப சிவப்பு என்று உன் மனசிலே எண்



"என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவதாகச் சொல்லுகிறாயே! அவளுக்குத் தேவையான பொருள்களை யெல்லாம் உன்னால் வாங்கித்தர முடியுமா?"

"......ஊஹும். இனிமேல் முடியாது. ஸார்! அதனால்தான் நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்!"

ணமோ?'' என்று பட பட வென்று பொரிந்து தள்ளினார் அப்பா.

"பெண்ணுக்கு அதிகமாகப் படிப்பில்லை'' என்றேன் நான்.

"குடும்பம் நடத்தும் பெண்ணுக்கு இதை விடப் படிப்பு என்னத்துக்கு? படித்து விட்டு உத்தியோகம் செய்யப் போகிறாளோ?'' என்றார் அப்பா கடுமையாக.

இதற்கெல்லாம் நான் மசியவில்லை. ஒரேயடியாக என்னால் அந்தப் பெண்ணை மணக்க முடியாது என்று கூறிவிட்டேன். மிகுந்த வருத்தத்துடன் அப்பெண்ணின் தந்தைக்குப் பையன் படிப்பு முடியும் வரையில் விவாகம் செய்து கொள்ளப் பிரியப்படவில்லை என்று கடிதம் எழுதி விட்டார் என் தகப்பனார்.

ஆயினும் என் மேல் மட்டும் என் தந்தைக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டிருந்தது. இனிமேல் எனக்காகத் தாம் ஒரு பெண்ணையும் பார்க்கப் போவதில்லை என்றும் சொல்லிவிட்டார். அந்தப் பெண் வீட்டாருக்கு வேண்டியவன் ஒரு கிழவி எங்கள் பக்கத்து வீட்டில் இருந்தான். அவன் இங்கு நடந்ததை எல்லாம் உடனே அப் பெண் வீட்டாருக்குத் தெரிவித்து விட்டான். அவர்களுக்கும் என்னிடம் மிகுந்த கோபம்.

விடுமுறை முடிந்து நான் கலாசாலைக்கு வந்துசேர்ந்தேன். ஒருவாறாக, என் கல்லூரிப் படிப்பும் முடிந்தது. அன்று கல்லூரிப் படிப்பில் எங்களுக்குக் கடைசி நாள். அன்று மாலை கமலியை நான் சந்திக்க நேர்ந்தது. "படிப்பு முடிந்துவிட்டதே, இனிமேல் என்ன செய்யப் போகிறாய்!'' என்றேன்.

"என் தகப்பனார் சம்சாரி. அவருக்கு வரும் வருவாய் சாப்பாட்டிற்குத்தான் சரியாகிறது. இன்னும் மூன்று பெண்கள் இருக்கிறார்கள் கல்யாணத்திற்கு. அதனால் நான் ஏதாவது உபாத்தியாயினி உத்தியோகம் கிடைத்தால் போகப் போகிறேன்'' என்றாள்.

"ஆனால் நம் விவாகம்?'' என்றேன்.

"இன்னும் என் மூத்தவளுக்கே கல்யாணம் ஆகவில்லை. எனக்கு என்ன அவசரம்!''

"ஆனால், நான் உன்னை மறந்து விட வேண்டியதுதானா?''

"மறப்பானேன். அதிர்ஷ்ட மிருந்தால் நாம் இருவருமே ஏன் விவாக கோலத்தில் சந்திக்கக் கூடாது?'' என்றாள். அவளது விலாசத்தை எழுதி வாங்கிக் கொண்டேன்.

கடவுளருளால் சில நாட்களில் எனக்குச் சென்னையிலேயே ஒரு கம்பெனியில் குமாஸ்தா வேலை கிடைத்தது. இப்பொழுது எல்லாம் நான் ஊருக்குச் சென்றால்கூட என் தந்தை கல்யாணப் பேச்சையே எடுப்பதில்லை. இரண்டு வருஷங்கள் மேலும் ஆயின. கமலியின் விலாசப்படி அவள் ஊர் சென்று பார்த்த நான் அவர்களுக்கு வேலை மாற்றலாகி இருந்ததால் வேறு எங்கேயோ சென்று விட்டதாக அறிந்து வந்தேன்.

என் கம்பெனியில் மூன்று மாதங்களுக்கு முன் ஒரு புது மானேஜர் வந்து சேர்ந்தார். இள வயதுதான். என்னிடம் தனியாக அன்பாகப் பழகி வந்தார். ஒரு நாள் தன் வீட்டிற்கு வரும்படியும் கூறி இருந்தார். ஆனால் நான் போகவே இல்லை. ஒருநாள் மாலை ஆபீஸ் விட்டதும் என்னிடம் வந்தார் என் மானேஜர். "இன்றைய இரவுச் சாப்பாடு என் வீட்டில் சாப்பிட வேண்டும். ஊரிலிருந்து லீவிற்கு என் மைத்துனியும் வந்திருக்கிறாள். ஒரு ஸ்கூலில் டீச்சராக இருக்கிறாள். இன்னும் விவாகமாக வில்லை. நீ பெண்ணைப் பார்த்து உனக்குப் பிடித்ததானால், மேற்கொண்டு நான் உன் தந்தைக்குக் கடிதம் எழுதி வரவழைக்கிறேன்!'' என்று மூச்சு விடாமல் பேசினார். அத்துடன் விடாமல் அவர் காரிலேயே என்னையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்.

மானேஜரின் வீடு நன்றாகத்தான் இருந்தது. சமயலறையைத் தவிர மிகுதி எல்லாம் கொண்டுபோய்க் காண்பித்தார். பிறகு இருவரும் ஹாலில் அமர்ந்தோம். "கமலா, காப்பி கொண்டு வா'' என்றார். சிறிது நேரத்தில் கிமிர்ந்தநடையுடன் கையில் காப்பியுடன் ஒரு பெண் எங்களை நோக்கி வந்தாள். என்ன அதிசயம். அவள் வேறு யாரும் இல்லை. கல்லூரியில் என்னுடன் படித்த கமலியே தான்!

கமலி காப்பியை வைத்துவிட்டுப் போய் விட்டாள். சிறிது நேரத்தில் சமையலறையிலிருந்து ஒரு குரல் கணீரென்று கேட்டது.

"அக்கா, அவரை நான் மணக்க முடியாது. அவர் கறுப்பாக இருக்கிறார்'' என்றது கமலியின் குரல்.

"சீ அப்படி யெல்லாம் சொல்லப்படாது. என்ன இருந்தாலும் உனக்கு இந்தத் துடுக்குத்தனம் ஆகாது'' என்றது மற்றொரு குரல்.

"நீ ஒன்றும் தவறுதலாக எண்ணாதே, மணி! கமலியின் சகோதரியை நான் மணந்து கொள்வதற்கு முன் வேறு யாரோ ஒரு பையன் வந்து பார்த்து, 'பெண் கறுப்பு. வேண்டாம்' என்றானாம். அவன் மனசில் வேறு எந்தப் பெண்ணையாவது எண்ணிக் கொண்டிருப்பான். இதைத் தட்டிக் கழிப்பதற்காக அவ்வாறு சொல்லி இருப்பான். பிறகுதான் நான் கமலியின் சகோதரியை மணந்தேன். தன் அக்காவை யாரோ அவமதித்த குற்றத்திற்காகக் கமலி இப்படிக் கூறி யிருக்கிறாள்'' என்றார் மானேஜர்.

இருவரும் சாப்பிட உட்கார்ந்தோம். மானேஜரின் மனைவி பரிமாற வந்தாள். என்ன விந்தை! நான் கறுப்பு வேண்டாமென்ற விமலாதான் மானேஜரின் மனைவி, கமலியின் சகோதரி.

* * *

"இன்னும் என்ன யோசனையடா? உன் மனைவி கமலி நலங்குக்குக் கூப்பிட வந்திருக்கிறாள். எழுந்து போய் உட்கார்'' என்றாள் என் அம்மா. என் நினைவும் கலைந்தது.

# குளிரச் செய்யும் மாடங்கள்

மின்சார சக்தி உற்பத்தி செய்யும் இயந்திரசாலைகளுக்கு சாதக
மாய் கட்டப்படும் இந்த கம்பீரமாய் வானத்தை அளாவி நிற்கும்
மாடங்களுக்கு "குளிரச் செய்யும் மாடங்கள்" என்று பெயர்.
இவை நம் நாட்டின் மின்சார உற்பத்தி திட்டங்களில்
மிக மிக முக்கியமான ஸ்தானத்தை வகிக்கின்றன.
இதைப் போலவே, ஏ. ஸி. ஸி. ஸிமென்டும்
தேச முன்னேற்றத்தில் மிக முக்கியமான
ஸ்தானத்தை வகித்து வருகிறது.




**தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிட்**

இவர்களின் வியாபார மானேஜர்கள்

**தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.**

## 4. தொட்டில் பழக்கம்

ஆசிரியர் : கமல்ஜோஷி

மொழிபெயர்ப்பு : ரா. வீ.

லதாவைப் பார்த்ததும் கேசவன், "வா, லதா! வா! உட்காரு!" என்று அன்புடன் முகமன் கூறி வரவேற்றான்.

"கேசவ அண்ணா! வரவேற்பு எல்லாம் அப்புறம் ஆகட்டும். முதலில் என் வேலை விஷயம் என்ன ஆயிற்று? அதைச் சொல்!" என்று கேட்டாள் லதா.

"வேலை கிடைத்து விடும். எதற்காக இவ்வளவு கவலைப்படுகிறாய்? நீ வேலைக்கு மனுப் போட்டிருந்தாயே, அந்த வேலையில் இந்த மாதம் யாரையும் நியமிக்கப் போவதில்லை. எங்கள் கம்பெனி டைரக்டர்கள் கூட்டத்தில் இப்படி நிச்சயமாகி விட்டது. ஏனெனில் இப்பொழுது ஆள் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி நிலையில் இப்பொழுது புதிதாக ஒரு 'ஸ்டெனோகிராபர்' நியமித்தால், சிப்பந்திகளின் சங்கத்திலிருந்து பெரிய கிளர்ச்சிகள் எழும்பக் கூடும். ஆதலால்தான் அதை ஒத்திப் போட்டிருக்கிறார்கள். அடுத்த மாதம் இரண்டொரு கிளார்க்குகள் புதிதாக எடுத்துக் கொள்வதாக இருக்கிறோம். அப்பொழுது அவசியம் உன்னை எடுத்துக் கொள்கிறேன். கவலைப்படாதே!" என்றான் கேசவன்.

"கேசவ அண்ணா! எனக்கு இப்பொழுதே வேலை கிடைத்து விட வேண்டும். எங்கள் நிலைமை......" அதற்குமேல் லதாவினால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. தொண்டையைப் பேச முடியாமல் அடைத்து விட்டது.

"என்ன செய்வது, லதா? நீயே சொல். என் கைகள் கட்டப் பட்டிருக்கின்றன. என் சக்திக்கு உட்பட்ட விஷயமாக இருந்தால் உனக்குச் செய்யத் தயங்குவேனா? கம்பெனி என்னுடையதுதான் என்றாலும், எனக்கு எதுவும் அதிகாரம் இல்லையே! என்ன செய்வது?" என்றான் கேசவன்.




அன்றைக்குக் காந்தாவும் லதாவிடம் நல்லவிதமாக நடந்து கொண்டதாகத் தான் தோன்றியது. தன்னுடன் கூட அழைத்துப் போய்த் தன் மாளிகை முழுவதையும் ஒரு இடம்கூட விடாமல் சுற்றிக் காண்பித்தாள். ஒவ்வொரு அறையையும் ஒட்டினாற் போல்ஒரு ஸ்நான அறை இருந்தது. அவற்றைக் கண்ணுற்ற லதாவுக்கு, 'ஆகா! இந்த வீட்டில்தான் என்ன வசதி! என்ன வசதி!' என்று கூறத் தோன்றியது.

"இதுதான் என் அலங்கார அறை. 'காரேஜு'க்கு மேலே மெத்தை வைத்துக் கட்டியிருக்கிறோம். அங்கே வேலைக்காரர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதோ பார்த்தாயா? இது தான் பியானோ. நான் வாசிப்பதில்லை. ஆனாலும் வாங்கி வைத்திருக்கிறேன். இது மான் கொம்பு என்று எண்ணாதே, லதா! இது மின்சார விளக்கு. இந்தப் பித்தானை அமுக்கினால் அறை முழுவதும் சரத்காலப் பௌர்ணமிச் சந்திரனைப் போல நிலவொளி வீசும். இருட்டினால்தான் இதன் பெருமை தெரியும். பகலில் பெருமை தெரியாது" என்று வாய் ஓயாமல் வர்ணிக்க ஆரம்பித்து விட்டாள் காந்தா.

லதாவுக்கு அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க அப்பொழுது பிடிக்கவில்லை. இருந்தாலும் அவள் பலவந்தமாக அவற்றையெல்லாம் கேட்டுப் பார்த்து ரசிப்பது போலப் பாவனை செய்யும்படியாகி விட்டது. காந்தா அதே பழைய காந்தாவாகத் தானே இருக்கிறாள்! அப்பொழுதுக்கு இப்பொழுது துளிக்கூட மாறவில்லையே! தன்னையும் தன் பொருள்களையும் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்வதில் கொஞ்சமும் கூடக் குறைச்சல் காட்டவில்லையே! என்ன இருந்தாலும் தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் அல்லவா?

இதை எண்ணியதும் லதாவுக்கு அடக்க மாட்டாத சிரிப்பு வந்து விட்டது. சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு அவளுடைய கதையைக் கேட்டாள்.


"அப்பப்பா! இந்த வீட்டில்தான் என்ன செலவு என்கிறாய்!" பெண்களுக்கே இயல்பான குணத்துடன் தன் வீட்டுப் பெருமையைக் காந்தா லதாவிடம் அளக்க ஆரம்பித்து விட்டாள். "செலவாளி என்றால், அவரைப்போன்ற செலவாளியை நீ பார்த்திருக்க மாட்டாய்! இந்த புகைப் படத்தைப் பார்த்தாயா? இது பத்து வருஷங்களுக்கு முன்னால் எடுத்ததாம். அதுவும் எங்கள் கல்யாணத்துக்கு இரண்டு நாட்கள் முந்தி எடுத்ததாம். இந்தப் புகைப் படத்தினிடம் அவருக்கு அலாதிப்

பிரேமை. இதற்குப் போட்டிருக்கும் சட்டமும் கண்ணாடியும் எப்படியிருக்கின்றன, பார்த்தாயா? இந்தச் சட்டம் ரொம்பரொம்ப விலை உயர்ந்தது. இது சுத்தமான யானைத் தந்தத்தினால் ஆனது. இதற்கு மட்டும் என்ன விலை, தெரியுமா? நாற்றைம்பது ரூபாய். இந்த அறையில் பார்க்கிறாயே, இந்தச் சிங்காரச் சாமான்கள் அவ்வளவும் அவர் வாங்கினதுதான். எங்கேயாவது போகும் பொழுது வரும் பொழுது அவர் கண்களுக்கு ஏதாவது நல்ல பொருளாகத் தென்பட்டு விட்டால், உடனே வாங்கி விடுவார். விலையைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டார்" என்றான்.

"அப்படியா?" என்று லதா ஒப்புக்கு உலர்ந்த குரலில் கேட்டு வைத்தான்.

"என்னதான் இருந்தாலும் இவ்வளவு அடாபிடிச் செலவு நம் குடும்பத்துக்குக் கட்டுமா?"—பெண்களுக்கு இயல்பான பேச்சு காந்தாவின் வாயிலிருந்து வெளி வந்தது.

ஒரு 'ஊம்' கொட்டி விட்டு லதா மௌனமானான். அவன் கண்கள் எரிந்து கொண்டிருந்தன. 'அப்பப்பா! இந்தத் தம்பதிகள் தானெவ்வளவு ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார்கள்' என்றெண்ணம் அவன் உள்ளத்திலே இடம் பெற்றது. அநாவசியமான ஆடம்பரப் பொருள்களில் எல்லாம் காசு கரியாகிறது. ஆயிரக்கணக்கான ரூபாய்



களைக் கொட்டி வீடு முழுவதிலும் பொருட்காட்சிப் பொருள்களாகவே நிரப்பியிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கெல்லாம் இப் பொருள்களிடமிருந்து மனம் சலித்து விட்டால், இவற்றைத் தூக்கியெறிந்து விட்டு வேறு பொருள்கள் வாங்குவார்கள். இல்லாவிட்டால் இந்தப் புகைப் படத்துக்கு நாற்றைம்பது ரூபாய் பெறுமானமுள்ள சட்டம் எதற்கு? இந்த நாற்றைம்பது ரூபாய் லதாவுக்குக் கிடைத்தால் இரண்டொரு மாதங்கள் கவலையற்று வாழ மாட்டானா? ஆனால் அவனுக்கு யார் கொடுக்கப் போகிறார்கள்?

லதா விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட பொழுது கேசவன், "லதா! அடிக்கடி வந்து போய்க்கொண்டிரு. உனக்காக இன்னும் இரண்டு மூன்று

இடங்களில் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். என்ன ஆகிறது என்று பார்ப்போம்'' என்றான்.

''ஆகட்டும்'' என்று சொல்லித் தெருவில் இறங்கி நடந்த லதாவுக்குக் கேசவனிடம் கொஞ்சம் மனுஷத் தன்மை இருப்பதாகவே தோன்றியது. அவளுடைய குடும்பத்துக்கு அவனுடைய தந்தை இழைத்த கொடுமையைக் கேசவன் நன்றாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பிராயச் சித்தமாகத் தான் கேசவன் தனக்கு ஏதாவது உதவி செய்ய முன்வந்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

சில தினங்களுக்குப் பிறகு அநேகமாகத் தினமும் லதா கேசவனின் வீட்டுக்குப் போய் வரலானாள். அவள் போகாவிட்டாலும், அவளுடைய தாயார் பலவந்தப்படுத்தி அனுப்பி வைப்பாள். ''தினம் தினம் நாம்தான் போக வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு எப்படி நினைவு இருக்கும்? நமக்கு முடையா, அவனுக்கு முடையா?'' என்று தேள் கொட்டுவது போலக் கொட்டிக் கேசவனின் வீட்டுக்குப் போய் வருமாறு தூண்டுவாள்.

இல்லாவிட்டால், கேசவனின் வீட்டுக்கு வந்து போக லதாவுக்கு அவ்வளவு உற்சாகம் ஏற்படக் காரணம் வேறு எதுவும் இருக்க நியாயம் இல்லை. அவளைக் கவர்ந்து இழுப்பதற்கு அவன் வீட்டில் என்ன இருந்தது? காந்தா தன் வீட்டுப் பெருமையைப் பீற்றிக் கொள்வதையும், அர்த்தமில்லாமல் 'வளவளா'வென்று தற்பெருமை அடித்துக் கொள்வதையும் கேட்டுக் கேட்டுத்தான் அவளுடைய காது புளித்து விட்டதே! லதா வீட்டுக்கு வந்தாளோ இல்லையோ, என்ன என்ன சாமான் எந்த எந்தக் கடையில் வாங்கப்பட்டன என்று கடை ரசீதை முதற்கொண்டு காட்டிக் கணக்குப் போட்டுத் தன் பணக்காரத் தன்மையில் பெருமை கொள்வாள் காந்தா. அதையெல்லாம் கேட்டு லதாவுக்குப் பொறாமை ஏற்படா விட்டாலும், கேட்கப் பிடிப்பதில்லை; கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. இருந்தாலும் என்ன செய்வது?

காந்தாவுக்கு வேண்டிய பணங்காசு இருக்கிறது. சொத்து சுதந்தரம் இருக்கிறது. வயதும் ஆகிவிட்டது. இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராகக் கூட ஆகிவிட்டாள். ஆனால் இன்னும் அவளிடத்தில் காம்பீர்யம் படியவில்லை. சிறு பிள்ளைத்தனம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. மனத்தின் எளிமை மறையவில்லை. மதம் பிடித்த பேச்சுக் குறையவில்லை. பியானோவுக்கு ஜாலர் வெனிஸிலிருந்து வந்தால் லதாவுக்கு என்ன? அல்லது வியன்னாவிலிருந்து வந்தால்தான் என்ன? இதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு அவள் என்ன செய்யப் போகிறாள்? ஏதாவது பெறுமானமுள்ள பொருளின் விலையைக் கேட்டு விட்டால் லதாவின் உள்ளம் கணக்குக் கூட்டத் தொடங்கிவிடும். 'இந்தத் தொகையில் ஒரு சிறு தொகை நம் கைக்குக் கிடைத்தால், தாயாரின் மருந்து மாயத்துக்கு உதவுமே! பழம் வாங்கிக் கொடுக்கலாமே!' என்று எண்ணுவாள். பத்துப் பதினைந்து ரூபாய் பெறுமானமுள்ள நூல் புடவை வாங்கிக் கட்டிக் கொள்வதற்கே கஷ்டப்படுகிறவளுக்கு நூறு நூற்றைம்பது ரூபாய் பெறுமானமுள்ள பட்டுப் புடவையைக் காட்டுவதனால் என்ன பிரயோசனம்? அவள் தன் வாழ்க்கையில் என்றைக்காவது அந்த மாதிரிப் புடவை வாங்கிக் கட்டிக் கொள்ள முடியப் போகிறதா?

லதா அதையெல்லாம் பார்த்துச் சலித்து விடுவாள்; களைத்து விடுவாள். 'இதேதடா இது, கிரஹசாரம்?' என்று அவளுக்குத் தோன்றும். எனவே ''ஏன், மன்னி! கேசவ அண்ணாவிடம் என் வேலை விஷயத்தைப் பற்றிச் சொன்னாயோ?'' என்று பேச்சை மாற்றும் நோக்கத்துடன் கேட்பாள்.

''சொன்னேனடி அம்மா, சொன்னேன்! உனக்குக் கொஞ்சங்கூடப் பொறுமையையே காணோமே! இந்த ஆண் பிள்ளைகளோடு உட்கார்ந்து நீங்கள் எல்லோரும் எப்படித் தான் வேலை செய்கிறீர்களோ, எனக்குப் புரியவே மாட்டேன் என்கிறது!'' என்பாள்.

ஒருநாள் இப்படிச் சொல்லிக் கொண்டே வந்த காந்தா லதாவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''உன் அண்ணாவுக்குப் பெண்களை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று பைத்தியம் எங்கிருந்துதான் பிடித்ததோ, தெரியவில்லை! என்ன கர்மாந்திரமோ? இந்தப் புருஷர்களுக்கு வேலையே செய்யத் தெரிவதில்லையோ?'' என்றாள்.



விருந்தாளி:—ஏன் அம்பி, எப்பொழுதும் இப்படித்தான் பேசாமல் இருப்பாயா?

அம்பி:—இல்லை. பேசுவேன். உங்களுடைய நீள மூக்கையும் வழுக்கைத் தலையையும் பற்றி ஒன்றும் சொல்லாமல் இருந்தால் எனக்கு நிறையச் சாக்லேட் தருவதாக அப்பா சொல்லியிருக்கிறார்!

காந்தா இப்படியெல்லாம் பேசத் தொடங்கி விடவே, லதாவுக்கு ஒரு சந்தேகம் உதித்தது. 'தான் கேசவனைச் சந்திக்க வந்து போவது ஒருவேளை காந்தாவுக்குப் பிடிக்கவில்லையோ?' என்று எண்ணினாள். அதற்கேற்றாற் போலச் சிற்சில சமயம் காந்தா, "லதா! உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பொறாமை உண்டாகிறது. உனக்குக் கால் கட்டு, கைக்கட்டு ஒன்றும் கிடையாது. சுதந்திரமாயிருக்கிறாய். உன் இஷ்டப்படி நடக்கிறாய். உனக்கு எங்கெங்கே போக வேண்டும் என்று தோன்றுகிறதோ, அங்கெங்கெல்லாம் போகிறாய். உனக்குக் கவலை, கஷ்டம் என்று ஒன்றும் கிடையாது. நாங்களோ குடும்பத்தில் கிடந்து உழலுகிறோம். எங்களுக்குச் சாகக் கூட நேரம் கிடைப்பதில்லை. இந்தக் குடும்ப வாழ்க்கையே மிக மிகச் சிக்கல் நிறைந்தது. என்ன, நான் சொல்வது உண்மைதானே?" என்பாள்.

பொறாமை! அதுவும் யாரிடம்? லதாவிடம். கண்ணாடியில் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்த லதாவுக்குச் சிரிப்பு வந்தது. இருபத்து நாலாவது வயது முடிவதற்கு ஆகிவிட்டது. மலர்ச்சியுற்றிருந்த உடலும் உள்ளமும் கருகி வாடத் தொடங்கிவிட்டன. உலர்ந்த காம்பு மட்டும்தான் பாக்கி யிருந்தது. களையிழந்த கண்கள், உலர்ந்து வறண்ட வதனம். குச்சி குச்சியான கை கால்கள். ஏக்கமே உருவான அவளிடமா பொறாமை? என்ன கஷ்டம்! என்ன வாழ்க்கை!

சமையற்காரனுக்கு ஏதோ சொல்வதற்காகக் காந்தா எழுந்து வெளியே போனான். லதா அந்த அறையை ஒரு முறை நன்றாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டாள்.

கடைகளில் காட்சிப் பொருள்களை விலை எழுதி ஒட்டிய காகிதத்துடன் 'ஷோ கேஸி'ல் வைத்திருப்பார்களே, அதுபோலக் காந்தாவும் ஏன் வைக்கக் கூடாது? அப்படி வைத்திருந்தால் எத்தனையோ வேலைகளும் சிரமங்களும் அவளுக்குக் குறைந்திருக்குமே? வரும் விருந்தினர்களுக்குப் பொருள்களின் விலையைக் கூறித் தன் வாய்க்கு வலியைக் கொடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமோ, சிரமமோ அவளுக்கு நேர்ந்திராதே!

இப்படி யெண்ணியவாறே, அவள் மேஜைமீதிருந்த கேசவனின் போட்டோவைக் கையில் எடுத்துக் கொண்டாள். பிறகு புரட்டிக் கிரட்டி அதன் சட்டத்தைப் பார்க்கலானாள். யானைத் தந்தத்தினால் ஆகிய சட்டம்! இதன் விலை நூற்றைம்பது ரூபாயாம்! அப்பா! இந்தச் சட்டத்தை அவள் எடுத்துக் கொண்டு போனால் என்ன? பழைய சட்டங்கள் விலை போகாதா? அதிகம் கிடைக்காவிட்டாலும் ஐம்பது அறுபது ரூபாய்க்கு மோசமிராது என்று எண்ணினாள்.

ஐம்பது ரூபாய் கிடைப்பதாகவே வைத்துக் கொள்வோம்.—லதா கணக்குப் போட ஆரம்பித்து விட்டாள். அம்மாவுக்குப் பழம், பால், மருந்து எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்து விடலாம். எல்லாச் செலவும் போகக் கொஞ்சம் பாக்கி யிருக்கும். அதைக்கொண்டு அவள் தனக்குத் தேவையான ரவிக்கை புடவை முதலியவை ஏதாவது வாங்கிக் கொள்ளலாம் அல்லவா?

இப்படி அவள் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுதே பின்னாலிருந்து காலடி ஓசை கேட்டது. அதைக் கேட்டதும் அவள் துணுக்குற்றாள். இந்தத் தடவை அவள் உண்மையாகவே, திருட்டுக் குற்றத்தில் பிடிக்கப்பட்டு விட்டாள்! புகைப்படத்தைச் சட்டத்துடன் அப்படியே தன் புடவைத் தலைப்பில் மறைத்துக் கொள்வதா, அல்லது மேஜையின்மீதே வைத்து விடலாமா? இதை அவள் நிர்ணயித்துக் கொள்வதற்கு முன்பாகவே, காந்தா அறைக்குள் நுழைந்து விட்டாள்.

லதாவுக்கு இருதயம் பட படவென்று அடித்துக் கொண்டது. காந்தா தன்மேல் சீறி விழுவாள். கண்டபடி திட்டிக் காவலாளியை விட்டுக் 'கல்தா' கொடுக்கச் சொல்லி வீட்டை விட்டு வெளியே அனுப்புவாள் என்றெல்லாம் அவள் எண்ணினாள்.

காந்தா சிறிது நேரம் கண் இமைகளை மூடாமல் பார்த்த வண்ணம் நின்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் கண்களில் ஒரு விசித்திரமான ஒளி தாண்டவமாடியது; முகத்தில் முறுவல் செளிந்தது. "நீ போட்டோ பார்த்துக் கொண்டிருந்தாயா, என்ன? இந்தக் கோலத்தில் அவர் அழகாகக்



நண்பன்:—ராஜு, உன் முதலாளியைத் திருப்தி செய்விக்க வேண்டுமானால் அவரை முகஸ்துதி பண்ண வேண்டும். 'நீங்கள் காட்டும் அன்புக்கும் உங்கள் பெருந் தன்மைக்கும் நான் அருகன் அல்ல' என்று சொல்லிப் பாரேன்!

ராஜு:—அதைத்தான் எனக்கு முன்னால் அவரே என்னிடம் சொல்லி விட்டாரே!



பிரசங்கி :—வர்த்தகர்களுக்கு முக்கியமாக வேண்டியது இரண்டே இரண்டு குணங்கள். அவை, நாணயமும் புத்தி சாலித்தனமும்தான். பிறருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பது நாணயம். பிறருக்கு வாக்குக் கொடுக்காமல் இருப்பது புத்தி சாலித்தனம்!

காணப்படுகிறார் அல்லவா? இந்தப் புகைப் படம் எடுத்த காலத்தில், இதே கோலத்தில் அவரை எத்தனையோ தடவைகள் நீ பார்த்திருப்பாய் என்று எண்ணுகிறேன். என்ன, நான் சொல்வது உண்மைதானே? என்னிடம் இந்தப் புகைப் படத்தின் இன்னொரு பிரதி இருக்கிறது. உனக்கு வேண்டுமானால் அதைத் தருகிறேன்'' என்றான். பிறகு வேடிக்கையும் குத்தலும் கலந்த குரலில், "மனிதனை நேரில் பார்த்தால்கூட மனம் திருப்தியுறுவதில்லை. அதனால்தான் ஜனங்கள் தனக்கு வேண்டியவர்களின் புகைப் படம் பிடித்து வைத்துக் கொள்கிறார்களோ என்று எண்ணுகிறேன். ஏன், லதா! நான் சொல்வது உண்மைதானே? எனக்கும் கொஞ்சம் தெரிகிறதல்லவா?'' என்றான்.

அதைக் கேட்ட லதாவுக்கு வேண்டுமென்றே நிர்ப்பந்தமாகச் சிரிக்கும்படியாகி விட்டது. அதனால் ஒரு தடவை இலேசாகச் சிரித்து வைத்தாள். வேறு ஒரு சமயமாயிருந்தால், இந்த மாதிரிச் சொற்களைக் கேட்டபின் ஒரு வாய்த் தண்ணீர்கூட அவள் வயிற்றில் இறங்கியிராது. இருந்தாலும் சந்தர்ப்பம் அவளை இப்படிக் கொண்டு வந்து விட்டது. என்ன செய்வாள், பாவம்! சிறிது நேரம் கழித்து, "மன்னி, நான் போய் வரட்டுமா?'' என்று சொல்லி விடைபெற்றுக் கொள்ள முயன்றாள்.

"அடி! என்னடி அம்மா, அதற்குள் இவ்வளவு அவசரம்?'' என்று கூறிய காந்தா, "சற்று இரு! பக்கத்து அறையில் தான் உன் அண்ணா இருக்கிறார். அவரை வேண்டுமானால் அழைத்து வருகிறேன்!'' என்றாள்.

இதைச் சொன்னதும் அவள் பக்கத்து அறையின் திரையை அகற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். உள்ளே போனவள் வெகு நேரம் வரை வெளியே வரவில்லை. உள்ளேயே தங்கி விட்டாள். நிமிஷம் நிமிஷமாகப் பல நிமிஷங்கள் போய்விட்டன. நேரம் ஆக ஆக லதாவுக்கு என்னவோ போலிருந்தது. 'நாம் போய் விடலாமா?' என்று எண்ணினாள். 'சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டால் என்ன?' என்று கூட எண்ணினாள். ஆனாலும் அப்படிச் செய்ய அவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை. அப்படிச் செய்வது தவறுதலாகப் பட்டது. அவள் இரண்டு மூன்று தடவை அந்த அறையை வளைய வளைய வந்தாள். பிறகு பக்கத்திலிருந்த திரைக்குப் பின்னால் போய் நின்று கொண்டாள். அங்கிருந்து பக்கத்து அறையில் நடந்து கொண்டிருந்த பேச்சைக் கேட்க முடிந்தது. மிகத் தெளிவாகக் கேட்க முடியா விட்டாலும், விஷயத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இருந்தது, உள்ளிருந்து வந்த பேச்சுக் குரல்.

முதலில் காந்தாவின் குரல் கேட்டது. குரல் மெதுவாகத்தான் இருந்தது. ஆயினும் கூரியதாக இருந்தது. "நான் அவனை இங்கே வரக்கூடாது என்று தடுத்துவிடப் போகிறேன். ஆமாம், கட்டாயம் தடுக்கப் போகிறேன். நீங்கள் என்ன தடுத்தாலும் கேட்க முடியாது. அவன் தினம் தினம் எதற்காக இங்கே வருகிறான்?'' என்றாள் காந்தா.

"ஓகோ! அப்படியா சமாசாரம்?'' கேசவனின் கோபம் மிகுந்த குரல் கனமாக ஒலித்தது. "வேலை வேண்டி வருகிறான்! வேறு எதற்காக வருகிறான்? உனக்கு இது தெரியாதா? எதற்காகக் கேட்கிறாய்?'' என்றான்.

"வேறு எங்கும் வேலை கிடைக்கவில்லையோ? உலகத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுப்பதற்கு நீங்கள் ஒருவர்தானா அகப்பட்டீர்கள்? அவன் வேலைக்காகவா வருகிறான்? எதற்காக முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்கள்? அவன் உங்களைத்தான் பார்க்க வருகிறான். எனக்குத் தெரியாதாக்கும்? அவன் நடை யுடை பாவனையைப் பார்த்தாலே தெரியவில்லையா, எதற்காக வருகிறான் என்று? வந்ததும் வராததுமாகத் திருடனைப் போலத் திருட்டு விழி விழித்து இங்கும் அங்கும் பார்க்கத் தொடங்குகிறான். உண்மையைக் கேட்கப் போனால் அவன் நம்மைப் பார்த்துப் பொறாமைப் படுகிறான். நாம் சுகமாக இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. என்னைக் கண்டால் அவனுக்கு ஒரே எரிச்சலாக இருக்கிறது. நீங்கள் என்னிடம் இவ்வளவு அன்பாக நடந்து கொள்வதைக் கண்டு அவனுக்கு ஒரே அசூயை. நீங்களும் நானும் ஏதாவது பேசினால், எதற்காவது சிரித்தால் கூடக் காது கொடுத்துக் கவனமாகக் கேட்கிறான். நம்மை அப்படியே விழுங்கி விடுபவன் போலப் பார்க்கிறான். உங்களிடம் அவன் சிரித்துச் சிரித்துப் பேசுவதைப் பார்த்தால் என் வயிற்றைப் பற்றி எரிகிறது. இப்படியே சிரித்துப் பேசி அவன் உங்கள் மதியை மயக்கித் தன் கைக்குள் போட்டுக் கொண்டு

விடுவானோ என்று கூட எனக்குத் தோன்று கிறது!'' என்றாள் காந்தா.

''அடி அசடே! அநாவசியமாக என்ன வெல்லாமோ, அசட்டுக் கற்பனை செய்து கொண்டு ஏதேதோ உளறுகிறாயே! அவன் காதில் விழுந்து விடப் போகிறது. அப்புறம் அவன் வித்தியாசமாக எடுத்துக் கொண்டு விட்டால்......?'' என்றான் கேசவன்.

''விழுந்தால் விழட்டுமே! எனக்கு என்ன பயம்? அவன் கேட்க வேண்டும் என்பதற்காகத்தானே நான் இவ்வளவு இரைந்து சொல்கிறேன்? இப்படி மானம் கெட்டவனை, சூடு சொரணையற்றவனை......''

''சட்! வாயை மூடு. உளறாதே!'' என்று கேசவன் கடிந்து கொண்டான். ''எனக்கு அவனைக் குழந்தைப் பருவம் முதலே நன்றாகத் தெரியும். எனக்கு அவன் தங்கை மாதிரி. அவனைப்பற்றி......'' என்றான்.

''தங்கை மாதிரியா?''—காந்தா தோள் பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டு, ''இந்தமாதிரி எத்தனையோ தங்கைகளை நான் பார்த்திருக்கிறேன். உங்கள் போட்டோவை மார்புறத் தழுவி அதற்கு முத்தம் கொடுக்கும் பொழுது அவளை நீங்கள் பார்த்திருந்தால் சொல்வீர்கள்!'' என்றாள்.


இதைக் கேட்ட லதாவுக்குக் கால்கள் வெட வெட வென்று நடுங்கத் தொடங்கின. இன்னும் கொஞ்சம் நின்றால் நாம் கீழே விழுந்து விடுவோம் என்று தோன்றியது. சட்டென்று பக்கத்துச் சோபாவில் போய்த் தொப்பென்று உட்கார்ந்தாள். பிறகு நெற்றியில் பொட்டிட்டிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, அதே கைக் குட்டையினால் தன் முகத்தை மூடிக் கொண்டாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பக்கத்து அறையிலிருந்து காந்தா அந்த அறைக்கு வந்தாள். ''உன்னை வெகு நேரம் காக்க வைத்துவிட்டேன். வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாதே. இந்தப் புகைப் படத்தைத் தேடி எடுக்க நேரம் ஆகிவிட்டது. இந்தா!'' என்று சொல்லிக் காந்தா கேசவனின் புகைப் படத்தை லதாவினிடம் நீட்டினாள்.

யந்திர வசப்பட்டவள் போல லதா கை நீட்டி அந்தப் புகைப் படத்தை வாங்கிக் கொண்டாள். கேசவனும் காந்தாவுக்குப் பின்னாலேயே லதாவை அனுப்ப வந்தான். வறண்டு போன தொண்டையுடன் தழுதழுத்து நடுங்கும் குரலில் லதா எப்படியோ இருவரையும் பார்த்துக் கைகூப்பி, ''நல்லது. நான் போய் வரட்டுமா?'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டாள்.

அடுத்த நிமிஷம் அவள் அங்கே நிற்க வில்லை. விடு விடு வென்று இறங்கித் தெருவுக்கு வந்து விட்டாள். சாலைக்கு வந்து பஸ்ஸைப் பிடிக்காத வரை அவளுக்குச் சிறிதும் நிம்மதியே ஏற்படாது போயிருந்தது.

அதே வீட்டிலிருந்து இன்றும் பேசாமல் தலை குனிந்த வண்ணம் வெளியேறும்படி



மாமியார் (புதிதாகக் குடித்தனம் செய்யும் பிள்ளையின் வீட்டுக்கு வந்தவள்):—ஏண்டியம்மா, இந்தக் கடிகாரம் ஏன் போகவே மாட்டேன் என்கிறது?


மருமகள்:—ஆமாம். அது போவதில்லை. நாங்கள் அதனால்தான் அதற்கு மாமியார் என்று பெயர் வைத்திருக்கிறோம்!


விதி செய்யும் சதியை நினைக்கவே, அவளுடைய முகத்தில் கசப்பேறிய ஒரு சிரிப்பு நெளிந்தது. 'எதற்காக நான் இந்தப் புகைப் படத்தை எடுத்தேன்?' என்று இன்றும் அன்று போலவே அவளால் விஷயத்தை விளக்கிக் கூற முடியவில்லை. இருபத்து நாலு வயது நிறைந்த லதாவுக்குப் புகைப் படத்தைக் காட்டிலும், புகைப்படத்துக்குப் போடப்பட்டிருக்கும் சட்டம்தான் எவ்வளவோ விலை உயர்ந்ததாகத் தோன்றியது. 'நான் புகைப் படத்தை விரும்பவில்லை. அதன் சட்டத்தைத் தான் நான் முக்கியமாக விரும்பினேன்' என்று அவளால் சொல்ல முடியவில்லை. அப்படியே அவள் அதை எடுத்துப் போனாலும் விடுதியில் வைக்க இடம் ஏது?

அவள் கையில் அப்பொழுது காந்தா கொடுத்த கேசவனின் புகைப் படம் இருந்தது. லதா ஒரு முறை அந்தப் புகைப்படத்தைப் பார்த்தாள். பிறகு அதைத் துண்டு துண்டாகக் கிழித்துச் சாலையின் ஓரத்தில் ஓடிக் கொண்டிருந்த சாக்கடையில் விட்டெறிந்தாள். அவளுடைய பார்வையில் அந்தப் புகைப்படத்தின் மதிப்பு அவ்வளவு தான் என்பதைப் பிறர் புரிந்து கொள்ள வில்லை. அதைப் பற்றி அவள் சிறிதாவது கவலைப்பட்டால் தானே?

உத்தியோக விஷயத்தை மறந்து சிந்தனையே உருவாக வேதனை வாட்டிய முகத்துடன் லதா அச் சாலையின் வழியே அகதிகள் விடுதியை நோக்கி நடந்தாள். அவளுடைய உள்ளத்தின் தடுமாற்றத்தைக் கால்கள் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. ஆயினும் வாழ்க்கையின் நீண்ட பாதையிலே இன்னும் அவள் எவ்வளவோ தூரம் முன்னேறிச் செல்ல வேண்டியவள் அல்லவா? எனவேதான், அவள் மனத்தின் வேதனையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் விடுதியை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். (முற்றிற்று)

பார்த்தாலே சொல்லலாம் அந்தப் பாதரக்ஷைக்கு போட்டிருக்கும் பாலிஷ் கீவீ என்று








நல்ல பாதரக்ஷைகளுக்கு நல்ல பாலிஷ் வேண்டும். அதனால் தான் எல்லோரும் கிவி பாலிஷைப் பொறுக்கி எடுக்கிறார்கள். இன்றே கிவி உபயோகிக்கத் தொடங்குங்கள் உங்களுக்கு அப்போது வித்தியாசம் தெரியும். அது பாதரக்ஷைகளை மிருதுவாகவும், தண்ணீர் தங்கவொட்டாமலும் பாதுகாத்து தோலுக்கு ஓர் இன்ப ஒளியைத் தருகிறது. இன்றே கிவி பாலிஷ் வாங்குங்கள் — பிளாக், டார்க் டான், மற்றும் ஏழு நிறங்களில் கிடைக்கும்.

கவர்ச்சித்தோற்றத்தை விரும்புவோர் பளபளப்பான பாதரக்ஷைகளை அணிகிறார்கள்.



# ஆஸ்த்மா சளி ஒரே நாளில் கரைந்துவிடும்

ஒரு பிரபல டாக்டரால் மெண்டாகோ (Mendaco) கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, ஆஸ்த்மாவினால் யாரும் அவதிப்படத் தேவையில்லை. இன்ஜெக்ஷன்களோ புகைகளோ இனிமேல் அனாவசியம். ருசியற்ற இரண்டு மெண்டாகோ (Mendaco) வில்லைகளை உணவுடன் உட்கொண்டால் போதும். பத்தே நிமிஷங்களில் அது ரத்தத்துடன் கலந்து சீக்கிரத்தில் சளியைக் கரைத்து விடுகிறது. சுவாசம் லகுவாகி, நரம்புகளும் ஓய்வு பெற்று நல்ல சுத்தமான காற்று சுவாச கோசத்திற்குச் சென்று தேக திடமும் திரும்புகிறது.

## குழந்தை போன்று சுகமாக உறங்குக

மெண்டாகோ (Mendaco) இயற்கை முறையில் வேலை செய்து, (1) மூச்சுத் திணறச் செய்யும் சளி அல்லது கோழையை கரைத்து அகற்றுகிறது. (2) சுவாசக் குழாய்களினுள்ளில் இருக்கும் ஆயிரக் கணக்கான தசை நார்களுக்கு ஓய்வளித்து சுவாசத்தை லகுவாக்குகிறது. (3) தேக திடத்தையும் விருத்தி செய்து சுத்தமான, புஷ்டியான ரத்தம் ஊறச் செய்கிறது.

## ஐந்து வருடங்களாக ஆஸ்த்மாவே இல்லை

ஸ்ரீ ஜெ. ஆர். எழுதுவது: "ஆஸ்த்மா என்னைக் கொல்லாமல் கொன்றது. மெண்டாகோ (Mendaco) உட்கொண்ட முதல் இரவிலேயே நற்பயன் கிடைத்தது. பின்னர் நோய் திரும்பவேயில்லை."

மிஸஸ். ஏ. டபிள்யூ. எழுதுவது: "நான் 25 வருடங்களாக ஆஸ்த்மாவினால் வருந்தினேன். மெண்டாகோ (Mendaco) உபயோகித்த பிறகு இரவெல்லாம் நல்ல தூக்கம் கிடைக்கிறது."

மிஸஸ். ஜீ. இ. ஸி. எழுதுவது: "ஆஸ்த்மாவினால் இரவு தூக்கமின்றி வருந்துபவர்களுக்கு மெண்டாகோ (Mendaco) ஒரு வரப்பிரசாதமே."

## உடனே நற்பயன்

மெண்டாகோவினால் பயனில்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பி உங்கள் பணம் பூராவையும் வாபஸ் பெறுக. உங்கள் கெமிஸ்டிடமிருந்து இன்றே மெண்டாகோ (Mendaco) வாங்கிப் பரீட்சியுங்கள். உத்தரவாதம் உங்களுக்கான பாதுகாப்பு.


**Mendaco**
மெண்டாகோ

★ ஆஸ்த்மா ★ பிரோங்கைட்டிஸ் ★ குளிர் ஜுரம் இவைகளை ஒழிக்கிறது

# முடிசூட்டுத் திருவிழா

ஜெயமணி

பிரிட்டனிலே சென்ற வருஷம் பிப்ரவரி மாதம் திடீரென்று ஒருநாள் பிரபல கம்பெனி ஒன்று, பதினைந்து ஆண்டுகளாகத் தான் பூட்டி வைத்திருந்த அசல் தங்க 'பார்டர்' போட்ட விலையுயர்ந்த வெல்வெட் அங்கிகளை அவசரமாக வெளியே எடுத்தது; அதில் படிந்திருந்த தூசிகளைத்தட்டி அவற்றைப் புதுப்பிக்கத் தொடங்கியது.



நவரத்னக் கிரீடம்

நாணய உற்பத்தித் தொழிற்சாலையில் புதிய உருவத்தில் நாணயங்களும் பதக்கங்களும் அச்சடிக்க ஆரம்பித்தார்கள்.

பட்டாக் கத்தி உற்பத்தியாளர்கள் கத்திகளுக்கு அழகாக மெருகு கொடுத்து, அவை பளபளவென்று மின்னும் படி செய்வதில் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

ஹோட்டல்களெல்லாம் அதிக பட்சமாக எத்தனை பேர்களுக்குச் சாத்தியமோ அவ்வளவு பேர்களுக்கு ஜாகை வசதி செய்து கொடுக்கும் விஷயத்தில் உற்சாகத்துடன் கவனம் செலுத்தலாயின.

தனி நபர்கள்கூடத் தங்கள் தங்கள் வீடுகளில் எத்தனை விருந்தினர்களுக்கு இடவசதி செய்து கொடுக்க முடியும் என்பதை ஆராய முற்பட்டார்கள்.

இவற்றைப் போல் இன்னும் பல காரியங்கள் லண்டனில் மும்முரமாக ஆரம்பமாயின.

1953 ஜூன் மாதம் இரண்டாம் தேதி பிரிட்டனில் நடக்கவிருக்கும் ஒரு வைபவத்தை ஒட்டியே அத்தகைய முன்னேற்பாடுகளை யெல்லாம் செய்யலாயினர்.

சென்ற வருஷம் காலஞ் சென்ற ஆறாம் ஜார்ஜ் மன்னருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்துள்ள இரண்டாவது எலிஸபெத் மகா ராணிக்கு அன்றுதான் முடிசூட்டு விழா நடைபெறப் போகிறது.

அந்த விழா லண்டனில் பார்லிமெண்டுக் கட்டிடங்களுக்கு அருகில் இருக்கும் வெஸ்ட்மின்ஸ்டர் கிறிஸ்துவாலயத்தில் காலை மணி நேரத்தில் முடிந்து விடும். எனினும் அதற்கான முன்னேற்பாடுகள் ஒரு வருஷத்துக்கு மேலாக நடைபெற்று வருகின்றன.

பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுள்ள ஆயிரக் கணக்கான ஆண், பெண் தொழிலாளர்களும் நிபுணர்களும் முடிசூட்டு விழா சம்பந்தமான முக்கிய அலுவல்களைச் செய்து வருகிறார்கள்.

சுமார் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயத்தில் நடக்கப் போகும் முடிசூட்டு விழாவைக் காட்டிலும் முக்கியமான, குதூகலமான, ஆடம்பரமான விழா பிரிட்டிஷ் மக்களுக்கு வேறு எதுவுமே இல்லை.

ஓரிருவரைத் தவிர மற்ற பிரிட்டிஷ் மன்னர்கள் யாவருக்கும் வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயத்தில்தான் இதுவரை முடிசூட்டு விழா நடந்திருக்கிறது.

மேற்படி விழா ஆயிரம் வருஷத்திய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.



இரண்டாம் எலிஸபெத் மகாராணி


பல நாடுகளிலும் முடியரசுகள் மறைந்து விட்டன. புதிது புதிதாகக் குடியரசுகளும் சர்வாதிகார ஆட்சி முறைகளும் ஏற்பட்டு வருகின்றன. சில நாடுகளில் எதிர்கால ஆட்சி முறை என்ன என்பதே நிர்ணயமில்லாமல் இருந்து வருகிறது. இங்கிலேயில் சென்ற ஆயிரம் ஆண்டுகளாகப் பிரிட்டனில் முடியரசு யாதொரு இடையூறுமின்றி நடந்து வருவது ஆச்சரியம் அல்லவா? ஆயிரம் ஆண்டுகளுக்கு, முன் நடந்த முடிசூட்டு விழா சம்பந்தமான புராதன வைபவங்கள் இன்றும் அப்படியே அனுஷ்டிக்கப் படுவது விந்தையிலும் விந்தை அல்லவா?

எலிஸபெத் மகாராணியின் முடி சூட்டு விழாவை ஒட்டிப் பத்து கோடிப் பவுன் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

அதன் சம்பந்தமாக ] முடிசூட்டு விழா நிர்வாக அதிகாரி சுமார் எண்ணாயிரம் பேர்களுக்கு அழைப்பு அனுப்புவார். அவர்களைத் தவிர, பார்லிமெண்டு அங்கத்தினர்கள், லார்டு சபை அங்கத்தினர்கள், அவர்களுடைய மனைவிமார், பிரபுக்கள், சீமாட்டிகள், பாதிரி மார்கள், உயர்தர அதிகாரிகள் முதலிய ஆயிரக் கணக்கான பிரமுகர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படும்.

ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பிரபுக்களும் தொன்று தொட்டு வழக்கத்திலிருந்து வரும் விசேஷ உடைகளை அணிந்து கொண்டு விழாவுக்கு வர வேண்டும்.

அவரவர்கள் தங்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தவாறு ஐம்பது பவுனிலிருந்து ஐந்நூறு பவுன் வரையில் செலவு செய்து உடைகளைத் தயார் செய்து கொள்ள வேண்டியிருக்கும்.



நீதி. நேர்மை. கருணையின் சின்னமான பட்டாக் கத்திகள்.

சொத்து எல்லாம் கரைந்து பெயரளவில் பிரபுக்களாக விளங்குவோர் கூட, முடிசூட்டு விழாவுக்கென்று தாங்கள் உடுத்திக் கொள்ள வேண்டிய பிரத்தியேக உடைகளைக் கம்பெனியிலிருந்து வாடகைக்கு வாங்கிக் கொள்வார்கள்.

ஒவ்வொருவரும் அவரவருடைய அந்தஸ்துக்குத் தகுந்தவாறு குறிப்பிட்ட உடை உடுத்திக் கொள்ளாவிடில் அவர்களுக்கு விழாவில் பிரத்தியேக இடம் அளிக்கப்பட மாட்டாது.

எலிஸபெத் மகாராணியின் உடைகள்கூட இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சம்பிரதாயம் உண்டு. முடிசூட்டு விழாவுக்கு முன் மகாராணியின் அங்கிகளை ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரும் பார்க்க அனுமதிக்கப் படமாட்டார்கள்.


மகாராணியின் அங்கி அழகிய குஞ்சலங்களுடன் எட்டு கெஜ நீளம் இருக்கும்.

மகாராணி லண்டன் மாநகரில் ஊர்வலமாகச் செல்லும் போது அந்தக் காட்சியைப் பார்க்கச் சுமார் முப்பது லட்சம் ஜனங்களுக்கு மேல் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஊர்வலம் செல்லும் பாதைகளிலே லட்சக் கணக்கான பவுன் செலவு செய்து வசதியாக உட்காருவதற்கான இடங்களை அமைத்து வருகிறார்கள்.

மேற்படி விழா சம்பந்தமான உரிமைத் தகராறுகளை, அதாவது யார் யார் எங்கு எங்கு உட்காருவது போன்ற விஷயங்களை விசாரித்து முடிவு செய்வதற்காக விசேஷ கோர்ட் நியமிக்கப்பட்டிருக்கிறது.


பிரிட்டிஷ் முடிசூட்டு விழாவைப் போல் உலகத்திலேயே வேறு எந்த



மகுடாபிஷேக நாற்காலி

வைபவத்திலும் ஏக காலத்தில் அத்தனை நவரத்னங்கள் ஜொலிப்பதைக் காண முடியாது. பிரிட்டனில் இரும்புப் பெட்டிகளில் உள்ள விலையுயர்ந்த பல அபூர்வ நகைகளும் அன்று வெளியில் வந்து விடும்!

எனினும் அந்த நகைகள் எதுவும் மகாராணியின் முடியில் சூடப்படும் மணி மகுடத்துக்கு ஈடாகாது. அந்த மகுடம் மிகுந்த பந்தோபஸ்துடன் லண்டன் டவர் என்ற கோட்டையில் வைக்கப்பட்டிருக்கிறது.



அபிஷேக எண்ணெய்ப்பாத்திரமும் ஸ்பூனும்

மகுடத்தில் உள்ள ஆயிரக் கணக்கான வைரங்கள், முத்துக்கள், மரகதங்கள், கோமேதகங்கள் முதலியவற்றை இழைப்பு வேலை நிபுணர்கள் தனித்தனியாக எடுத்து, சுத்தம் செய்து, மறுபடியும் கிரீடத்தில் அமைத்து மெருகு கொடுப்பார்கள். அவர்கள் அவ்விதம் செய்து முடிக்க மூன்று மாத காலத்துக்கு மேல் ஆகும்.

ஏழு பவுண்டு கனம் உள்ள மேற்படி கிரீடத்தை காண்டர்பரி ஆர்ச் பிஷப் எலிஸபெத் மகாராணியின் தலையில் சூட்டுவார். அது கெட்டித் தங்கத்தில் இழைக்கப்பட்டிருப்பதால்தான், அது அவ்வளவு கனமாக இருக்கிறது. எனவே மகாராணி அதைச் சில நிமிஷ நேரம்தான் தலையில் சூட்டிக் கொண்டிருக்க முடியும்.

அதைப் போலவே ஏராளமான நவரத்னங்களால் இழைக்கப்பட்ட மற்றொரு கிரீடமான ராஜாங்க கிரீடமே மகாராணியின் முடியில் எப்போதும் காட்சி அளிக்கும். மேற்படி கிரீடத்தில் இரண்டு அங்குல நீளம் உள்ள ஒரு மாணிக்கக் கல்லின் விலை மாத்திரம் லட்சம் பவுனுக்கு மேலாகும்.

* * *


முடி சூட்டு விழாவை ஒட்டி வெஸ்ட் மின்ஸ்டர் ஆலயத்தில் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளுக்காகச் சுமார் மூன்று லட்சம் பவுன் செலவு செய்வார்கள் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

இதைத் தவிர, சிம்மாசனத்தை அமைப்பதற்காக ஒரு பிரம்மாண்டமான மேடையை நிர்மாணிப்பார்கள்.


1937-ம் வருஷம் நடந்த ஆறாம் ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேக வைபவத்தின் போது, ஊர்வலம் சென்ற பாதைகளில் இருபத்தேழு மைல் தூரத்துக்கு ஜனங்கள் நிற்பதற்கு வசதிகளைச் செய்வதற்காக சர்க்கார் பத்து லட்சம் பவுன் செலவழித்தார்களாம். இந்தத் தடவை மேற்படி செலவு இன்னும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விஷயமாகத் தனி நபர்களும் கம்பெனிகளும் அதைப் போல் இன்னும் பன்மடங்கு அதிகத் தொகை செலவு செய்வார்கள்.

ஊர்வலம் செல்லும் பாதையிலே பல இடங்களில் வளைவுகள் அமைத்து, அவற்

ஆகாயத்திலிருந்து பக்கிங்ஹாம் அரண்மனையின் அபூர்வத் தோற்றம்



# அபூர்வ யோசனை!




றின் மேல் முப்பது அடி உயரத்துக்குக் கிரீடங்களை வைத்து அலங்கரிப்பார்கள். இரவு காலங்களில் வர்ண ஜால விளக்குகளுடன் அக் கிரீடங்கள் பிரகாசிப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வீட்டு மாடிகளில் நின்று ஊர்வலத்தைக் கண்டு களிக்க விரும்புவோர் ஒவ்வொருவரும் எழுபத்தைந்து பவுன் கட்டணம் செலுத் தும்படி நேரும் என்றால், ஊர்வல வைபவம் எவ்வளவு பிரமாதமாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

* * *

முடிசூட்டு விழாவின்போது லண்டன் லார்டு மேயரைப் போல் உயர்ந்த பதவிகளை வகிப்போர் ஒவ்வொருவரும் என்னென்ன சாதனத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற சம்பிரதாயம் உண்டு.

உதாரணமாக லார்டு மேயர் பளிங்கினு லான அதிகார முத்திரைக் கோலை (Crystal Mace) தாங்கிச் செல்லுவார். லார்டு டட்ஹோப் ஸ்காட்லந்து சின்னத்தைத் தாங் கிச் செல்லுவார்.

ஸ்கார்பரோ பிரபு மகாராணியின் பட்டாக் கத்தியை எடுத்துச் செல்லுவார்.

இங்கிலாந்தில் மூன்றும் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழா நடந்தபோது பட்டாக் கத்தி சம்பந்தமாக ஒரு விநோத சம்பவம் நிகழ்ந்தது.

குறிப்பிட்ட பிரபு தாம் எடுத்துச் செல்ல வேண்டிய மன்னரின் பட்டாக் கத்தியை மறந்து விட்டார். உடனே லார்டு மேயரின் உடை வாளைக் கடனாக வாங்கி விக்னமின்றி வைபவத்தை நடத்திச் சென்றனர்.

பிறகு அவ்விஷயமாக இளைஞரான மூன்றும் ஜார்ஜ் மன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரி யைக் கடிந்து கொண்டபோது, அந்த அதி காரி கூறிய பதில் மன்னரைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது.

"என்னை மன்னிக்கக் கோருகிறேன். அடுத்த முடிசூட்டு விழா நடைபெறும் போது இத்தகைய தவறு ஏற்படாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவர் மன்னருக்குப் பதில் அளித்தாராம்!

மேற்படி மன்னர் ஜீவ தசையுடன் இருக் கும் வரையில் அடுத்த பட்டாபிஷேகத்துக்கு இடம் இல்லை என்ற உண்மையை அவர் யோசித்துப் பார்க்கவில்லை!

எனவே, அத்தகைய தவறு எதுவும் நேரா மல் இருப்பதற்காக, அதில் சம்பந்தப்பட்ட பலரும் தாங்கள் தாங்கள் செய்ய வேண்டிய அலுவல்களைத் தினசரி ஒத்திகை செய்து பார்த்து வருகிறார்களாம்.

எலிஸபெத் மகாராணி கூட, தாம் அன்று எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விவரங்களை ஒத்திகை செய்து பார்த்து வருகிறாராம்!

**தி பாவுஸேரி**
**பெனிபிட் சிட் பண்டு லிட்.**
(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 · மதராஸ்-5
தந்தி: 'EVERMENS'.... போன்: 85834



| வகுப்பு | மாதச்சந்தா | சீட்டின் மதிப்பு |
|---|---|---|
| B | ரூ. 100/- | ரூ. 2500/- |
| C | ரூ. 50/- | ரூ. 1250/- |
| D | ரூ. 25/- | ரூ. 625/- |
| E | ரூ. 20/- | ரூ. 500/- |
| F | ரூ. 15/- | ரூ. 375/- |
| G | ரூ. 10/- | ரூ. 250/- |

25 மாதங்கள்—25 மெம்பர்கள்

வாழ்க்கையில் வதைக்கும் முட்டுகளைக் களைந்தெறிய நம் முன்னோர்கள் நமக்கு காட்டிச் சென்ற வழி — சீட்டு முறையே.

இருண்ட எதிர்கால சூழ்நிலை எதிர்த்து நிற்கையில் எண்ணிறந்த மக்களுக்கு உவகையூட்டி இன்பம் தந்து வரும்

## எங்கள் மாதாந்திர சீட்டு வகைகள்


எழில்மிகும் ஏப்ரல் மாத சீட்டு வரிசை

| சேரக் கடைசி தேதி | 3-வது வெள்ளி | முதல் ஏலத் தேதி |
|---|---|---|
| 15—4—53 | ஏலங்கள் | 17—4—53 |

ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக்கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகைகளை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும். சீராகச் சேமிப்பதற்கு உங்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்.

ஆபீஸ் நேரம்: காலை: 9-12 மணி. மாலை: 2-5 மணி.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்




கேசவர்த்தினி அணா 14. ஷாம்பூ அணா 14. தபால் செலவு வேறு: எங்கும் கிடைக்கும்
தென் இந்திய ரஸாயனசாலை, கோயமுத்தூர்



தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும்
நுரையினால்!
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவறாமல் ஸ்நானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
LIFEBUOY
SOAP
லைப்பாய் சோப்
L. 228-50 TM




## 24. கையை எடுக்க முடியாது!

மேல் நாட்டார் பொதுவாகச் சிருஷ்டிக் கலைக்கு, கண் கூடாகக் காணும் பொருளே வாய்த்த பொருள் என்று சொல்லிக் கொள்ளுவார்கள். திமிங் கலம், அணு குண்டு, யுத்தம் எல்லாம் வாய்த்த பொருள்கள் தான் கவிக்கு என்று கருதுவார்கள்.

இதற்கு மாறான அபிப்பிராயம் சொல்லுபவர்களும் உண்டு.

நம்மவர்கள் காட்சிப் பொருள்கள் போதாது. மயக்கம், வெறி இவைகள் தான் கவிக்குச் சரியான பொருள்கள் என்று கண்டு கொண்டார்கள். நம்முடைய சாதாரண அறிவை விட்டு எவ்வளவு எட்டிப் போகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு வாய்ப்பான பொருள் என்றும் கண்டார்கள்.

பக்தர்கள் வெறி வாய்ப்பானது. காதலரது வெறி வாய்ப்பானது. எல்லாவற்றையும் விடக் குழந்தைகளின் பைத்தியம் ரொம்ப வாய்ப்பானது என்று கண்டார்கள்.

கண்டவர்கள் முன்னோர்கள்தான்.

என்னத்தினால் காண முடிந்தது; நாடக இயலில் அவர்கள் நினைத்து நின்றார்கள் - அதனாலேயே காண முடிந்தது.

தற்போது நாடக இயல் குறைந்து போய் விட்டது. உண்மைக் கவியைக் காண்பதோ அனுபவிப்பதோ கஷ்டமாய்ப் போய் விட்டது. பூர்வமான நாடகபாணி கொண்ட கவி ஒன்றைப் பார்க்கலாம்.

* * *

ஒரு பெண் குழந்தை. அதோடு செவிலியர்கள் சதா கதை பேசிக் கொண்டும் விளையாடிக் கொண்டும் இருப்பார்கள். எல்லோருக்கும் அது வெகு வேடிக்கையாக இருக்கும். ரொம்ப ரொம்ப அனுபவிப்பார்கள்.

பெண்ணும் அந்த வேடிக்கைகளை அனுபவிக்கும்; ஒரு மாதிரியாகக் கலந்தும் கொள்ளும் அவைகளோடு.

'' பாண்டியனைத் தான் நம்முடைய பெண்ணுக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டும்'' என்று ஒரு செவிலித் தாய் சொல்லுவாள். அடுத்த செவிலித் தாய், '' ஆம், பாண்டியன் தான் சரியான மாப்பிள்ளை '' என்று சொல்லுவாள்.

'' அப்படியானால் அவனை நான் போய்க்கூட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று மூன்றாவது செவிலி அடுத்த கட்டுக்குப் போவாள். சிறிது நேரம் கழித்து வருவாள்.

'' நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்; வர மாட்டேன் என்று சாதிக்கிறான், பாண்டியன்!'' என்று நாடகத்தை முடிப்பாள்.

இப்படி நாடகம் தினம் தினம்தான்.

இடை இடையே சில நன்னாட்களில் பாண்டியன் யானை மேல் ஏறிப் பவனி போவதும் உண்டு. மேளதாள முழக்கத்தோடு சேனைகள் அணி வகுத்து, இரு பக்கமும் செல்ல, யானைமேல் பவனி.

இந்த அலங்கார பவனியைச் செவிலியர்கள் பார்த்து அனுபவிப்பார்கள். பெண்ணும் உடனிருந்து அனுபவிப்பாள்.

இந்த மாதிரி பவனியை அனுபவிப்பது பல தடவையுந்தான்.

* * *

ஒரு நாள் சாயங்காலம் பெண் கட்டிலில் படுத்திருக்கிறாள். இரண்டு கையினாலும் கண்களை மூடிக் கொண்டு படுத்திருக்கிறாள்.

செவிலியர்கள் பிச்சி மாலையைத் தலையில் சூடிக் கொண்டு கட்டிலைச் சுற்றி நிற்கிறார்கள். பிச்சிப் பூ மலர்ந்தது. வாசனை பெண்ணுக்குத் தெரியவருகிறது. செவிலியர்கள் பக்கத்தில் வந்து நிற்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுகிறாள் பெண். சொல்லுகிறாள் :

**தளையவிழ் பூங்கோதைத்**
**தாயரே! ஆவி**

**களையினும் கைதிறந்து**
**காட்டேன்—வளைகொடுபோம்**

**வன்கண்ணன் வான்மாறன்**
**மால்யானை தன்னொடும்வந்(து)**

**என்கண் புகுந்தான்**
**இவன்.**

கையை எடுத்தால் அப்படியே போய் விடுவானுக்கும்! அதனால்க் கையை எடுக்க மாட்டேன். தெரிகிறதா?

[தளையவிழ்: இதழ் விரியும்; பூங்கோதை: பூ சூடிய கூந்தல்; தாயரே: செவிலித் தாய்மாரே; வளை கொடு போம் வன் கண்ணன்: பாண்டியன் வந்து வளையல்களைக் கழற்றிக் கொண்டு போவது அடிக்கடி காணுகிற பகற்கனவு, அதனால் இரக்கம் அற்றவன் தானே; வான் மாறன்: வாளேந்திய பாண்டியன்; என் கண் புகுந்தான் இவன்: இதோ என் கண்ணுக்குள்ளே புகுந்து விட்டான்; அகப்பட்டுக் கொண்டான்!]

பாடலைத் தொன்மையான நாடக முறையில் வைத்து அனுபவிக்க வேண்டும். கஷ்டந்தான்; பெண் குழந்தையாக வேண்டும், பைத்தியம் கொள்ள வேண்டும். முடிகிற காரியமா இது?

# சுவரின் ஓலம்

**தே. வீராகவன்**

●

[சமீபத்தில் சென்னை, மேல் சட்டசபையில் டாக்டர் லட்சுமண சுவாமி முதலியாரவர்களும் ராஜாஜியவர்களும் சுவர்கள் படும் பாட்டைப் பற்றிப் பேசினார்கள். அதன்பேரில் சுவரும் பேசுகிறது!]

ஆறறிவு படைச்சிருக்கும் அய்யாமாருக் கெல்லாம்
ஓரறிவும் இல்லாதயான் உரைத்தல்சரி யாமோ?
ஆனாலும் சொல்லுகிறேன் ஆத்திரம்வேண் டாங்க
கோனாமலே கேட்டபின்னர் கூறுங்கதீர்ப் பதனை!
மட்டி, மடையர் முட்டாள்களை மனிசர்திட்டும் போது
'குட்டிச்சுவர்' என்று சொல்லி என்னைச் சுட்டுறாங்க!
'கழுதை கெட்டால் குட்டிச்சுவர்' என்றபழ மொழியால்
பழுதைக்கயிறு கொண்டென்னிடம் பார்க்கவருறாங்க!
'கருட்டு' 'பீடி' விளம்பரத்தைச் சுமக்கமுடிய லீங்க!
குருட்டுத் தனமாய் செய்யும்செய்கை குறையப்போவ தெங்கே?
'ஆட்டுப்போட்டி' 'அணிலுப்போட்டி' 'ஆந்தைப்போட்டி' யென்று
வோட்டுப் போட்டி பாரத்தாலே உடம்புஒடிஞ்சு போச்சு!
'பானுகாப்பி' 'நீலுடீ'யைப் பருகிப்பாரு மென்று
நாலுமூலை எழுதிமுகத்தை நாசப்படுத்த றாங்க!
'பாட்டி படம்' 'பேத்திபடம்' பார்க்கவாரு மென்று
நீட்டிஒட்டும் விளம்பரத்தை நினைக்கக் குமுறுதுங்க!
'அவருவரார்' 'இவருபோறார்' என்று 'பிட்டுநோட்டீஸ்'
சுவருமுழுதும் எழுதிமுகத்தில் சூடுபோட றாங்க!
'ஒழிக' 'அழிக' வார்த்தைகளோ உசிரை வாங்குதுங்க!
அழித்துவெள்ளை அடிச்சாலும் அதையே வரையறாங்க!
சொல்லப் போனால் என்கதைக்கு எல்லையேயில் லீங்க!
சொல்லாமலே இருந்தாலும் தொல்லைமீறு துங்க!
சட்டசபை மெம்பருங்க தயவுகொஞ்சம் செய்தா
மட்டமான நாங்களுமிவ் வுலகில் வாழலாங்க!

# வருடந்தோறும்...ஆயிரக்கணக்கான இந்தியத் தாய்மார்கள் கூறுவது: குழந்தைகளின் இருமல்களுக்கு 'ஸிரோலின்' தான் சிறந்தது!



# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

## 54. எப்படி இருக்கு ஆசை?

சிலர் மிகவும் ஒடிசலாய்த் தடுக்கினால் விழுந்து விடுபவர்கள் போல் எலும்பும் தோலுமாய் இருப்பார்கள். இவர்களுக்கென்ன எலும்புருக்கி நோயா என்று எண்ணத் தோன்றும். ஆனால் அப்படி ஒன்றும் அவர்களுக்கு இருக்காது. பின் ஏன் இப்படிச் சதைப் பற்றே யில்லாமல் எலும்புக் கூடாய்க் காட்சி அளிக்கிறார்கள்! இது புதிராய் இருக்கும்! வேறு எந்த நோயும் இருக்காது. நன்றாய்ப் பசித்துச் சாப்பிடுவார்கள். உடல் கனக்க வேண்டுமென்று பல மருந்துகள், டானிக்குகள் கூடச் சாப்பிடுவார்கள். பல டாக்டர்கள் உடம்பில் ஒரு வியாதியும் இல்லையென்று முடிவு செய்து விட்டிருப்பார்கள். சௌகரியமுள்ளவர்கள் பாதம் அல்வாவாகவும், பிஸ்தா கேக்குகளாகவும், பழங்களாகவும், நெய், பால், வெண்ணெய் மயமாய்ச் சாப்பிடுவார்கள். அவர்கள் என்னதான் சாப்பிட்டாலும் உடம்பில் சதைப் பற்றே பிடிக்காது. ஒட்டி உலர்ந்தே இருப்பார்கள்.

இதற்குக் காரணம் என்ன! உடலிலோ ஒருவித வியாதியுமில்லை என்று டாக்டர்கள் பரிசோதனை செய்து முடிவு கூறி விட்டார்கள். பின் எதற்காக இம்மாதிரி எலும்புக் கூடாய் இருக்க வேண்டும்! இவர்கள் சாப்பிட்ட உணவினுடைய சத்தைச் சரியானபடி கிரகிக்கக் குடல்களுக்கு, குடலிருக்கும் சுவர் ஜவ்வுகளுக்குப் போதிய சக்தியில்லையென்பதே யோகிகளுடைய முடிவு. சத்தைக் கிரகிக்க மட்டும் முடிந்தால் போதாது. அதனைப் பிரித்து வைத்து வேண்டியபோது, வேண்டியதைத் தர மண்ணீரல், கல்லீரல், பித்தப் பை, பாங்கிரியாஸ் எல்லாமுமே சக்தி இழந்து தூங்குகின்றன என்றுதான் அர்த்தம்.



"என் கணவர் ரொம்ப சாது. எது சொன்னாலும் 'மூச்சு' விடமாட்டார். உலகத்தில் ஜீவித்திருப்பதற்காக மட்டும் மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறாரே தவிர, மற்றபடி......"

"என் கணவர் அவரை விடப் பரம சாது. எதற்கும் வாயைத் திறக்க மாட்டார். அசோகா பாக்குத் தூளுக்கு மட்டும் வாயைத் திறப்பார்."


அவ்வாறு சக்தியின்மையை ஒழிக்க மருந்து இல்லாமல் இருக்குமா என்று கேட்கலாம். எத்தனையோ மருந்துகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை அத்தனையும் இவர்கள் குடலைத் தட்டி எழுப்ப முடியாமையால்தான் இவர்கள் இந் நிலையில் இருக்கிறார்கள். எனவே யோகிகள்தான் இதன் ரகஸ்யமறிந்து சில பயிற்சிகளை இக் குடல்களுக்காகச் சிருஷ்டித்திருக்கின்றனர். அதுதான் உட்டியாணா, நௌலிக் கிரியாக்கள். இவைகள்தான் சக்தி இழந்த குடல்களுக்குச் சக்தியைக் கொடுக்கின்றன. இவ்வாறு மெலிந்தவர்கள் உட்டியாணா செய்வார்களானால் குடல்கள் சக்தி பெற்றுக் குடல் சவ்வுகள் சுறு சுறுப்படைந்து தன்னிடம் வரும் சத்தைக் கிரகித்து மண்ணீரலுக்கு அனுப்பும். உட்டியாணா, நௌலி எனும் தூண்டுதலால் மண்ணீரல், கல்லீரல் மற்றுமுள்ள அவயவங்களெல்லாம் சுறு சுறுப்பெய்தி அதனதன் வேலைகளைச் சரிவரச் செய்து வரும்.

அப்படியானால் உட்டியாணா, நௌலி செய்பவர்களெல்லாம் நன்றாய்க் கொழுத்துத் தடித்து விடுவார்கள் போல் இருக்கின்றதே. அப்படியானால் இந்தப் பயிற்சிகளே வேண்டாம். தடிமனாய் இருப்பதைவிட மெலிந்திருப்பதே சௌகரியம் என விதண்டாவாதம் பேசலாம்.

அப்படி ஒன்றும் அதிகமாய்த் தடித்துவிட மாட்டார்கள். உயரத்துக்கு வேண்டிய பருமன் இன்னின்ன வயதில் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்ற ஒரு திட்டம் இருக்கின்றது. அந்த அளவுக்குத்தான் ஆவார்களே தவிர, அளவுக்கு மீறி, கணக்கின்றிப் பெருத்துவிட முடியாது. அப்படிக் குடல்களும், அனுமதிக்காது. நாம் ஆசைப்பட்டுப் பாதம் அல்வாவையும், குலோப்ஜானையும் உள்ளே தள்ளினால் கூட அந்த உடலுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் குடல் கிரகிக்குமே அன்றிச் சாப்பிடும் ஆகாரத்திலுள்ள சகல சத்தையும் கிரகித்து விடாது. வேண்டியதை எடுத்துக் கொண்டு மீதியைப் பெருங்குடலுக்குத் தள்ளிவிடும். இதுதான் உட்டியாணா, நௌலி செய்பவர்களின் குடலுக்குள்ள நுட்ப சக்தி, அதி சூட்சும சக்தி. இயற்கை எவ்வாறுதான் இவ்வளவு நுட்பமான ஒரு அறிவைக் குடலுக்கு அளித்திருக்கிறது என்று எண்ணி எண்ணி வியக்கத் தோன்றும்.

இதற்கு மாறாகச் சிலருக்குச் சாப்பிடும் கொழுப்புகளும், மாச்சத்துக்களும் அப்படியே கொழுப்பு வைக்கவும், சதை வைக்கவும் சென்று விடும். இவைகள் கல்லீரலில் சேருவதோடு மட்டுமின்றி உழைப்பில்லா இடம் எங்கு என்று தேடிச் சென்று, தசைகளில் இடம் பிடித்துக் கொள்ளும். வயிறுதான் அதற்குச் சௌகரியமான இடம். பிறகுதான் புருஷ்டம், துடை முதலியவைக

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் கதர் உடுத்திக் கொள்வதற்குக் கூடப் பயந்து கொண்டிருந்த காலத்தில் கதர் உடுத்திக் கொண்டு காங்கிரஸில் சேர்ந்து வந்தேமாதர கோஷமிட்டுத் தேசப் பணியில் ஈடுபட்ட எண்ணற்ற தியாக சீலர்களில் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ தீர்த்தகிரி முதலியாரும் ஒருவர். ஸ்ரீ முதலியார் தர்மபுரி, ஹொசூர் தாலுக்கா மக்களைத் தட்டி எழுப்பித் தேச சேவையில் ஈடுபடச் செய்த தீரர்களில் முதன்மையானவர். காங்கிரஸ் நடத்திய போராட்டங்களில் எல்லாம் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்ற தியாகி. சேலம் ஜில்லாவின் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும், சேலம் ஜில்லா போர்டு அங்கத்தினராகவும், கைத்தறி நெசவாளர் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகவும் இருந்து அருந்தொண்டாற்றி வந்திருக்கிறார். பட்டம் பதவிகளுக்கு ஆசைப்படாமல் தேச நலனே சொந்த நலனாகக் கருதி வாழ்ந்து வந்தவர். தம் வாழ்நாளிலேயே தேசம் சுதந்திரம் பெற்று உலக நாடுகளுடன் சமமாக விளங்குவதைப் பார்த்துவிட்டு மார்ச் மீ ஐந்தாம் தேதி தம்முடைய எழுபத்தைந்தாவது வயதில் காலமானார். அவர் மறைவு சேலம் ஜில்லாவுக்கு ஒரு நஷ்டமாகும்.



னெல்லாம். வயிற்றுக்கு மிஞ்சிதான் மற்ற இடங்களுக்குப் போகும். எனவே உட்டியாணா, நௌலி செய்தால், வயிற்றில் கொழுப்பே சேரவிடாது. கொழுப்பிருந்தாலும், கரைந்துவிடும். பின் குடலுக்கும் புத்தி புகட்டி அவ்வுடலுக்கு வேண்டிய அளவு மட்டும் கிரகிக்கச் செய்து மீதியைத் தள்ளி விடும். எனவே, கொழுத்துத் தொந்தியும் தொப்பையுமாய் இருப்பவர்களுக்கும் நௌலி உட்டியாணா மிகச் சிறந்த மார்க்கம்.

மிகவும் கனத்தவர்கள் மிக மெல்லியவர்களாய் ஒடிசலாய் ஆக வேண்டுமானாலும் அது அசாத்தியம். சாதாரணமாய்க் கட்டுமஸ்தாய் இருக்கலாம். சதைகள் குலுங்காமல், தொப்பை தள்ளாமல், புருஷ்டம் பெருக்காமல் அநாவசிய சதைகள் இல்லாமல் இருக்கலாமே தவிர, முற்றும் கரைந்து மிக மெல்லியதாய் ஆக முடியாது. அவர்களின் பிறவி, குடும்பப் பரம்பரையாக வந்ததைச் சிறிது மாற்ற முடியும். பார்க்க விகாரமில்லாமல், அழகாய்ச் சதை இறுகி அழுத்தமாய்க் கட்டுமஸ்தாய் இருக்கலாம். இதற்கு இவ் வுட்டியாணா, நௌலியும் மற்ற ஆசனங்களும் உதவி செய்யும். ஆக மிக மெலிந்தவர்கள் நடு நிலையடையவும் மிகக் கனத்தவர்கள் நடு நிலை யடையவும் உதவும். முன் சொன்னவர்களை விடப் பின் சொன்னவர்கள் சதைப் பற்றுடன் கட்டுமஸ்தாய் இருப்பார்கள்.

சிலருக்குத் தாது பலமில்லாமையினால் எலும்பும் தோலுமாய் இருப்பார்கள். இது பிறவிப் பயனாகவும் ஏற்படுவதுண்டு. இவர்களுக்குத் தாது தன்னிச்சையில் அடங்காது. தன்னாலும், சகவாச தோஷத்தினாலும். அப்படி ஆவதுண்டு. தாதுகப் பல விதங்களில் வீணாகிக் கொண்டிருக்கும். எந்த வைத்தியமும் இவர்களுக்குச் சரியான சிகிச்சை செய்யாது. உடம்பில் ஒரு வியாதியுமில்லை என்று சொல்லி விடுவார்கள். இவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிப்பார்கள். யாரிடம் சொல்ல முடியும்! எவரிடம் முறையிட முடியும்! இருக்க இருக்க நரம்பு தளர்ந்து முகம் வெளுத்துக் கன்னம் ஒட்டிக் கண் செருகிக் கொண்டு ஒளியிழந்து சரியான பசியும் எடுக்காமல் ஜீரணமும் ஆகாமல் இளமையி லேயே முதுமைக்குரிய சகல சின்னங்களும் பெற்றுக் கோரமாக விளங்குவார்கள்.

இவர்களுக்கெல்லாம் தஞ்சம் அளிக்கின்றது உட்டியாணா நௌலியெனும் உன்னதக் கிரியைகள். இவைகளைச் செய்வதால் தாதுப் பையும், அதன் நரம்புக் கூட்டங்களும், வலுவடைந்து விர்த்தியாகின்றது. இப் பயிற்சி செய்யும்போது தாது ரத்தத்துடன் கலக்க ஏதுவாகின்றது. ஒழுகல் என்பது படிப்படியாய் நின்றுவிடும். மறுபடியும் மனிதனாய் உலகில் மற்றவர்களுடன் ஆரோக்கியமாய் வாழலாம்; உலாவலாம்.

பிரம்மச்சாரிகளுக்கு இந்தப் பயிற்சி மிக மிக அவசியமானது. அவர்களுக்கு மாதம் ஒரிருமுறை ஒழுகுவது இயற்கையே. தாதுப் பை நிறைந்து ததும்புவதே காரணம். அதை ரத்தத்துடன் கலக்கச் செய்தால் ஓஜஸாக மாறி உடல் உன்னத பல மடையும். மனிதனால் சாதிக்க முடியாத காரியம் இருப்பதாகவே தோன்றாது. ஞாபக சக்தி, அறிவு, ஞானம், ஆராயும் சக்தி யெல்லாம் அபரிமிதமாக ஏற்படும். எல்லை இல்லா ஒரு புது பலம் உடல் பூராவும் ஊடுருவிப் பரவுவதாய்த் தோன்றும். அப்பேர்ப்பட்ட சக்தியை அளிப்பது உட்டியாணா நௌலியெனும் கிரியைகளே.

இதைக்கண்டு பிடித்த ஞானிகளெல்லாம் இம் மாதிரி யோக சாதனைகளைச் செய்து, மிக அற்புதமான விஷயங்களெல்லாம்,—நாம் சாதாரணமாய் நினைப்பதைவிட, சிந்திப்பதை விட மிகப் பெரிதான, மிகச் சிக்கலான விஷயங்களை யெல்லாம்—கண்டு பிடித்திருக்கின்றனர். இம்மாதிரி கலைகளெல்லாம் அக் கால முறைப்படி குரு சிஷ்ய முறையாகவே வந்து கொண்டிருந்தன. பின் வந்தவர்கள் அவைகளை ரகஸ்யமாகவே வைத்துத் தம் சிஷ்யர்களுக்கு மட்டும் சொல்லி வந்தனர். இம்மாதிரிதான் பல அற்புதக் கலைகளெல்லாம் ரகஸியமாக மறைத்து வைத்து, மறைத்து வைத்து மடிந்தே விட்டன. ஏதோ சில சன்னியாசிகள், யோகிகள் இந்தக் கலை மற்றவர்களும் தெரிந்து கொள்ளட்டு மென்று எழுதி வைத்தார்கள். அவர்கள் அப்படி எழுதினதாலேயே அது அவர்

களைப் போலுள்ளவர்கள் செய்வது போலும் என்று மற்றவர்கள் வாளாவிருந்தனர். நம்மைப் போன்றவர்களும் செய்யலாம் என்பது நமக்குப் பகவத் கீதையே எடுத்துக் காட்டுகிறது. எனவே எல்லோரும் இந்த அற்புத சாதனைகளைக் கைக் கொண்டு தேக திடத்துடன் வாழலாம்.

ஆனால், இந்தக் காலத்திலும் இது குரு சிஷ்ய பரம்பரையாகத்தான் வர வேண்டு மென்று சொல்வாரும் உண்டு. இக் காலத்தில் எந்த குருவைத் தேடி எந்த ஆசிரமத்துக்குப் போவது! ஏதோ ஓரிரண்டு ஆசிரமங்கள் இருக்கின்றன. அவை எத்தனை பேருக்கு இடங் கொடுக்கும்! அப்படிப் போவதுதான் சாத்தியமா! நடக்கக் கூடிய காரியமா! இம் முறை அந்தக் காலத்தில் சரியானதாக இருக்கலாம். இக் காலத்தில் நடக்கக் கூடிய காரியமாக வல்லவோ பேச வேண்டும். வீணாய்த் தர்க்கிப்பதில் யாது பயன்! இக்காலத்துக் கேற்றாற்போல், பத்திரிகைகளின் மூலமும், புத்தகங்களின் மூலமும், மேடைகள் மூலமும் பிரசாரம் செய்ய வேண்டும். இதற்கெல்லாம் தாரான மனப்பான்மை வேண்டும். ரகஸ்யம் மூடு மந்திரமெல்லாம் இந்தக் காலத்துக்கு உதவாது. அவைகளெல்லாம் சுயநல வாதிகளின் போர்வையாகும்.

குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் யோகாசனங்களைப் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேல் நாட்டு விளையாட்டுகளுக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படுகிறது. இதனால் எவ்வளவு செலவுகள் ஆகின்றன என்பது சொல்லத் தேவையில்லை. நம் நாட்டு விளையாட்டுகள் நம் நாட்டுக் கலைகள் அதிலும் முக்கியமாய் யோகாசனங்களை நமது மாணவர்கள் பயில ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காகச் சட்டமும் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் நடத்துவாரின்றித் தூங்குகிறது. இனியாவது விழிப்படைந்து அதை அமுலுக்குக் கொண்டு வந்தால் நமது நாடு சீர்ப்படும். நமது மாணவர்கள் தேக திடமுடன் இருப்பார்கள். ஆரோக்கியமாய் இருப்பார்கள். பெரியவர்களான பிறரும் நோய் நொடிகளின்றிச் சுகமாய் வாழுவதற்கு அஸ்திவாரம் போட்டது போல் இருக்கும்.

(தொடரும்)

## படித்துப் பாருங்கள்!

### கோபுர வாசல்

‘அகால வேளையில், ஆலயத்து வாசலில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஒரு பெண் மணி கடவுளிடம் தன் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை வேண்டி நிற்கிறாள். தன்னை அறியாமல் அவள் கம்யூனிஸ்டின் நாஸ்திக பாவத்தைப் போக்கடித்து விடுகிறாள்' என்று ‘கோபுர வாசல்' என்ற கதையைப் பற்றி இதன் பதிப்புரையில் ரத்னச் சுருக்கமாகக் கூறப்படுகிறது!

இப்படி, மனித உள்ளத்தின் நுட்பமான மனோபாவங்களை அடிப்படையாகக் கொண்டு கதைகளைப் புனைபவர் ஆசிரியர் கி. ரா. ஆகவே, அவர் கதைகள் தனிச் சுவையுடன் மிளிர்கின்றன.

பிரசுரம்: அமுதநிலையம் லிமிடெட், தேனாம் பேட்டை சென்னை – 18. விலை: ரூ. 1.

### பாஸ்ட்

தமிழ் மொழிக்குக் கவிச் சக்ரவர்த்தி கம்பர் எப்படியோ, ஆங்கில மொழிக்கு மகாகவி ஷேக்ஸ்பியர் எப்படியோ, அப்படியே ஜெர்மானிய மொழிக்குக் கவிஞர் கதே. ஜெர்மானிய மொழியை கதே கதைகள், நவீனங்கள், கட்டுரைகள், சிறு காவ்யங்கள் எழுதி மிக செம்மைப் படுத்தியிருக்கிறார். அவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் விளங்குவது ‘பாஸ்ட்' என்ற அவருடைய காவிய நாடகம்.

டாக்டர் பாஸ்டஸ் என்பவர் அறிவாராய்ச்சி செய்தவர். கல்லூரிப் பேராசிரியர். பிரம்மசரிய வாழ்க்கை மேற்கொண்டவர். நற்குணம் படைத்தவர், தீரா அறிவுப் பசி கொண்டவர். இந்த மனிதரைத் தீய மார்க்கத்தில் அழைத்துச் செல்ல மெபிஸ்டாபிலீஸ் என்ற பிசாசுகளின் தலைவன் வந்து சேர்கிறான். இவனிடம் அகப்பட்ட பாஸ்ட் எப்படி உய்யும் மார்க்கத்தைக் கண்டார் என்பது தான் கதையின் அடிப்படை. இந்தக் கதையை கதே தீட்டியிருக்கிற முறையிலேயே அத்தியாயம் அத்தியாயமாகப் பிரித்து, தெளிந்த தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய நாட்டில் புகழ்பெற்று விளங்கிவரும் இக்காவியம் இப்பொழுதுதான் முதல் முறையாகத் தமிழில் வருகிறது. பன்னிரண்டு ஆண்டுகள் இக் காவியத்தில் மூழ்கித் திளைத்த திரு பி. தூயசாமி எம். ஏ. அவர்கள், தமிழில் மொழி பெயர்த்து, தமிழ் மொழிக்கு ஒரு நல்ல தொண்டு செய்திருக்கிறார் என்று கூறவேண்டும்.

பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை – 18. விலை: ரூ. 1–4–0.

### ஸங்கீத ரத்நாகரம்

நாட்டியக் கலைக்கு ஸ்ரீ பரத முனிவர் சாஸ்திரம் வகுத்தார். அவ்வாறே புராதனமான சங்கீதக் கலைக்கு எத்தனையோ பேர் சாஸ்திரங்கள் எழுதியுள்ளனர். அவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஸ்ரீ சார்ங்கதேவர் செய்த ஸங்கீத ரத்நாகரம். வட மொழியிலிருக்கும் இப்புராதன நூலை, தமிழில் மொழி பெயர்த்து இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள். சங்கீத சாஸ்திரத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கும், பெற விரும்புகிறவர்களுக்கும் பெரிதும் இந்நூல் பயனுள்ளது.

மொழி பெயர்த்தவர்: பண்டித வே. ராமசந்திர சர்மா. பிரசுரம்: கலாக்ஷேத்ரம், அடையாறு, சென்னை. விலை: ரூ. 4–8–0.

### தொழில் மன்னர்

கோவை ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களின் இணையற்ற தொழில் திறமையும், சிறந்த ஆராய்ச்சி அறிவும், உலகம் சுற்றி வந்த அனுபவ ஞானமும், தொழில் ஆராய்ச்சி விஞ்ஞானத் துறையில் அவர் கொண்டுள்ள தாகம் காரணமாக எத்தனை சிரமங்களை மேற்கொள்ள வேண்டி வந்தது என்பனவெல்லாம் இந்நூலில் மிகவும் நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது.

விடுதலை யடைந்த நம் சுதந்திர நாட்டுக்கு இத்தகைய தொழில் மன்னர் மிக மிக இன்றியமையாதவர் என்பது அவருடைய தொழில் சாதனைகளிலிருந்து நன்கு புலனாகிறது.

ஆக்கியோன்: திருலோக சீதாராம்; பிரசுரம்: இந்தியன் பப்ளிஷர்ஸ், திருச்சி; விலை. ரூ. 1-4-0.

# தந்தையின் ஏக்கம்

சரோஜா சீனிவாசன்

சமையலறையில் அவசரம் அவசரமாகக் குழந்தைகளுக்குச் சாதம் பரிமாறிக் கொண்டிருந்தான் சமையல்காரன் வேணு. ஒரு சுற்று எல்லாக் குழந்தைகளுக்கும் பரிமாறிவிட்டு வருவதற்குள் எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து காச்சு மூச்சென்று கத்தி ரீத்துளி செய்து வேணுவைத் திக்கு முக்காடித் திணற அடித்து விட்டன.

"மாமா! எனக்குச் சீக்கிரம் முதல்லே சாதம் போடுங்கோ. நேற்று பள்ளிக்கூடம் உங்களால் நாழியாகிவிட்டது" என்று உச்சஸ்தாயியில் கத்தினான் ஐந்தாவது வகுப்பில் படிக்கும் பாலு.

"இல்லே, மாமா! பாலு பொய் சொல்றான். அதை நம்பாதீங்கோ. நேற்று ரொம்ப சீக்கிரமாய் நாங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டோம்......" என்று பாலுவுக்கு விரோதமாகச் சாட்சி கூறினாள் அவன் சகோதரி சீதா.

"நீதான் பொய் சொல்றாய். என்றைக்கும் உனக்கு அவனைக் கண்டால் ஆகாது" என்று பாலுவுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசினான் ராமு.

"மாமா! இன்றைக்குச் சாம்பார் பலே ஜோர்! எனக்கு இன்னும் கொஞ்சம் ஊத்துங்கோ" என்று ஒரு மூலையிலிருந்து தொண்டை கிழியக் கத்தினான் ராஜு.

"சரியான சாப்பாட்டு ராமன்டா இவன்" என்று ராஜுவை வம்புக்கிழுத்தான் எல்லாருக்கும் மூத்தவனான வாசு.

"வாசுவுக்கு மாத்திரம் நிறையக் கொட்டு போட்டிருக்கு. எனக்கும் இன்னும் கொஞ்சம் போடுங்கோ" என்று வாசுவின் இலையைக் கண்காணித்த பத்மா போட்டிக்காகக் கேட்டாள்.

இத்தனை அமர்க்களத்தையும் சுவாரஸ்யத்துடன் ரசித்தபடியே எல்லாக் குழந்தைகளுக்கும் பரிமாறிக் கொண்டிருந்தான் வேணு.

"ஐயோ, மிளகாயைக் கடிச்சுட்டேனே! மாமா! தண்ணி கொடுங்கோ" என்று கண்களிலே கண்ணீர் பொங்கக் கத்தினான் பாலு.

"உனக்கு வேணும், நல்லா வேணும் உனக்கு" என்று கொம்மாளமிட்டாள் சீதா.

"என்னடா சாப்பிடுகிற இடத்திலே அமர்க்களம்! வேணுவை ஆட்டிவைக்கிறீர்களே! இப்போ எல்லாரும் வாயை மூடிக் கொண்டு கப்சிப்னு சாப்பிட்டுவிட்டு எழுந்து போகிறீர்களா, இல்லே உங்கள் அப்பாவைக் கூப்பிட்டு ஆளுக்கு நாலு உதை கொடுக்கச் சொல்லட்டுமா?" என்று அதட்டியபடியே சமையலறையில் பிரவேசித்தாள் ஸ்ரீமதி கௌரி அம்மாள். மறு நிமிஷம் சமையலறையில் கப்சிப்பென்று நிசப்தம் நிலவியது.

"ஆமாம், வாயை மூடிக்கொண்டு எப்படி சாப்பிடுவதாம்! நீங்கள் சாப்பிட்டுக் காண்பியுங்களேன், பார்க்கலாம்" என்று மெதுவாக முணுமுணுத்தான் வாசு. அது எப்படியோ வேணு உட்பட எல்லாருடைய காதிலும் விழுந்து விட்டது. மறுகணம் எல்லாருமாகச் சேர்ந்து 'ஹோ' வென்று பலமாகச் சிரித்து விட்டனர்.

"என்ன அங்கே அமர்க்களம்! மணி பத்தடிக்கப் போகிறது, இன்னும் சாப்பாட்டுக் கடையே முடியவில்லையா! நாழியாகிறது" என்று கேட்டபடியே மேல் மாடியிலிருந்து சாவதானமாகக் கீழே இறங்கிவந்தார் வக்கீல் வராகசாமி.

அப்பாவின் குரலைக் கேட்ட குழந்தைகள் பயத்துடன் அவசரம் அவசரமாகச் சாப்பாட்டை அள்ளிப் போட்டுக்கொண்டனர். அடுத்த ஐந்தாவது நிமிஷம் சமையலறையைக் காலி செய்து விட்டு குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடத்துக்கு கம்பி நீட்டி விட்டனர். வராகசாமி குளிப்பதற்காகக் கொல்லைப்புறம் சென்று விட்டார்.

* * *

பிரபல வக்கீல் வராகசாமியைத் தெரியாதவர்களே யாரும் இருக்க முடியாது. அந்த வட்டாரத்திலேயே அவர் பெயர் வெகு பிரசித்தம். வக்கீல் தொழிலில் நல்ல பெயருடன் ஏராளமாகச் சம்பாதித்துக் குவித்திருந்தார். அவருடைய பிரிய சகதர்மிணிதான் ஸ்ரீமதி கௌரியம்மாள். பார்ப்பதற்கு மகாலக்ஷ்மி மாதிரி சிரித்த முகத்துடன் இருப்பாள். தங்கமான குணம், வெள்ளை மனசு. வக்கீல் வராகசாமிக்கு ஏழெட்டுக் குழந்தைகள். வீட்டில் சதா காலமும் குழந்தைகளின் சத்தமும், விஷமமும் காதைத் துளைத்த வண்ணமிருக்கும். இவைகளைக் கட்டி மேய்த்துக் காரியம் செய்யத் தன்னால் முடியாமையால்தான் கௌரி அம்மாள் வேணுவைச் சமையல்காரனாக அமர்த்தினாள். இப்பேர்ப்பட்ட குடும்பத்தில் வேணுவுக்கு இந்த வேலை கிடைத்தது, அவனுடைய அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

வக்கீல் வராகசாமி வீட்டில் வேணு சமையற்காரனாக நுழைந்து மூன்று வருஷங்களாகிவிட்டன. இந்த மூன்று வருஷ காலத்தில் அவனுக்கு அந்த வீட்டில் கிடைத்த சலுகையும் அன்பும் அவன் வேறு எந்த இடத்திலும் பெற்றதில்லை. வக்கீல் வராகசாமி முதல் அவர் கடைக்குட்டி பெண் பிரேமா வரை எல்லாரும் வேணுவிடம் அலாதி அன்பும் பிரியமும் வைத்திருந்தனர். எஜமானரிடத்திலும், கௌரியம்மாளிடத்திலும் வேணுவுக்கு அளவற்ற மரியாதையும், விசுவாசமும் உண்டு. அந்த வீட்டில் ஒரு சமையல்காரன் என்ற ஹோதாவில் வைத்தே அவனை யாரும் மதிக்கவில்லை. குடும்பத்து மனுஷரில் ஒருவனாகவே அவனைக் கருதி வந்தார்கள்.

வேணுவுக்குச் சுமார் இருபத்தெட்டு வயதிருக்கும். ஆள் வாட்ட சாட்டமாக இருப்பான். செக்கச் சிவந்த மேனி. எப்பொழுதும் சிரித்த முகம். வெள்ளை வேஷ்டியும், மல் ஜிப்பாவுமாக வேணு வெளியே கிளம்பிவிட்டால் அவனை யாரும் சமையற்காரன் என்றே சொல்ல முடியாது. வக்கீல் வீட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றுதான் எல்லாரும் எண்ணுவார்கள். அப்படி எண்ணியே அவனுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து உபசரித்தும் வந்தனர்.

வேணு பிறக்கும்போதே சமையல்காரனாகப் பிறந்துவிடவில்லை. அது அவனுடைய பரம்பரைத் தொழிலும் இல்லை. அவன் தலைச் சுழி அப்படி. காலத்தின் கோலத்தில், விதி செய்த வேகத்தில், கோபத் தன்மையில் வேணு வேறு வழி யின்றிச் சமையல்காரனாக மாறினான். அந்தத் தொழில் வக்கீல் வராகசாமி வீட்டிலே அவனுக்கு அமோகமாய் வரவேற்பளித்து ஆதரவும் காட்

டிற்று. இன்று வரை நாணய முள்ளவனாகவும், நம்பிக்கை யுள்ளவனாகவும் சுத்தமும் சுறுசுறுப்பும் உள்ளவனுமாகவே காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான் வேணு.

"ஏண்டா வேணு! உனக்கு அப்பா, அம்மா கூடப் பிறந்தவர்கள் யாருமே கிடையாதா!" என்று அடிக்கடி கேட்பாள் கௌரி அம்மாள்.

"ஏன் மாமி! நீங்கள் எல்லாம்தான் இருக்கிறீர்களே, போதாதா!" என்று மேலே வார்த்தை வளராதபடி பேச்சை முடித்து விடுவான் வேணு.

"ஏண்டா வேணு! உனக்கு எப்போ கல்யாணம்! எங்கேயாவது பெண் பார்த்து வைத்திருந்தால் சொல்லு. நானும் மாமியுமாகச்சேர்ந்து முடித்து வைக்கிறோம். நீங்கள் இரண்டு பேருமே சந்தோஷமாக நம் வீட்டிலேயே இருந்து விடலாம்" என்று வேணுவைக் கேலியாகக் கேட்பார் வக்கீல் வராகசாமி.

"எனக்கு இப்போ என்னத்துக்கு சார் கல்யாணம்!" என்று வெட்கத்துடன் சொல்லிச் சிரித்து மழுப்பி விடுவான் வேணு. இத்தனை அன்புடன் பழகும் குடும்பத்தில் வேணு ஒன்றிப் போனதில் வியப்பு ஒன்றுமில்லை யல்லவா!

* * *

வராகசாமி சாப்பாட்டை முடித்துக்கொண்டு கோர்ட்டுக்குப் போய்விட்டார். கௌரி அம்மாளும் சாப்பிட்டு விட்டு வெற்றிலையும் கையுமாக ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டாள். வேணு சமையலறைக் காரியங்களை அவசரமாகச் செய்து முடித்து விட்டு, துண்டை உதறித் தரையில் விரித்துப் போட்டுக் கையில் ஒரு வாரப் பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு கீழே படுத்தான். அரை மணி நேரம் கழிந்திருக்கும்.

"ஸார், போஸ்ட்!" என்று கூவிக் கொண்டே தபால்காரர் ஒரு கடிதத்தை வீசி யெறிந்து விட்டுச் சென்றார்.

"வேணு! ஏதோ கடுதாசு வந்திருக்கு போல இருக்கு. கொஞ்சம் போய் எடுத்துக் கொண்டு வாயேன்!" என்று ஊஞ்சலில் உட்கார்ந்தபடியே சொன்னாள் கௌரி அம்மாள். வேணு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு கடிதத்தைப் பிரித்து நிதானமாகப் படிக்க ஆரம்பித்தாள் கௌரி அம்மாள்.

சௌபாக்கியவதி, கௌரிக்கு!

அப்பா அநேக ஆசீர்வாதம். இப்பவும் எனக்கு ஒரு வாரமாய் உடம்பு சரியில்லாமல் இருக்கு. மார்வலி ஜாஸ்தியாகி மூச்சு விடவே மிகவும் சிரமப்படுகிறேன். டாக்டரிடம் காண்பித்ததில் குணம் ஒன்றும் தெரியவில்லை. மாப்பிள்ளைக்கு இதைத் தெரிவிக்கவும். உயிர் உள்ளபோதே உன்னையும் குழந்தைகளையும் பார்க்க ஆசைப்படுகிறேன். உடனே புறப்பட்டு வரவும்.

இப்படிக்கு உன் பிரியமுள்ள,

அப்பா.

கடிதத்தைப் படித்த கௌரியின் உடம்பு பட படத்தது. கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத் தோடிற்று. "ஐயோ, அப்பா! நீங்கள் ஒருத்தர்தான் எனக்கு இருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்களும் என்னை விட்டு விட்டுப் போய் விடாதீர்கள்" என்று வாய்விட்டுக் கதறி அழ ஆரம்பித்து விட்டாள் கௌரி அம்மாள்.


வேணு திடுக்கிட்டவனாய், "என்ன, மாமி! என்ன விஷயம்! யாருக்கு என்ன உடம்பு!" என்று கலக்கத்துடன் கேட்டான்.

"வேணு! அப்பாவுக்கு உடம்பு ஜாஸ்தியாயிருக்காம். உடனே புறப்பட்டு வரும்படி எழுதி இருக்கார். நீ உடனே மாமாவுக்குத் தகவல் சொல்லி அனுப்பு. எனக்கு ஒன்றுமே ஓடவில்லையே!" என்று விம்மினாள் கௌரி அம்மாள்.

"மாமி, கவலைப்படாதீர்கள்! அப்படி ஒன்றுமிருக்காது. நான் உடனே மாமாவுக்கு 'போன்' செய்கிறேன். நீங்கள் ஊருக்குப் போக வேண்டிய ஏற்பாட்டைச் சீக்கிரம் கவனியுங்கள்" என்று பரபரப்புடன் சொல்லிவிட்டு வராகசாமிக்கு 'போன்' செய்யக் கிளம்பினான் வேணு.

விஷயமறிந்த வராகசாமி உடனே கோர்ட்டிலிருந்து வந்து விட்டார். மாமனாரிடத்தில் அவ்வளவு அன்பு அவருக்கு. வேணுவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. அந்தக் குடும்பத்திலே பழகிய தோஷம் தன் சொந்தத் தகப்பனாருக்கே ஏதோ ஆபத்து வந்து விட்டதுபோல் உணர்ந்து வருத்த மடைந்தான். அவனையும் அறியாமல் அவன் உடலும் உள்ளமும் துடித்தன. அவன் நிலையைப் பார்த்துக் கௌரி அம்மாள் அவனுக்கு ஆறுதல் கூறினாள்.

வேணுவுக்கு அன்று முழுவதும் வேலை சரியாக இருந்தது. ஓடியாடிக் கௌரியம்மாளுக்கு ஒத்தாசையாக மூட்டை முடிச்சு கட்டுவதும், சமையல்





காரியத்தைக் கவனிப்பதுமாக இருந்தான். அன்று இரவு எக்ஸ்பிரஸிலேயே வராகசாமி, கௌரி அம்மாள், குழந்தைகள் எல்லாரும் திருச்சிக்குப் பயணமானார்கள்.

புறப்படும்போது வராகசாமி வேணுவிடம் சாவியைக் கொடுத்து, "வேணு! வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோ! அங்கே நிலைமையைப் பார்த்துக் கொண்டு ஒருவாரம், பத்து நாளிலே திரும்பி வந்து விடுவோம். ஜாக்கிரதை, ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். அவனிடம் அவ்வளவு நம்பிக்கை அவருக்கு. வேணுவின் கண்கள் ஓரத்தில் அவனையும் அறியாமல் இரு சொட்டுக் கண்ணீர் துளித்து நின்றது.

* * *

வராகசாமி சொல்லிவிட்டுப் போனபடி அவரால் பத்து நாட்களில் திரும்பி வர முடியவில்லை. திருச்சிக்குப் போன மறு நாள் அவர் மாமனார் மாப்பிள்ளையையும் பெண்ணையும், பேரன் பேத்திகளையும் பார்த்து விட்ட திருப்தியில் கண்ணை மூடி விட்டார். மாமனாரின் சமக் கிரியைகளையெல்லாம் வராகசாமியே செய்ய வேண்டியிருந்தது. எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டு எல்லாரும் சென்னைக்குத் திரும்ப இருபது நாட்களுக்கு மேலாகி விட்டது.

அன்றுதான் எல்லாரும் ஊரிலிருந்து திரும்பி வந்திருந்தார்கள். வீடு பழைய கல கலப்பை மீண்டும் அடைந்தது.

"மாமி! அப்பா போய்விட்டது என் மனசுக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு. என்னால் அதை மறந்து ஒரு காரியமும் செய்ய முடியவில்லை" என்று மனப்பூர்வமான துக்கத்துடன் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டான் வேணு.

"என்னமோ, அம்மா போய்ப் பத்து வருஷங்களாகிறது. அவர் ஒருத்தர்தான் அப்பா என்று இருந்து வந்தார். அவரும் போய் விட்டார். நமக்கு அதிர்ஷ்டம் அவ்வளவுதான்!" என்று தன் கண்ணீரைத் துடைத்தபடி அவனுக்குப் பதிலளித்தாள் கௌரி அம்மாள்.

அன்று சாயங்காலம் ஆறு மணியிருக்கும். கோர்ட்டிலிருந்து திரும்பி வந்த வக்கீல் வராகசாமி சோபாவின் மீது சாய்ந்து உட்கார்ந்தபடி ஏதோ கேஸ் கட்டைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவருக்குச் சற்று தூரத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள் கௌரி அம்மாள். திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவளாய் "என்ன, உங்களைத்தானே!" என்று தன் கணவரைக் கூப்பிட்டாள்.

"என்ன சமாசாரம்!" என்று தலையை நிமிர்த்தித் தம் சகதர்மிணியைக் கேட்டார் வக்கீல் வராகசாமி.


"அம்மா இருக்கும் போதே செய்யணும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அது நடக்காமல் போய்விட்டது. இப்போது அப்பாவும் போய் விட்டார். இனிமேல் என்ன! பெட்டியில் அப்பா அம்மா இரண்டு பேரும் அந்தக் காலத்தில் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ ஒன்று வைத்திருக்கிறேன். அதைப் பெரிதாகச் செய்து நம் வீட்டுக் கூடத்தில் மாட்டி வைக்கலாம்" என்று தாங்க முடியாத ஆற்றாமையுடனும் மிகுந்த ஆவலுடனும் சொன்னாள் கௌரி அம்மாள்.

"அதுக்கென்ன! பண்ணிக் கொண்டு வந்தால் போச்சு. போட்டோவை எடுத்து வை. போய்க் கொடுத்து விட்டு வருகிறேன்" என்றார் கௌரியின் ஆசைக்குக் குறுக்கே நிற்க விரும்பாத வக்கீல் வராகசாமி.

சொன்ன சொல்லே உடனே காரியத்திலும் நிறைவேற்றி விட்டார் வக்கீல்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சாயங்காலம் கௌரி அம்மாளின் பெற்றோர்களின் போட்டோ பெரிதாகத் தத்ரூபம் அவர்களை அப்படியே நேரில் பார்ப்பதுபோல் செய்து வந்து விட்டது. அதைப் பார்த்த கௌரிக்குத் தன் பெற்றோர்களையே நேரில் உயிருடன் பார்த்துவிட்ட உணர்ச்சி தோன்றியது. துக்கத்தை மறந்து ஓரளவு அவள் உள்ளத்தில் நிம்மதி பிறந்தது. போட்டோவைக் கூடத்தில் நடுவில் மாட்டிப் பயபக்தியுடன் அதில் ஒரு சரம் மல்லிகைப் பூவைச் சூட்டினாள்.

கையில் எஜமானருக்குக் காப்பியும் டிபனுமாகக் கூடத்துக்குள் நுழைந்தான் வேணு. அவனைப் பார்த்த கௌரி, "வேணு, பார்த்தாயா! அப்பாவையும் அம்மாவையும்! இவர்கள்தான் என் பெற்றோர்கள்" என்று அன்பும் ஆதரவும் கனியக் கூறினாள். வேணு ஒரு தரம் தலையை நிமிர்த்திப் போட்டோவைப் பார்த்தான். அடுத்த கணம் திகைப்பும் ஆச்சரியமும் மேலோங்க வேணு தன் கண்களை ஒருமுறை துடைத்துக் கொண்டு போட்டோவைப் பார்த்தான். மீண்டும் ஒரு முறை போட்டோவை வெறித்துப் பார்த்தான்.




"ஐயோ, அப்பா! நீங்கள் கடைசியில் போய் விட்டீர்களா!" என்று அலறிய சமையற்கார வேணுவின் குரல் அந்தக் கூடத்தையே கிடுகிடுக்கச் செய்தது.

ஏக காலத்தில் திடுக்கிட்டுப் போன கௌரியும் வராகசாமியும் அடைந்த ஆச்சரியத்துக்கு எல்லையே இல்லை. "அக்கா!" என்று போய்க் கௌரி அம்மாளின் காலில் விழுந்தான் வேணு.

"கோபுவா! என் தம்பியா!" என்று தன் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கச் சமையல்கார வேணுவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் வக்கீல் வராகசாமியின் மனைவி கௌரி அம்மாள்.

"ஆமாம், அக்கா! உன் அருமைத் தம்பி வேணு கோபாலன்தான் நான்!" என்றான் வேணு. அவன் குரலில் பதினாறு வருஷங்களின் பிரிவின் ஏக்கமும் அன்பும் ஏககாலத்தில் கலந்து ஒலித்தன.



மார்ச்சு மாதம் பதினாறாம் தேதியன்று புது டில்லி தேசியக் கலைக் கழகத்தின் காரியதரிசி ஸ்ரீ என். பி. சேஷாத்திரி அவர்களின் இல்லத்தில் மேற்படி கழகத்தார் புல்லாங்குழல் வித்வான் பல்லடம் ஸ்ரீ சஞ்சீவி ராவ் அவர்களுக்கு விருந்தளித்துக் கௌரவித்தனர். மேலேயுள்ள படத்தில் ஸ்ரீ சஞ்சீவி ராவ் அவர்களையும் கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும் காணலாம்.

---

கௌரியம்மாள் கூறினாள் :—

"கடைசி வரையில் அப்பாவுக்கு நெஞ்சில் இருந்து கொண்டே இருந்தது. அந்தக் குறை ஒன்றுதான். அவர் நெஞ்சு வெந்தே இருக்காது. சாகும்போதுகூட "கௌரி! அவன் எங்கே இருக்கானோ! நான் பிள்ளையைப் பெற்றேனே ஒழிய அவன் கையால் கொள்ளி வாங்கிக்கொண்டு போகப் பாக்கியம் பண்ணவில்லை' என்று என் கையைப் பிடித்துக் கொண்டு அழுதார். உயிர் போகிறபோது கூட 'கோபு! கோபு!' என்று தான் அவர் வாய் முணு முணுத்தது..." இதைச் சொல்லும்போதே கௌரிக்குத் துக்கத்தினால் நெஞ்சை அடைத்துக் கொண்டது. அப்பாவின் நினைவு அவள் கண்களில் கண்ணீரை வருவித்தது.

"அழாதே! இப்போ அதைப்பற்றிப் பேசி என்ன பிரயோஜனம்? கடைசி நாளில் சாகும்போது தோன்றிய இந்தப் புத்தி உங்க அப்பாவுக்கு அப்பவே தோன்றியிருக்கணும். இவ்வளவு முரட்டுத்தனமும் முன் கோபமும் மனுஷனுக்கு ஆகாது. வீட்டை விட்டு ஓடும்படி உன் தம்பி அப்படி என்ன தப்பு பண்ணிவிட்டான்!" என்று கேட்டார் வராகசாமி, தம் பக்கத்தில் இருந்த வேணுவை ஆதரவோடு பற்றிக்கொண்டு.

"எனக்குக் கோபு முகம்கூட மறந்துபோச்சு. நான் பாட்டி வீட்டிலேயே வளர்ந்து கொண்டிருந்தேன். அம்மாவுக்குச் செல்லக் குழந்தை யாச்சே என்று இவன்' அப்பா அம்மா கிட்டயே இருந்தான். அவனுக்கு எப்பவுமே படிப்பில் ஆசை கிடையாது. நாலு பையன்களோடு சுற்றிக் கொண்டு இருப்பான். அந்த வருஷம் கோபு மூன்றாவது தடவையாகப் பரீட்சை தேறாமல் போய் விட்டான். ஏற்கெனவே அப்பாவுக்கு முரட்டுக் குணம். கோபுவுக்குப் பரீட்சை தேறவில்லை என்ற சமாசாரம் தெரிந்தவுடனே ருத்திர மூர்த்தியாகி விட்டார். எத்தனை செல்லம் கொடுத்தாரோ, அத்தனைக் கண்டிப்பும் உண்டு. கோபுவை அடி அடி யென்று அடித்து, 'வீட்டை விட்டு ஓடு, நாயே!' என்று கோபத்திலே திட்டி விரட்டி விட்டார். அம்மா எத்தனையோ தடுத்தாள். அப்பாவின் கோபம் தணியவில்லை. கோபு என்றைக்குமே ரோஷக்காரன். உடனே விருப்புடன் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். அப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயது இருக்கும்; மறு நாள் காலையில் கோபுவைக் காணோம் என்று எல்லாருக்கும் தெரிந்தது. ஒருகால் பாட்டி வீட்டுக்கு வந்திருக்கானோ என்று பார்க்க ஆள் வந்தது. விஷயம் தெரிந்ததும் நான், பாட்டி, தாத்தா எல்லாரும் கிளம்பி வந்தோம். எவ்வளவோ இடங்களில் கோபுவைத் தேடினார்கள். கடைசி வரையில் அவன் அகப்படவேயில்லை. அம்மா அதே ஏக்கத்தில் இறந்து போனாள். அப்பா வைராக்கியமாய்ப் பாசத்தை உதறிக்கொண்டு இருந்தாலும் சாகும்போது கோபுவின் நினைவு அவருக்கு விடவில்லை......" என்று கூறி விட்டுக் கோபுவையும் தன் கணவரையும் ஒரு முறை பார்த்தாள்.

கோபு தன் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தான். வராகசாமி, "அதனால் என்ன இப்பொழுது குடி முழுகிவிட்டது! எங்கே இருக்கணுமோ அங்கேயேதான் இருக்கான். அத்துடன் உழவுத் தொழிலுக்குப் பிறகு உயர்ந்த தொழிலான சமையல் தொழிலிலும் நளமகாராஜனை மிஞ்சும்படி இருக்கிறான். இனிமேல் அவன்தான் இந்த வீட்டுக்கு எஜமானன். நாம் அவன் சொல்லுவதைக் கேட்க வேண்டியதுதான்" என்றார்.

சமையல்கார வேணு இப்போது 'வேணு கோபால மாமா'வாக வக்கீல் வீட்டுக் குழந்தைகளுக்கு மாறிப் போய்விட்டான்.



எல்லாவித பல்வலிகளுக்கும்

பல் வெண்மை தரும்.....

ஈறுகளுக்கு வலு தரும்

உபயோகியுங்கள்

**குரங்கு மார்க்**

**கருப்பு பல்பொடி**

(REGD)

ஸ்வாசத்திற்கு மணம் தரும்.

எங்கும் கிடைக்கும்

3 விதமான சைசுகள்

**NOGI & CO.,**

**87, CHINA BAZAAR Rd, MADRAS-1**




---


PANDYAN INSURANCE COMPANY

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் — ரூ. 95,00,000

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, நாகபுரி, சென்னை
திருவனந்தபுரம், கோயம்புத்தூர்.


---


3 வாசனைக் கலாரத்னங்கள்

**கம் கம் ஜவாஜ் * கம்பால் * கமகர்** அகர்பத்திகள்.

**டி. எல். சுகந்தாலயா,**

வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2




"நான் கீல் வாயுவினால் மிகுந்த அவஸ்தைப் பட்டேன் — அதாவது, உடம்பு பூராவும் உள்ள வலியினால் சில சமயங்களில் வேலைக்கும் போக முடியாமலிருந்தது. நண்பன் ஒருவன் "க்ருஷன்" உப்புக்களை உபயோகித்துப் பார்க்குமாறு சிபாரிசு செய்தான். நான் அவ்வாறே செய்ததில், உடம்பு வலிகள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து வந்தது. வேலைக்கும் யாதொரு தடங்கலின்றிப் போய் வருகிறேன். நான் முற்றிலும் புதிய மனிதனாய் விட்டதற்கு "க்ருஷ"னுக்கு வந்தனம்." —A. R.

விஷத்தன்மை கொண்ட கழிவு பதார்த்தங்கள் சரிவர வெளித்தள்ளப் படாமையால் குடல்களில் தேங்கி, கீல் வாயுவை உண்டாக்குகின்றன. "க்ருஷ"னிலுள்ள ஆறுவித முக்கிய உப்புக்கள் குடல்களையும் மூத்திரக் காய்களையும் சரிவர இயங்குமாறு தூண்டுவதால் இவ்விஷப் பொருள்களை சீக்கிரமாகவும் சுலபமாகவும் வெளியே தள்ளுகிறது. தினந்தோறும் ஒரு சிறு அளவு "க்ருஷன்" டீயிலோ, தண்ணீருடனோ உட்கொள்ளுவது உங்களைக் கீல் வாயுவினின்றும் விடுவிக்கும்.

**"க்ருஷன்"** உங்களை ஆரோக்யத்துடனும் சந்தோஷத்துடனும் இருக்க உதவுகிறது

KSM—1



**ம**னம் குழம்பியது; மணியோ பன்னிரண்டு அடித்து விட்டது. நள்ளிரவு. கதை எழுதவேண்டும் என்று உட்கார்ந்திருந்தேன். ஒன்றும் தோன்றவில்லை. கண்கள் மட்டும் தூக்கப் போதையில் தடுமாறின. லேசாகக் கொட்டாவி விட்டுக் கொண்டேன். மறுபடியும் கண்களைக் கசக்கிக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். எழுத முனைந்தேன். ஆனால் கற்பனை ஓடவில்லை. ஒரு வரிகூட என்னால் எழுத முடியவில்லை.

இந்தச் சமயத்தில் ஜன்னல் பக்கத்திலுள்ள செடிகளில் சல சலப்புச் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தேன்; ஒன்றும் தோன்றவில்லை. கொஞ்ச நேரம் கழித்து, ஒ்ரீச் ஒ்ரீச் சென்ற சத்தம் வந்தது. பிறகு மறைந்து விட்டது. ஏனோ என்னை அறியாமல் உடல் ஒரு குலுங்கு குலுங்கியது. உள்ளத்தில் பயம் வந்து கப்பிக் கொண்டது.

மறுபடியும் செடிகளில் சல சலப்பு; ஒ்ரீச் ஒ்ரீச் சென்ற சத்தம். யாரோ வளர்ந்து வளர்ந்து நடை போடுவது போன்ற பிரமை.

"யாரது!" என்று அதட்டினேனே ஒழிய, என் குரல் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை. ஜன்னல் பக்கமாக மெல்லத் தலையைத் திருப்பினேன். யாரோ ஒரு மனிதர் தலையை முன்னும் பின்னுமாக ஆட்டிக் கொண்டு என் அருகில் வந்தார்.

அப்பப்பா! என்ன பயங்கரமான உருவம்! முகம் முழுவதும் மீசையும் தாடியுமாகத் தாறுமாறாக வளர்ந்திருந்தன. அழுக்குப் படிந்த பரட்டைத் தலை; வால் வாலாகத் தொங்கும் சட்டையும் கிழிந்து போன வேஷ்டியும் பார்க்கச் சகிக்கவில்லை. நான் பேச்சற்று மூச்சற்று நிலை குலைந்து கலங்கி விருந்தேன். அந்த மனிதர் இன்னும் சற்று நெருங்கி வந்து என்ன எழுதுகிறேன் என்று கவனித்து விட்டுக் கட கட வென்று சிரித்தார். பிறகு சட்டென்று நிறுத்தி, "நீங்கள் கதை எழுதுகிறீர்களா!" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றேன்.

"கதைகள்......ஆமாம், கதைகள் என்றால் அவளுக்கு எவ்வளவு பிரியம்!", என்று எங்கேயோ பார்த்துக் கொண்டு வாய்க்குள்ளே பிதற்றிக் கொண்டார். திடீரென்று ஆவேசம் வந்தவர் போல் என் சட்டையைப் பிடித்து இழுத்து, "ஆமாம், உங்கள் கதைகளைப் படித்துப் படித்துத் தான் அவள் என்னை ஏமாற்றி விட்டாள். நய வஞ்சகக்காரி துரோகி!" என்று கர்ஜித்தார்.

என் உடல் வெலவெலத்து விட்டது. தொண்டைக்குள் என்னமோ ஒன்று அடைத்துக் கொண்டு பேச முடியாமல் திக்குமுக்காடச் செய்து விட்டது.

இதற்குள் அவரே தம் பிடியைத் தளர்த்திக் கொண்டு "என்ன, அவளா நயவஞ்சகக்காரி! அவளா துரோகி! சே, சே, காமினி அப்படிப் பட்டவள் இல்லையே! ஆஹா! 'காமினி' என்று ஒரு முறை கனிவுடன் அழைத்தால் உடல் இனிக்கும், உள்ளம் இனிக்கும், உள்ளத்தின் உணர்வு




இனிக்கும்!" என்று தனக்குத்தானே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருந்தார்.

இதற்குள் நான், 'யாரோ காதல் பைத்தியம் போலிருக்கிறது' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவரை ஒரு முறை கூர்ந்து பார்த்தேன்.

"என்னை ரொம்ப பேர் காதல் பைத்தியம் என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது!" என்று கேட்டார்.

எனக்குப் பகீரென்றது. அவரைப் பார்த்துத் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தேன்.

"என்ன ஐயா விழிக்கிறீர்கள்! ஆமாம்...... அவளைப் பார்த்திருக்கின்றீர்களா!" என்றார். அந்தக் கேள்வியில் இனிய ஆர்வமும், ஆதங்கமும் மிதந்து கொண்டிருந்தன.

"யாரை!" என்று கேட்டேன்.

"அவளைத்தான்! என் காமினியை, என் அருமைக் காதலியை!" என்றார்.

"இல்லை, நான் பார்த்ததில்லை!" என்றேன்.

ஆமாம். நீங்கள் பார்த்திருக்கவே முடியாது தான். நீங்கள் மட்டுமென்ன! இந்த ஊரே பார்த்திருக்காது. இந்த உலகமே பார்த்திருக்காது. நான் ஒருவன்தான் அவளைப் பார்த்தேன். அவள் ஒருத்திதான் என்னைப் பார்த்தாள்" என்று சொல்லிக் கொண்டே, தட்டுத் தடுமாறி எதிரேயுள்ள நாற்காலியில் உட்கார்ந்தார். பின்பு தலையை உயர்த்தி, தொண்டையைக் கொஞ்சம் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

—அவள் பெயர் காமினிதான்! அவள் எங்கள் கல்லூரியில் என்னுடைய வகுப்பில்தான் வாசித்துக் கொண்டிருந்தாள். ஆனால் நான் அவளையோ மற்ற எந்தப் பெண்களையோ பார்க்கவும் பேசவும் துணிவு இல்லாதவன். மிருந்த வெட்கம் நிறைந்தவன். அப்படியிருந்தும் பல முறை அவள் இனிய முகத்தைப் பார்க்க நேர்ந்திருக்கிறது.

சில சமயங்களில் தன் தோழிகளுடன் கலுக் கலுக்கென்றும், கவீர் கவீரென்றும் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது பார்த்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் பள பள வென்றிருக்கும் அவள் விழி இமைகள் சட சடவென்று அடித்துக் கொள்ளும். வெண் பற்களின் இள முறுவல் சற்றே அவிழ்ந்திருக்கும் செவ்விதழ்களில் லேசாகத் தவழும். பூ கன்னங்களில் இளம் செந்நிறம் குபீர் குபீரென்று தோன்றி மறையும். அடிக்கடி தன் நீண்ட பின்னலை ஏதாவது விஷமம் செய்து கொண்டிருக்கும் அவள் அழகிய கைகள். இந்த இனிய காட்சியை ஒரு முறை பார்த்தால் போதும். அப்படியே உள்ளத்தில் ஊன்றிவிடும்.

சில வேளைகளில் அவள் முகத்தைப் பார்த்தால் 'ஏன்டா பார்த்தோம்' என்றாகிவிடும். அவ்வளவு கொடூரமாகத் தோன்றும்.



நண்பன் (டிபன் சாப்பிட்டுகொண்டே):— என்ன அப்பா இந்த மட்டமான ஹோட்டலிலேதான் உனக்கு வேலை கிடைத்ததா? நீ எங்கேயோ ரொம்ப சௌக்கியமாக இருக்கிறாய் என்று அல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்?

சர்வர்:— ஆமாம். நான் இங்கேதான் வேலை செய்கிறேன். ஆனால் டிபன் இங்கே சாப்பிட மாட்டேன்!

கன்னங்கள் சிவந்திருக்கும், கண்கள் சிவந்திருக்கும். அவள் நெடும் பின்னல் நிறம் கொண்ட நாகப் பாம்பு போல் இப்படியும் அப்படியுமாக நெளிந்து கொண்டிருக்கும். அடிக்கொருதரம் உதட்டை பற்களால் கடித்துக் கொள்வாள். இதற்குக் காரணம், கல்லூரி மாணவர்கள்தான் என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டேன்.

அன்று விறு விறென்று எழுதிக் கொண்டிருக்கும்போது என் பேனா மக்கர் செய்து விட்டது. நிமிர்ந்து பார்த்தேன். எல்லோரும் மட மட வென்று எழுதிக் கொண்டிருந்தார்கள். எனக்கு எதிரில் காமினி உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தாள். அவளிடம் இன்னொரு பேனா இருந்ததைப் பார்த்தேன்.

"காமினி! கொஞ்சம் பேனா தருகிறீர்களா!" என்று கேட்டேன்.

அவள் என்னைத் திரும்பிக் கண்களை உருட்டி முறைத்துப் பார்த்து முகத்தை வெடுக்கென்று இழுத்துக் கொண்டாள்.

எனக்குத் திக்கென்றது; உள்ளம் ஒடுங்கி விட்டது. சரி, இனிமேல் அவளிடத்தில் உஷாராக நடந்து கொள்ள வேணும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

மறு நாள். நான் என்னத்தைச் சொல்லுவேன். என் தலைவிதியோ! அல்லது நான் விதித்த வேளையோ தெரியவில்லை! கல்லூரிக்குப் போவதற்குச் சற்று தாமதமாய் விட்டது. ஓட்டமும் நடையுமாகச் சென்றேன். நான் கல்லூரியை நெருங்கும்போது மணிஅடிக்கும் சத்தம் கேட்டது.

இன்னும் சற்று வேகமாகப் படியை நோக்கி ஓடினேன். நான் ஓடுவதற்கும் காமினி படியிலிருந்து தட தட வென்று இறங்குவதற்கும் சரியாக இருந்தது. இருவரும் பலமாக முட்டிக் கொண்டோம். புத்தகங்கள் சிதறி விட்டன.

உண்மையில் இது எதிர்பாராத விதமாக நடந்து விட்டது. ஆனால் அவளோ நான் வேண்டுமென்றே காத்திருந்து செய்ததாக நினைத்துக் கொண்டாள்.

அவள் பார்த்த அந்த பார்வை! ஐயோ என் உடலைச் சுட்டது, உள்ளத்தைச் சுட்டது, என் உயிரையே சுட்டது! நான் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தேன். அவள் தன் மூலவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு ஒரு குலுங்குக் குலுங்கி அம்பு போல் பாய்ந்தாள் பிரின்ஸிபால் அறையை நோக்கி.

அன்று முழுவதும் என் மனம் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

மாலை நெருங்கியது. எங்கள் வகுப்புக்குள் பிரின்ஸிபால் திடுதிப்பென்று உள்ளே நுழைந்தார். அப்புறம் என்ன! என்மீது அநாகரீகமாக நடந்ததாகக் குற்றம் சாட்டிக் கல்லூரியை விட்டு வெளியே அனுப்பி விட்டார்.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு தன் னாடித் தளர் நடை போட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது மற்ற மாணவர்கள் "இதோ பாருடா, மஜ்னு! பாவம்! லைலா இவரை நாடு கடத்திவிட்டாளடா!" என்று கேலி பண்ணிக் கைகொட்டிச் சிரித்தார்கள்.

அதிலிருந்து ஒரு வாரம்வரை என்னையே நான் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் நான் எப்பொழுதுமே பெண்களை உயர்வாக நினைத்து மதிப்புக் கொடுத்து வந்தேன்.

இப்படிப் பட்ட சிந்தனையுள்ளவனை நடுச் சந்தியில் நாலு பேர் அறியக் கேலிப் படுத்தியதால் உள்ளத்தில் ஆறாப் புண் ஏற்பட்டு விட்டது.



நாக்பூர் தென்னிந்திய மாதர் சங்கத்தின் நூல் நிலையத்து உதவி நிதிக்காக மேற்படி சங்கத்தின் மாதர்களே பிப்ரவரி மாதம் இருபத்திரண்டாம் தேதியன்று 'மநோஹரா' என்னும் நாடகத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். இந்த நாடகத்தில் கலந்து கொண்டு நடித்த நடிகர்களை மேலே யுள்ள படத்தில் காணலாம்.

---

சரி, இனி வேறு கல்லூரியில் சேர்ந்து படிப்பதைவிட உத்தியோகம் செய்து பணம் சம்பாதிப்பது என்று தீர்மானித்தேன். ஆனால் எங்கும் தோல்வி, தோல்வி, தோல்வியேதான்!

என்ன செய்வது, உள்ளத்திலோ உளைச்சல்; கையிலோ வறட்சி; படிப்போ அரைகுறை. இந்தப் படுமோசமான நிலைமையில், தடுக்கி விழுந்து கொண்டிருக்கும் போது என் நண்பர் ஒருவர் தம்முடைய சிநேகிதர் ஒருவருடைய விலாசத்தை என்னிடம் கொடுத்து அவரை வீட்டிலே போய்ப் பார்க்கச் சொன்னார். அவர் ஒரு பெரிய கம்பெனிக்கு மானேஜராம்; மிகவும் இளகிய மனசு உடையவராம்!

காலையில் சுமார் ஒன்பது மணிக்கு அவர் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்.

வீடு உள்ளே தாழ்ப்பாளிட்டிருந்தது.

ஒரு முறை தொண்டையைக் கனைத்துக் கொண்டு "ஸார்! ஸார்!" என்று கூப்பிட்டுக் கொண்டே மெல்லக் கதவைத் தட்டினேன்.

பதில் ஒன்றும் வரவில்லை. மறுபடியும் "ஸார்! ஸார்!" என்று குரல் கொடுத்தேன்.

"யாரது!" என்று அதட்டிக் கொண்டே வந்து ஒரு பெண்மணி கதவைத் திறந்தாள்.

அவ்வளவுதான்; அடுத்த கணம். 'நெருப்பை மிதித்தாற்போல்' நடுங்கி விட்டேன். காரணம் அவளேதான்! என்னைக் கல்லூரியை விட்டு அனுப்பிய காமினியேதான்! நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தவுடன். சட்டென்று திரும்பி வேகமாக நடையைக் கட்டினேன்.

"மிஸ்டர். ராமு! ராமு! நில்லுங்கள், நில்லுங்கள் போகாதீர்கள்!" என்று கூப்பிட்டுக் கொண்டே என்னைத் தொடர்ந்தாள் காமினி.

'என்னடா இவளை நாம் விட்டாலும் இவள் நம்மை விடமாட்டாள் போலிருக்கிறதே!' என்று பயந்து கொண்டிருக்கும்போதே அவள் என் அருகில் வந்து "ராமு! கொஞ்சம் வீட்டு வரைக்கும் வந்து போங்களேன்!" என்று கேட்டுக் கொண்டாள். இந்த அழைப்பில் என்னமோ ஒருவிதக் கனிவு இருப்பது போல் தோன்றியது.

இருவரும் அவள் வீட்டுத் தோட்டத்தில் போட்டிருக்கும் நாற்காலியில் அமர்ந்தோம்.

அவள்தான் முதலில் பேசினாள். நான் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தேன்.

"நண்பரே! அவன் என்ன சொன்னான் தெரியுமா!............" என்று கேட்டுக் கொண்டே என்னைப் பார்த்துச் சிரித்தாள்.


நான் ஆர்வமாகக் கேட்கிறேன் என்பதைக் கண்களாலேயே தெரியப்படுத்திக் கொண்டேன்.

கல்லூரியிலேயே நான்தான் நல்ல மாணவன் என்று அவன் நினைத்திருந்தானாம்.

அவசரத்தில் ஏதோ ஆத்திரத்தில் பிரின்ஸிபாலிடம் போய்ச் சொல்லி விட்டாளாம். அதற்கு இப்படிக் கல்லூரியை விட்டே பிரின்ஸிபால் அனுப்பிவிடுவார் என்று அவள் நினைக்கவில்லையாம். அவள் சொன்னாள்.

அவள் சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தேன்.

என் மௌனத்தைக் கலைக்க அவளே மீண்டும் என்னைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.




ஒருவர் (ஒரு பங்களாவில் புகுந்து வேலைக்காரப் பையனைப் பார்த்து):— உன் எஜமானர் எங்கே யிருக்கிறார்?

வேலைக்காரப் பையன்:—நேரே போங்கள். 'உள்ளே வரக்கூடாது' என்ற போர்டு தொங்கும். அதைத் தாண்டிப் போனால். "போலீஸார் வசம் ஒப்புவிக்கப் படும்" என்று போட்டிருக்கும். அதையும் தாண்டிப் போனால். "பேசாதே!" என்று போட்டிருக்கும். அங்கே நின்று கொண்டு இரைந்து கூப்பிட்டீர்களானால், எஜமான் வந்து விடுவார்.

"ராமு! என்னை மன்னிக்க மாட்டீர்களா!" என்றாள். அவள் விழிகளிலிருந்து இரண்டொரு நீர்த்துளிகள் உருண்டு விழுந்தன.

நான் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான், நண்பரே! அதிலிருந்து இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கத் தொடங்கினோம்.

இப்பொழுதெல்லாம் இருவரும் தினம் தினம் சந்திக்கத் தவறுவதே இல்லை. சந்தித்ததும் சீக்கிரமும் பிரிவதில்லை. அப்படி அவ்வளவு அந்நியோன்னியமாகப் பேசுவதற்கும், சிரிப்பதற்கும் எவ்வளவோ விஷயங்கள் எங்கள் இதயக் கடலில் அலை அலையாக அலைந்து கொண்டிருந்தன.

அவள் என்னென்னவோ பல விஷயங்களைப் பற்றிப் பேசுவாள். எனக்கு ஒன்றும் புரியாது. ஆனால் அவள் குரல் ஒலி மட்டும் என் காதுகளில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

காதல் தேங்கும் விழிகள்: அழகு குழையும் கன்னங்கள்; கருமை செறியும் கண்கள்; விசாலமான நெற்றி! இவைகளையே என் கண்கள் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும். நானும் ஏதோ ஒப்புக்கு அவளுடன் பேசிக் கொண்டிருப்பேன்.

நான் காரியாலயத்துக்குப் போகும்போது அவள் வீட்டுப் பக்கமாகத்தான் போவேன். ஒரு சமயம் காமினி திண்ணையில் நின்றுகொண்டிருப்பாள்; மற்றொரு சமயத்தில் மாடியில் மலர் நகையோடு மலர்ந்திருப்பாள். இப்படி எங்கேயாவது நின்று என்னைப் பார்ப்பாள்.

அன்றொரு நாள் மாலை நேரம் நான் காமினியுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

"உங்களுக்கு எங்கே வேலை கிடைத்தது!" என்று கேட்டாள்.

"பெரிய கம்பெனி ஒன்றில்."

"பெரிய கம்பெனி என்றால் உயர்ந்த பதவியா!"

"ஆமாம் உயர்ந்த பதவிதான்! நான் மேலிருந்து கொண்டு இழுப்பேன்......" என்றேன். இதைச் சொல்லிவிட்டு அந்த மனிதர் தம்முடைய கரகரப்பான குரலில் கல கலவென்று சிரித்தார்.

"ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்!" என்று அந்த மனிதரைப் பார்த்துக் கேட்டுவைத்தேன்.

மீண்டு ஒரு முறை சிரித்துவிட்டு அந்த மனிதர் பதில் சொல்ல ஆரம்பித்தார்:

உண்மையில் எனக்கு எந்தக் காரியாலயத்திலும் வேலை கிடைக்கவில்லை; ஒரு மரத் தொட்டியில் மரம் அறுக்கும் வேலைதான் கிடைத்தது.

முதலில் பல காரியாலயங்களில் ஏறி இறங்கி விட்டுக் கடைசியாக ஒரு மரத் தொட்டிக்கு வந்து வேலை கேட்டேன்.

அவர் எடுத்த எடுப்பிலேயே "உனக்கு மரம் அறுக்கத் தெரியுமா!" என்றார்.

"இல்லை......வந்து......நான் பி. ஏ. வரைக்கும் வாசித்து இருக்கிறேன்."

"அது கிடக்கட்டும். நீ மரம் அறுக்கிறாயா மரம்! மரம் அறுத்தால் ஒரு நாளைக்கு ஒன்றேகால் ரூபாய் தருவேன்!" என்று அழுத்தம் திருத்தமாக அடித்துப் பேசினார்.

ஒரு கணம் யோசித்தேன்; மறு கணம் அந்த வேலையை ஏற்றுக் கொண்டேன்.

அன்று முதல் நிரந்தரமாக மரம் அறுக்கும் வேலை நிலைத்துவிட்டது. நான் மேலிருந்து இழுப்பேன். மற்றொருவன் கீழிருந்து இழுப்பான்.

நண்பரே! உண்மையில் நான் உடல் வணங்கி வேலை செய்வதில் ஒரு சாந்தியைக் கண்டேன். என் நெற்றி வியர்வை நிலத்தில் விழும்போது உழைக்கிறோம் என்ற பெருமையில் என் உள்ளம் பெருமிதம் கொண்டது.

ஆனால் இந்த விஷயம் காமினிக்குத் தெரியாது. எப்படித் தெரியும் நான்தான் தினம், தினம் மடிப்புக் கலையாமல் உடை அணிந்து கொண்டு பெரிய உத்தியோகஸ்தர் மாதிரி அவளிடம் போகிறேனே.

இந்த நிலைமையில்தான் ஒரு நாள் காமினி அப்படிக் கேட்டு விட்டாள். என்னை அறியாமல் நான் "உம்! மேல் பதவிதான்! நான் மேலிருந்து இழுப்பேன்" என்று சொல்லி விட்டுச் சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டேன்.

"என்ன மேலிருந்து இழுப்பீர்களா!" என்றாள் ஆச்சரியத்துடன். இதற்குள் நான் சமாளித்துக் கொண்டு, "உம் வந்து, வந்து நான் தலைமைக் குமாஸ்தா! என் கீழ்ச் சிப்பந்திகளை நான் என் வசமாக்க மேலிருந்து இழுக்க வேண்டு மல்லவா!" என்று சொல்லி வைத்தேன்.

காமினி சிரித்துக் கொண்டே என்னிடம் பேச ஆரம்பித்தாள். சட்டென்று எதையோ பார்த்துத் திடுக்கிட்டாள். தூரத்தில் அவள் சகோதரன் எங்களை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது.

"பிறகு சந்திக்கலாம். இப்பொழுது போய் வாருங்கள்" என்று சொல்லி விட்டு அங்கிருந்து எழுந்து அவசரமாகச் சென்றாள் காமினி.

என் உள்ளம் கன்றி விட்டது. நண்பரே! அன்று முதல் ஒரு மாத காலம் வரையில் என் காமினியைப் பார்க்க முடியாமலே போய் விட்டது. எவ்வளவு முயன்றும் முடியவில்லை.

சோர்ந்து விட்டேன். வேலைக்குப் போக விருப்பம் இல்லாமல் வீட்டிலேயே அடைந்து கிடந்தேன். அப்பொழுது காமினியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதை அடக்க முடியாத ஆவலுடன் படித்துப் பார்த்தேன். அதில் தனக்கு அடுத்த வாரம் திருமணம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறதாயும் இருந்தாலும் அதிலிருந்து




நம்பிக்கைக்கு
உகந்தது

# சோஹல்

சொறி, சிரங்கு, பருக்கள்,
நமைச்சல், கட்டிகள்,
ஆகியவற்றிற்கு சிறந்த
நிவாரணி.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :
**பாரத் டிரக் ஹவுஸ்,**
**மதுரை**

BDZ-15 TM

*சென்னை நகரம், செங்கல்பட்,
வட ஆற்காடு, தென் ஆற்காடு
முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள் :*

**மெஸர்ஸ். எஸ். & எல். கம்பெனி**

*செம்புதாஸ் தெரு, மதராஸ் - 1*







"ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை"
**1 மண்டலம் (48 நாள்)**
**பூஜை செய்தும்**
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5—12—0 மணியார்டர் செய்யவும். டீ தொகை, வெள்ளி, விளம்பரம், தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளி நாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. P. கிடையாது. (4) அநர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

★

கோட்டமநுார்,
**ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்,**
அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)



"டிரைவர், டிரைவர்! காரை இவ்வளவு வேகமாக ஓட்டாதே! எனக்குப் பயமா யிருக்கிறது!"

"நீங்கள் தானே சீக்கிரமாக ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் என்னைச் சேர்க்கணும் என்று சொன்னீர்கள்?"

"அது சரி, அப்பா! ஆனால் அங்கேயே தான் தங்கிவிடப் போவதாகச் சொல்ல வில்லையே!"

---

விடுபடுவதற்கு ஒரு மார்க்கம் இருப்பதாகவும் எழுதி யிருந்தாள். அது எவ்வளவு கஷ்டமான மார்க்கமா யிருந்தாலும் உயிருக்கே அபாயம் தரக் கூடியதா யிருந்தாலும் அதற்கு உடன்படுவது என்று தீர்மானித்துக் கொண்டேன். மேலே கடிதத்தைத் தொடர்ந்து படித்தேன். கல்யாணத்துக்கு முதல் நாள் தன் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் தோட்டத்தில் நான்கு மின்சார விளக்குகள் பொருத்திய கம்பத்துக்கு அருகில் இரவு இரண்டு மணிக்கு வந்து சந்திக்க வேண்டும் என்றும் அப்பொழுது மேலே என்ன செய்வது என்பதைப் பற்றி தெரிவிப்பதாகவும் எழுதி யிருந்தாள். நான் புத்துணர்ச்சியுடன் அந்தக் கடிதத்தை ஒவ்வொரு நாளும் படித்தேன். கடைசியில் அவள் குறிப்பிட்டிருந்த அந்த நாளும் வந்தது.

பொழுது புலர்ந்தால் அவளுக்குத் திருமண தினம்! அன்று இரவு என்னை ஆயத்தம் பண்ணிக் கொண்டேன். ஒன்பது மணிக்கே அவள் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று விட்டேன்.

பத்து, பதினொன்று என்று அடித்த மணி கடைசியில் 'டாண் டாண்' என்று இரண்டு முறை அடித்தது ஓய்ந்தது. நான் சுற்று முற்றும் கூர்ந்து பார்த்தேன், ஒருவரையும் காணவில்லை. மணி மூன்று அடித்தது. நாலும் அடித்தது, ஆறும் அடித்தது. சூரியனும் வந்து விட்டான். ஆனால் அவள் வரவில்லை. என் காதல் தெய்வம் வரவில்லை! அவள் வரவேயில்லை.

மணிகள் மட்டும் ஓயாமல் அலுப்பு சலிப்பின்றி அடித்துக் கொண்டே யிருந்தன.

"வருஷங்களும் பத்தாச்சு நண்பரே! அவள் வரவே யில்லை!" என்று முடித்தார்.

அவர் கண்களில் நீர் சுரந்து நின்றது. தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

எனக்கும் கண்கள் கலங்கி விட்டன. கொஞ்ச நேரம் ஆடாமல் அசையாமல் மௌனமாக வீற்றிருந்தார். ஒரு வேளை பழைய சம்பவங்கள் நினைவுக்கு வரலாம் அல்லவா?

திடீரென்று என் பக்கம் திரும்பி "கயவஞ்சகக் காரி! என்னை மோசம் செய்து விட்டு வேறொருவனோடு கலியாணம் செய்து கொண்டு போய்விட்டாள். ஓடி விட்டாள்!' என்று பயங்கரமாகக் கூச்சலிடத் தொடங்கினர்.

நான் என்ன செய்வதென்று தெரியாமல் அவரையே விழித்துப் பார்த்துக்கொண் டிருந்தேன்.

இதற்குள் எங்கேயோ மணி அடிக்கும் சத்தம் கேட்டது. அந்த மனிதர் "ஒன்று! இரண்டு! என்று வாய்விட்டு உரக்க எண்ணினர். பிறகு "ஐயய்யோ, மணி இரண்டு அடித்து விட்டதே! என் காமினி எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். காமினி, காமினி! இதோ, இதோ வந்து விடுகிறேன்! என்று சாத்தி யிருந்த கதவைத் திறந்து கொண்டு தலை தெறிக்க ஓடினார்.

நான் சுய உணர்வு பெற இரண்டு நிமிஷங்கள் ஆயின. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டேன். உடலெல்லாம் வியர்த்து இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன் பேப்பரில் 'உலர்ந்த நெஞ்சம்' என்று தலைப்பு எழுதி வைத்திருந்தது தெரிந்தது.

மூளை இன்னும் குழம்பி விட்டது. நான் கற்பனை செய்தேனா, தூக்க மயக்கத்தில் கனவு கண்டேனா? அல்லது உண்மையாகவே ஒரு உலர்ந்த நெஞ்சம் வந்து என்னை ஆட்டி அலைக் கழித்து விட்டுச் சென்றதா என்று ஒன்றும் விளங்கவில்லை.

வட்ட மேஜை

# புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குரல்

22-3-53 "கல்கி" யில் புதுக்கோட்டைக்குப் புத்துயிர் கிட்டுமா! என்ற தலைப்புடன் வந்த தலையங்கத்தைப் படித்தேன். ஏன் கிட்டாது, தமிழ் நாட்டின் தனிப்பெரும் தலைவரும் அரசியலில் அதி மேதையுமான ராஜாஜி நமது மாகாணப் பிரதமராக இருக்கும் பொழுது, பல கஷ்டமான பிரச்சினைகளுக் கிடையில், அவர் கருணை வைத்தாரானல், புதுக்கோட்டைக்கும் புத்துயிர் கிட்டும்; இராமநாத புரத்தின் தலைநகர் எங்கு வைப்பது என்ற பிரச்சினையும் தீரும். முக்கியமாக எனது ஊரின் நிலையைப் பற்றிச் சொல்லுகிறேன். பி. அலகாபுரி, கீழச் சிவல்பட்டி என்று இரு பகுதிகளாக இருக்கிறது. பி. அலகாபுரி புதுக்கோட்டை டிவிஷனைச் சார்ந்தது. (திருச்சி ஜில்லா) கீழச் சிவல்பட்டி, ராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்தது. தபாலாபீஸைத் தவிர, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், பஞ்சாயத்து போர்டு, பஸ் ஸ்டாண்டு, மின்சாரம், ஆகியவைகள் எல்லாம் இரண்டுக்கும் தனித் தனியாக இருக்கின்றன. இரண்டு ஊர்களுக்கும் பக்கத்தில் சிறிய பெரிய கிராமங்கள் இருக்கின்றன. ஆறு வருடங்களாக மழை இல்லாமல் வேறு இந்தப் பகுதிகளில் இருக்கும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏரிகள் வறண்டு விட்டன. குடி தண்ணீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். கிணறுகளில்கூட தண்ணீர் கிடையாது. இந்நிலையில் இரு ஊர்களையும் ஒன்றாக இணைத்து ஒரு ஜில்லா நிர்வாகத்தின் கீழ் இருந்தால், நிர்வாகத்தில், சிக்கனமும், மக்களுக்கு வேண்டிய நன்மைகளும் செய்யலாம். இச் சந்தர்ப்பத்தில் தங்கள் பத்திரிகையின் தலையங்கம் பாலைவனத்தில், தண்ணீர் கண்டது மாதிரி இருக்கிறது. தங்கள் அபிப்பிராயப்படி சில ஊர்களை மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் இணைத்து, இராமநாதபுரத்தின் தலைநகரைப் புதுக்கோட்டையில் வைத்தால் தலைநகரப் பிரச்னையும் தீரும். புதுக்கோட்டையும் தன்னுடைய பழைய செல்வாக்கை மீண்டும் அடைந்து உன்னத நிலைமைக்கு வரும். இதுவே புதுக்கோட்டை மாவட்ட மக்களின் ஏகோபித்த குரலாக இருக்கும்.

பி. அலகாபுரி, புதுக்கோட்டை டிவிஷன், திருச்சி ஜில்லா.

கே. எஸ். எஸ். நாராயண ஐயர்.

---


Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras

# "எனக்குத் தெரியும்


## லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்தையும் எழிலோங்கச் செய்யுமென்று."

இவ்வாறு கூறுகிறார்

## வனஜா



வனஜா கூறுவதாவது:
" இந்த சுத்தமான,
வெண்மையான சோப்
என் சருமத்திற்கு அளிக்
கும் நறுமணத்தை நான்
மிகவும் விரும்புகிறேன்.
சோபைமிக்க சரும
அழகைப்பெற நான் செய்வது
போல் நீங்களும் செய்யுங்கள்.
உங்கள் சருமத்திற்கு லக்ஸ்
டாய்லட் சோப்பின் தினசரி
பாதுகாப்பை அளியுங்கள்."




# லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

.LTS. 371-X30 TM

REGD. No. M. 4393
Registered as a newspaper in Ceylon

# டால்டா வனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது



நான் எப்பொழுதுமே
டால்டாவையே
வாங்குகிறேன்.
அது காற்றுப்புகாத
டின்னில் எப்பொழுதும்
புதிதாகவும்,
சுத்தமாகவும்,
ஊட்டமளிப்பதாகவும்
இருக்கிறது.

**பள்ளிசெல்லும் சிறுவர்களுக்கு
பிரத்தியேக உணவுகள் தேவையா?**
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—
அல்லது என்று வேண்டுமானாலும்
—எழுதுங்கள்:
**தி டால்டா அட்வைஸரி ஸர்விஸ்**
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

தரத்திற்கு டால்டா நிகரற்றது. டால்டா கைபடாமல் மிகவும் சிறந்த மூலப்பொருள்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. டால்டா எப்பொழுதும் சுத்தமாகவும், புதிதாகவும், ஊட்டமளிப்பதாகவும் காற்றுப் புகாத சீல் செய்த டின்னில் உங்களுக்குக் கிடைக்கிறது. மேலும் இது சிக்கனமானதும் கூட.




# டால்டா

10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது

HVM. 189-50 TM